800

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதினேழாம்போரென்னும்

# கர்ணமோக்ஷ நாடகம்.

இஃது,

[illegible]த்தூர்-வரதராஜுலுநாயகரால்

இயற்றப்பட்டு,

ஆரணி-சஞ்சீவி செட்டியாரால்

கொடுக்கப்பட்ட பிக்காடகத்

சூளை - சுறைபாக்குட்டை வீதி,

**முனிசாமி முதலியார்**

சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

ரிஜிஸ்டர்செய்து,

சென்னை, பெரியமேட்டு

மதராஸ் டைம்ஸ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

Registered Copy-Right.

இதன் விலை 9 5 0

அணா

800/15/-/10

24 DEC

MADRAS

3 2
894-8112
1826
OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 24 DEC 1910 MADRAS

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பதினேழாம்போர்

என்னும்

# கர்ணமோக்ஷ நாடகம்.

விநாயகர் காப்பு.

அல்லல்போம் வல்வினைபோம்
அன்னைவயிற்றிற்பிறந்த தொல்லைபோம் போகாத்துயரம்
நல்லகுண மதிக மாமருணை [போம்
செல்வக்கணபதியே கைதொழுதேன் கால்.

சரஸ்வதி துதி காப்பு.

கன்னைவாரமல்க[illegible]ம் சரஸ்வதிதாயேபோற்றி
திங்களின்குலத்துதித்த திரடோள்ளகர்ணன்சண்டை
பொங்கமாய்பாடவென்று போற்றினேன்அம்பாள்பாதம்
மங்களமாகவந்து மதிவிளக்கிடுவாய்போற்றி.



விநாயகர் வருகிற விருத்தம்.

திருவருள்[illegible]த்தநாட்டில் திங்களுமாரிபெய்து
அருமறையோமம்வேள்வி அனுதினம்யோங்கும்தர்பம்

பெருகியே அஸ்தினு புரம்நகர் தனிலேவாழும்
கரிமுகமுடையசெல்வக் கணபதிவருகின்றாரே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக துரியோதனன் அரசு செய்து வாநின்ற அஸ்தினுபுரிபட்டணத்தில் விளங்கி யிராநின்ற விக்கி னேஸ்வரர் சபைக்குவருகிற விதங்காண்க.

விநாயகர்வருகிற தரு.

மான்மழுதரித்தயீசன் மைந்தன்மூஷிகரான
ஆனைமுகவர்வந்தார் அஸ்த்தினுபுரம்
ஆனைமுகவர்வந்தார்
ஆனைமுகவர்வந்தார் அன்பன்திருமுடைய
தினரக்ஷகரான தேவிவல்லபையுடன் - சரு
சீனிபலாக்கனி தேனமுதுண்டவர்
ஞானவிநாயகர் தீனதயாபரர். (மான்)

தொந்தியயர்குலுங்க [illegible]முப்புரிநூலும்
விந்தைதனைத்தரித்தவர் வேண்டும்வரங்கொடுக்க
னந்தன்மருகனவன் விந்தையதாகவே
மந்தாரைமல்லிகைமுல்லை மாலைமார்பிலணிந்து
அல்லல்வினையகற்றும் ஆயன்மருகரான - சரு
நல்லகுணமுடைய வல்லபைநாயகன
அல்லல்வினையகற்றும் ஐங்கரநானவன். (மான்)

அத்திநகரில்மேவும் சித்திவிநாயகர்
மூத்தியளிக்குமந்த முருகனுடன்பிறந்த
தத்திமடக்கிடும் மத்தளிவயத்தோலும்
தித்திமிதோவென செல்வவிநாயகர்

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக விக்கினேஸ் வரர் கொலுவிலிருக்கும்போது அஸ்தினுபுரிபட்டணம் வாசல் காக்காநின்ற கட்டியக்காரன் வருகிற விதங்காண்க.



கட்டியக்காரன் வருகிற-விருத்தம்.

உலகுதனில்கெடிபெற்ற கெம்பீரதீரனும்
ஐய்ந்தமுடி தரித்தராஜன்
பிலமுடைய துரியன்வர ஆசாரவாசல்மனை
பிரியமாய் காக்கும்வீரன்
அலைகடலைபொடிசெய்ய கத்திகேடயங்கொண்ட
ஆங்கார திரன
ன்புடனே கட்டியன் தெம்புடனேசபைதனி
யின்பமாய் வருகின்றனே.

கட்டியக்காரன் வருகிற-தரு.

சட்டியக்கா னும்வந்தானே அதிவிதறெணகுணமுள்ள
கட்டி ம்வந்தானே
க யக்கா னும்வந்தான் திட்டமாய்துரியன்வாசல்
அஷ்டதிக்கு ளோர்கள் மெச்சவேபதிகார
கட்டியக்காரனும்வந்தானே

நாமங்களிட்டுபெருத்த பாகையுங்கட்டி
திட்டமாய்ஆஸ்தானம் சிருடன்கார்க்கின்ற (கட்)

பொது விருத்தம்.

சந்திர குலத்துதித்த தனபதிதிருதராஜன்
மைந்தனும்துரியராஜன் மன்னவர்கொலுவாய்திரும்
விந்தையாய்மண்டபத்தில் விளங்கிடவென்றுராஜன்
பக்தமாய்மந்திரியோடு பண்புடன்கொலுவிலவாரான்.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் ராஜாதிராஜனுகிய திருதராஷ்டிர மகாராஜன் குமாரனுகிய துரியோதன மகாராஜன் மந்திரிப் பிரதானிகளோடு கொலுமண்டபத்திற்கு வருகிற விதங்காண்க.



திரியோதனன் வருகிற-தரு.

ராஜராஜாக்குமகல்ல் ராஜன் துரி[illegible]ன்மகா
ராஜன்கொலுவாகினுன்
தேசத்திலக்கன அஸ்தின[illegible]கொரு
தீரன்கொடிபெற்ற உல்[illegible]சதீரன் (ரா)
இந்தவுலகெங்கும் ஜுளமு[illegible]தமதன்
எவருங்கண்டடிதொழுவே

சிந்தைமகிழ்ந்துடானும் செய்தேனரசுயன்பாய்
சிறுமையெப்போது மரியேன்-சரு
விந்தையதாகவே சிந்தைநடுங்கிட
எந்தனரசுக்கொரு நிந்தனைவந்ததே (ராஜ)

பதினேழாம்நாளினில் பஞ்சபாண்டவர்களை
பாரில்விழவுமடிப்பேன்
செரிகலங்கிடயந்த குந்தமாதேவிமக்கள்
நிகரிலாகெர்வத்தையு மொழிப்பேன்-சரு
மதகிரிபிமனை ஈதைனை விடுக்குறேன்
அதோகெதியாகவும்வதைபடசெய்குவேன் (ராஜ)

பொது விருத்தம்.

பாஞ்சாலன்யின்ற துஷ்டதூய்மனோடே
பகையாகிதுரோணரும மெதிர்த்துயுத்தம்
அஞ்சாமல்போர்செய்து பதினறும்நாள்
அய்யரவர்மூர்ச்சையாய் பாரில்வீழ்ந்தார்
வஞ்சனைகள்கதிரோனும் கண்ணில்பார்க்க
வழங்காமல்மேல்திசையில் மறைந்தாரென்று
நெஞ்சளிக்கும் அரவமதுபோலேசிரி
துரியனவன்கூடாரந் தனில்சென்றானே.

பொது வசனம்.

இவ்விதமாக பாண்டவர்களை யெதிர்த்து யுத்தஞ்செய்து துர்ச்சாதனன் இன்னம் யென்தம்பிமார்களும் ரதகஜதுரகப்தாதிகள் சகல சேனைகளையும் பாண்டவர் மூர்ச்சையாகும்படி செய்ததும் பாஞ்சாலன் புத்திரனாகிய துஷ்டத்துய்மனனவன் துரோணாச்சாரியரை பதினறும் நாள் மூர்ச்சையாகும்படி செய்தபின்பு சூரியபகவான் மேற்கு திசையில் மறைந்துவிட்டார் துரியோதனனும் பாடி கூடாரம் வந்து கர்ணமகாராஜனை யுத்தத்துக்குப்போக அழைக்கிற விதங்காண்க.

பொது விருத்தம்.

பரிதியின்புதல்வன்தானும் பரமனைத்தியானஞ்செய்து
இரதமுடனகயுமாவும் இயலுடன்கூட்டிக்கொண்டு
துரியன்வாழ்கூடாரத்தில் துருசாகர்ணராஜன்
பிரியமாய்படையைக்கூட்டி புகழுடன்வருகின்றானே.

பொது வசனம்.

இவ்விதமாக பருதியென்கிற சூரியனுட குமாரனுகிய கர்ணமகாரா ஜன் ரதகஜ தூரகபதாதிகளுடனே துரியோதன மகாராஜன் பாடி வீடா ரத்துக்கு வருகிற விதங்காண்க.

கர்ணராஜன் வருகிற-தரு.

கதிரவன்பின் றமைந்தன் அதிசயில்லுடைய
கர்ணராஜனும்வந்தான்
மணிக்கதிக்கும்கக்குண நிதிக்குமிவனென-கர்ண
கவிஞர்களும்பாட களத்தருடைகவிய
கவரிசாமரைபோட்டவே
மெய்யில்திருநாமங்கள் விளங்கிடப்பணியும்
மேன்மையாகவேபூண்டு சுருள்

மேதினியோர்களும் வீசிடசாமரை
மாதவராகிய வேதியர்சூழ்ந்திட, (கதிரவ)

ஒத்துமத்தளதாளம் ஒருமித்தடிமுழங்க
ஒப்பில்லாசங்கீதம்பாடவே
துத்திராககசரமேளம் தவண்டைமல்லாரிகொட்ட
துஞ்சாவெக்காளமூதவே சுருள்

தித்திமிதிமியென தாளமுழங்கிட
மத்தளமுகவீணை ஒத்துகலந்திட, (கதிரவ)

சுரதந்தங்கள் மீட்டி சொகுசாய்சங்கீதம்பாடி
சரசமாதர்களாடவே
பரதநாட்டியமாட பல்லாண்டிசைகள்பாட
பாரிலுள்ளோர்கள்கண்டுமெச்சவே சுருள்

சரசமாதரும் வரிசையாகவே
பரதநாட்டியம் யெதிரிலாடிட (கதிரவ)

கேட்டபொருளளிக்கும் கொடைபெற்றகர்ணனென்றும்
கீர்த்திமிகவுமடைத்தேன்
வாட்டமுடன்யெளியோர் வருந்தியெனையழைக்கினும்
வண்மையாய்நான் தருவேன் சுருள்
கேட்டப்பொருள்களையும் தாட்டியமாகவே
வாட்டமாகவும் வழங்குவேனென, (கதிரவ)

கர்ணன்சொல் விருத்தம்.

பெருந்திருவாள் மாலையிட்ட மன்னர்மன்னா
பேர்பெற்று வுலகாண்ட துரியராஜன்
வருமையாய் மனக்கவலைக் கொண்டுயென்னை
வரவழைத்த சேதியைநா னறியயிப்போ
மர்ம்மமா யின்னதென்று யெந்தனோடே
மன்னவனே யொருமொழிக ளுரைத்தாயானால்
கர்ணனும்நான் யினிசும்மா யிருக்கலாமோ
கருத்தறிய வழங்குவீர் துரியமன்னா.

கர்ணன்சொல் வசனம்.

கேளும் துரியோதன மகாராஜனே செந்தாமரை புஷ்பம் போல் விளங்கியிராநின்ற உன்னிட முகாரவிந்தமானது வாடியிருக்கவேண்டிய தென்ன தெரியச் சொல்லும் துரியோதன மகாராஜனே;

துரியோதிரன் சொல்-தரு.

என்னசெய்குவோம்கர்ணா யிந்தகெடுமதிக்கி
பின்னப்படயெனக்கு விதியாச்சே
முன்னேபெரியோர்சொல்லும் மொழியைக்கேளாமலிந்த
மண்ணில்மடிந்தாவிழ நாளாச்சே
வஞ்சகனான அந்த னந்தகோபாலகிருஷ்ணன்
நெஞ்சில்நினைத்தபடி செய்திடுவான்
பஞ்சப்பசங்களவர் யிடையன்பலத்தால்வீமன்
அஞ்சாமல்சேனையெல்லாம் மடித்துவிட்டான்
அரவக்கொடியனுத்து அதம்செய்து அந்தகிருஷ்ணன்
முரசக்கொடிவிளங்க செய்திடுவான்
இரவில்தரியாய்வந்து யிருவருயிரைவாங்க
எண்ணங்கொள்ளுவானந்த மாதவனும்
பதினேழாம்நாளினில் கர்ணாநீயாதவனை
சனைதனைவிடுத்தியானால் உலகாளலாம்
உதையமரவனுமுன்னே கெதைகொண்டவீமனையும்
அதம்செய்யாவிட்டாலுயிரை போகிடுவான் (என்)

துரியோதனன் சொல்-திபிதை.

என்னுடனாகச்செய்யும் யெழிலுள்ளகர்ணாகேளும்
பின்னமாய்துரோணர்தன்னை புகலுள்ள துஷ்டத்தாய்மன்

நிண்ணயமாகமூர்ச்சை நேர்ந்திடச்செய்தான்பாவி
வண்ணமாரயைவர்சேனை வாரிபோரிட்டுவாராய்.

### துரியோதனன் சொல்-வசனம்.

கேளுமப்பா கர்ணராஜனே பதினாறும்நாளை யுத்தத்தில் பாஞ்சாலன் குமாரனாகிய துஷ்டத்துய்மன் நம்மிடகுருவாகிய துரோணாச்சாரியர் மூர்ச்சையாகும்படி செயதுவிட்டான் இன்னம் ரதகஜதுரக பதாதிகளெல்லாம் வீமனனவன் மூர்ச்சையாகும்படி செய்து விட்டான் பதினேழாம்நாள் பரிதியென்கிற சூரியபகவான் உதையமாகுதற்கு முன்னமே ஜெயம்பெற்று வருவாயென்று வேண்டிக்கொள்ளுகிறேன் மகாராஜனே.

### கர்ணன் சொல்-தரு.

பதிமூன்றுவருஷமாய் காட்டினில்களிபொசித்து
பஞ்சபாண்டவருக்கு பயந்துநான் வருவேனோ
சதிசெய்யவேணுமென்று வந்தானே மாயகிருஷ்ணன்
சமர்த்தைநானறியாமல் விடுவேனோயினிசும்மா
அதிவீரனென்றுவந்த அர்ச்சுனன்மேலெந்தன்
அரவபாணத்தைவிட்டு அருக்காமல்விடுவேனோ
மதிகுலத்திலுதித்த மன்னநரேந்தனுக்கு
மனதார்விடைதருவீர் போய்வாரேன்யுத்தஞ்செய்ய(பதி)

### கர்ணன் சொல்-விருத்தம்.

ஆண்டவனுத்தியாலே அமர்செய்யயேகியானும்
பாண்டுவின்புதல்வனான பார்த்தனைன்தன்னையெந்தன்
நீண்டதோர்பாணத்தாலே நிலைகலங்கிடவேசெய்து
மூண்டுநான்வருவேன்மன்னா விடைஎனக்கருளுவீரே.

### கர்ணன்சொல்வசனம்.

வாரும் துரியோதன மகாராஜனே பாண்டு புத்திரனாகிய கிரீடியென்கிற அர்ச்சுனனை பதினேழாம்நாள் சூரிய உதையமாகுறதற்கு முன்னமே என்னிட நாகாஸ்திரத்தினாலே சிரஞ்சேதிக்காவிட்டால் நான் கர்ணனல்ல நீர் சற்றுநேரம் பொழுதுவிடிகிறவரையில் நீர் மஞ்சத்தையில் பள்ளிகொண்டு இருமென்று தன் மனைவியாகிய பட்டபஸ்திரீயை வரவழைக்கிற விதங்காண்க.

பொன்னுரிவி வருகிற விருத்தம்.

சுந்தரமுள்ளமாது தோகைமாரதியும்மெச்ச
அந்தமாய்பணிதிபூண்டு ஆடையுமலங்கரித்து
சந்தனம்புனுகுபன்னீர் தாளினில்சிலம்பொலிக்க
விந்தையாய்பொன்னுரிவிமாது விநோதமாய்வருகின்றாளே.

பொது வசனம்.

இவ்விதமாக பொன்னுராஜன் குமாரத்தியாகிய பொன்னுரிவி அம்மன் சகல ஆடம்பரத்துடனே ரம்பை திலோத்தமையூர் வசிரதிதேவி யிவருக்கு அதிகமாய் ரூபசவுந்தரியமும் மின்னலைப் போலொளிவும் விளங்கியிராநின்ற பொன்னுரிவியம்மன் சபா வாகிய பஞ்சணைக்கு வருகிற விதங்காண்க.



பொன்னுரிவி வருகிற தரு.

திவ்யபரிமள ஜெகன்மோகனமுள்ள
தேவிபொன்னுரிவிவந்தாள் ஒய்யாரமாது
தேவிபொன்னுரிவிவந்தாள்
சந்திரனொளியைப்போலே வைதயஸ்முகம்துலக்க
சுந்திரமுடையமாது சொகுசாய்பணிகள்பூண்டு - சுரு
சுகந்தபலிதவித சரசலவிதகுண
பாசமுடனதிக தோழிகவரிவீச (திவ்ய)
சந்தணம்புனுகணிந்து சாந்துசவ்வாதுமிட்டு
கெந்தப்பரிமள முகர்ந்துமிகவணிந்து - சுரு

2

கெந்தகதம்பமது விந்தையுடனணிந்து
அந்தமுடையதாதி பந்தமுடனருகில்வர (திவ்ய)
தங்கபொட்டியாணமின்ன சரிகைசேலையுடுத்தி
திங்களபிறைபோலேநெத்தில் இலர்தசெந்தூரமிட்டு - சரு
தகதகஜெகணக ததிமிதகிடதக
அதிவிதசுந்தர மதிமுகமுடையவள் (திவ்ய)
கடகங்கணம்ரெண்டும் கையில்பளபளென்ன
மடமயிலன்னம்போல் மாதுநடைநடந்து - சரு
மங்கையவளும்வெகு பொங்கமுடனேவர
திங்களொளிவைப்போல் மங்களமாகவும் (திவ்ய)

பொன்னுருவிசொல் விருத்தம்.

பொன்னுருவி யிரவிதனில் பள்ளிசேர்ந்து
பொருந்தவே மஞ்சத்தின் மீதிலேதான்
மின்னலைப்போல் வொளியுள்ள சுந்ரவல்லி
மேன்மையுடன் யிருவருமாய் இருக்கும்போது
பின்னமுடன் பிசகான அசரிவாக்கு
பிரியமுட னென்செவியில் கேழ்க்குதென்று
வண்ணமுள்ள சுந்தரமே யென்தாய் வீட்டில்
வகைமோசம் யெதுவருமோ அறிகிலேனே.

பொன்னுருவி சொல் வசனம்.

கேளும் யென்தோழியாகிய சுந்தரவல்லியே இருவரும் மஞ்சத்தில் உட்கார்ந்து தாம்பூலமரிந்து யிருக்கிறகாலத்தில் யேதோ விபரீதமாகிய ஒரு அசரீரவாக்கியம் என் செவியில் கேழ்க்க கூவினது உன் செவியில் கேழ்க்கவில்லையோ என் தோழியாகிய சுந்திரமே.

தோழி சொல் திபிதை.

பஞ்சணைமீதிலுந்தன் பக்கத்திலிருந்துமென்ன
வஞ்சனையாகச்சொல்லும் வகையுள்ள அசரிவாக்கு
கிஞ்சிதம்யென்செவிக்கு கேழ்க்கவுமில்லையம்மா
பஞ்சையுன்னடியாளுக்கு பகர்ந்திடவேணுந்தாயே.

தாதிகள்சொல் வசனம்.

வாருமம்மா பொன்னுருவி தாயமே உனக்குத்தோழியாக நானுமிருந்து யென்ன பலனுச்சுது அவலட்சணமாகிய அசரீரவாக்கு யென் செவியிற்

கேளாமல் போய்விட்டதே இப்பவும் அடியாளுக்கு விபரமாய் தெரிவிக்க வேணும் பொன்னுருவி நாயகமே.

பொன்னுருவி சொல் தரு.

சந்திரம்நான்யென்னசொல்லுவேன் அசரீரவாக்கு
தோழியேநான் யென்னசொல்லுவேன்

சந்திரமேயென்றுசொல்வேன் சொர்ப்பனங்கண்டதுபோல
விந்தைபாயென்செவிகேழ்க்க விளம்பியவசனத்தை (சந்)

தாய்தந்தைமார்க்கென்ன தவருதலாகுமோ
தீக்கொண்டுமீட்டினைப்போல் திரேகம்யெறியுதடியம்மா (சந்)

என்னமோயிருந்திருந்து யென்னுடல் பதருதடீ
அண்ணன்தம்பிமார்களுக்கு அவதிவந்துசேர்ந்திடுமோ (சந்)

நானேடபடிகளத்தில் நவரத்ன ஆபரணம்
மாலைவரிசையுடன் வருமென்றுரைத்ததடி (சந்)

பொன்னுருவிசொல் திபிதை.

அசரீரியுரைத்தவாக்கு அருவையே சொல்வேன்கேளாய்
நிசமதாய்படிகளத்தில் நிகரிலாவரிசைமாலை
வசமுடன்வரும்பாரென்று வண்மையாயுரைத்ததிப்போ
திசையாண்டதந்தைக்கென்ன தீவினைவருமோ அம்மா.

தாதிசொல் - வசனம்

கேளடியம்மா யென்தோழியாகிய சந்தரமே பெரியவாள் சொல்லும் பழமொழிபடிக்கி யென்பின்னால்னின்று ஸ்திரீகள் வசனிக்கிறதுபோலே அசரீரவாக்குபூதுக்கினது யென்ன வென்றால் நாளேபடிகளத்தில் மாலைசேலை ஆபரணம் யின்னம் அனேகவரிசைகள் யெடுத்து வருவார்களென்று கூவினதுபோலே யிருந்தது யென் தாய்வீட்டுக்கு யென்ன தீவினையோ அரிகிலேனம்மா தோழிமார்களே.

கர்ணராஜன்சொல் - வசனம்.

ஆ ஆ வாருமப்பா சேர்வைக்காரா என்னிடபட்டபஸ்திரீயாகிய பொன்னுருவியை நீன் அழைத்து வரச்சொன்னதாக தோழிகளை விட்டு வரவழையும் பின்னாய் சேர்வைக்காரா.

சேர்வைக்காரன்சொல் – வசனம்.

அப்படியே யழைத்துவரும்படி திட்டம்செய்கிறேன் மகாராசனே.

தோழிகள் சொல் விருத்தம்.

அன்னமேதோழியானும் அரும்பதம்போற்றிதாயே
மன்னவன்கர்ணராஜன் மகிட்சியாயுனையழைக்கார்
வண்ணமாய்வருகவென்றால் வந்தேனாநடியாளம்மா
சொர்ணமேபெண்ணிதாயே சுருக்குடனெழுந்துவாராய்.

தாதிசொல் வசனம்.

கேளும்மா பொன்னுருவி நாயகமே உன்கணவனாகிய கர்ண்ணமகாராஜன் உன்னை அதிக சீக்கிரத்தில் அழைத்து வரச்சொன்னார் யெழுந்திரும் போய்வருவோம் பொன்னுருவி நாயகமே.

பொன்னுருவிசொல் தரு.

ஆரடியிவ்விடம்வந்துயென்னை வண்ணமுடனே
கூரியப்பயமில்லாமல்நின்று கிகடமாக
ஓடியென்முகத்துமுன்னே வந்து
நிண்ணயமாகப்பாகனும் அழைத்தானென்று
கூறியபயமில்லாமல் பேதடியெளிதாகவந்து
பேதமாயொருவசனம் நீதியாகசொல்லவந்தாய்
போதும்போதும் ஓடிநீபோடி

தாதிசொல் தரு.

பொன்னுருவிரத்தினமேதேனும் இருத்தமாக
மன்னவன்கர்ண்ணராஜன் உன்னையும்வருகவென்றார்
சொன்னமொழிதள்ளாமல்நான்வந்தேன் உள்ளபடிக்கு
திருசாயெழுந்துவாரும்போவோம் மன்னர்மொழிப்படிக்கு
பொன்னுருவிநடந்தால் விண்ணவர்பங்கஞண்டு
சொன்னமொழிதள்ளிடாதே பொன்னுருவிரத்தினமே

பொன்னுருவி சொல் விருத்தம்.

இழிவானகுலத்துக்கெல்லாம் யீனரும்தேர்ப்பாகன்தான்
அழைத்தாரென்றெந்தன்முன்னே அரிவையேயுரைத்தாயன்னை
கயத்தினுலிருக்கக்கட்டி கண்டிப்பேன்யிருக்கையாலல்
பிழைத்தோடிசொல்லாமற்றுன் போவதுமுறைமையெண்ணே.

பொன்னுருவிசொல் - வசனம்.

கேளடிபெண்ணே தாதியாகிய சந்திரமே ஜாதிக்கெல்லாம் இழிவான வன் தேர்ப்பாகன் அழைத்துவாசொன்னானென்று யேளெனை ஆங்காரங்கொண்டு யென்னைவாவென்று அழைத்தாய் இனியென்முகத்தின்முன்னே இருந்தாயேயானால் கயத்தினால் யிருக்கக்கட்டி உயிர்சேதம் செய்துவிடுவேன் ஓடிப்போய்விடுமென்று சொல்ல தோழியானவள் கர்ணனிடத்தில் சொல்லுகிறதிதங்காண்க.

தாதிசொல் தரு.

பொன்னுருவியருகேநான் போனதும்போதும்கர்ணராஜனே
புலியைப்போலசீறியென்மேல் கோபங்கொண்டனள்
அன்னமிதாவின்னமும் கொண்டுயென்னிடம் கர்ணராஜனே
அடிக்கவும்பிடிக்கயென்னை ஓடியேவந்தாள்
சொன்னமொழியின்னதென்று சொல்லுவேனானால்கர்ணராஜனே
தோழியால்கலகமென்று யாவரும்சொல்வார்
இன்னகுலமன்னவன்பேர் சொன்னியேயென்றுபொன்னுருவியும்
சிந்தையில்வருத்தங்கொண்டு தூஷணிக்கிறாள்

தோழிசொல் வசனம்.

சரணம் சரணமையா கர்ணமகாராஜனே உன்தேவியாகிய பொன்னுருவியம்மனை உங்களுத்திரவின்படிநான் அவ்விடஞ்சென்று அந்த அம்மனை வாவேண்டுமென்று நெருக்கி யுங்கள் நாமதேயத்தைசொன்ன மாத்திரத்திலே என்னைப்பிடித்து கட்டியடிக்கிறேனென்று யென்பேரில் கோபிக்கவும் நான் ஓடிவந்துவிட்டேன் கர்ணராஜனே.

கர்ணராஜன்சொல் திபிதை.

இன்னமோர்திரமுந்தோழி யியனுடனங்கேசென்று
மன்னவனுந்தன்கையில் வரிசையாய்தாம்பூலம்பெற்று
என்னிடகுலத்தோரான யெதிரியைஜெயிக்கவென்று
வண்ணம்புபொன்னியாளை வகையுடனழைத்துவாராய்.

கர்ணன்சொல் வசனம்.

வாரும்பெண்ணே சந்திரம் நீயென்தேவியாகிய பொன்னுருவியிடத்தில் சென்று பதினேழாம்நாள் யென்னிட தாயாதியாகிய அர்ச்சுனனை ஜெயிக்க வேண்டியிருப்பதால் உன்கை தாம்பூலம்பெத்துக்கொண்டு யுத்தத்திற்குபோக வேணுமென்று நான் சொன்னதாகசொல்லி அழைத்துவருவாயடி சந்திரமே

தோழிசொல் திபிதை.

அதிபதியானபொன்னி அம்மானியுந்தாதன்
பதினேழாம்நாளையுத்தம் பார்த்திபன்தனையெதிர்த்து
விதிவந்துநேர்ந்ததென்று விடைபெற்றுப்போகவென்றார்
சதிசெய்யவேண்டாமிப்போ சனுதியிலெழுந்துவாராய்.

தோழிசொல் வசனம்.

வாரும் பொன்னுருவிநாயகமே உன் கணவராகிய கர்ணமகாராஜன் தன் தாயாதிகளை யெதிர்த்து பதினேழாநாள் பருதியுதையமாகிறதற்கு முன்னமே யுத்தம்செய்ய போகவேண்டுமாம் அதற்காக உன் கைதாம்பூலம் பெற்றுக்கொண்டு போக வேண்டுமென்று உன்னை அழைத்து வரும்படியாய் என்னை அனுப்பிவைத்தார் யெழுந்திரும் போய்வருவோம் பொன்னுருவி நாயகமே.

பொன்னுருவி சொல் தரு.

வாரேனுன்போய்வருவோமம்மா வந்தவிதியிதுநானறியேன்
தேரேறியோட்டுகின்றயுத்த தேர்ப்பாகன்பெண்ணையுமாலையிட
நீராக்குறையெனக்குஅய்யன் செய்துவிட்டானடிதோழியரே
ஆராத்துயரமதுதோழி அமைத்துவைத்தானந்தவேதியனும்
நீதாகயசரதியும்பின்னால் செப்பினவார்த்தைகள்தப்பாமல்
ஏதோவசனமென்றுதோழி இயம்பிடவும்நான்வந்தனடி
சாதாரணமாகமன்னன் சமருக்குபோராதுமெய்யானால்
மாதேயடிதோழிதிரைமறைவாக நின்றுநான்பேசிடுவேன்

பொன்னுருவி சொல் திபிதை.

மாலையுந்தரித்தபின்னுள் மன்னவன்முகத்தையானும்
சாலவுங்கண்டதில்லைதையலென்தோழிகேளாய்
வேலைபோல்விழியின்மாதே விளங்கிடதிரையுநன்றாய
சீலமாய்போடவென்று தெரிவிப்பாய்தோழிமாரே.

பொன்னுருவி சொல் வசனம்.

இவ்விதமாக பிர்ம்மதேவன் விதிப்படிக்கி எனக் கந்நியையதில் மாலையிட்ட பின்னுள்வரையில் தேர்ப்பாகனென்ற மன்னவன் முகத்தை யான் பார்த்ததில்லையே ஏதோ பாண்டுபுத்திரான் மன்னவனுக்கு தாயாதியென்கிற வசனம் என்செவியில் கேழ்விப்பட்டபடியால் நான் யிவ்விடம் வந்து விட்டேன் முகமறைவாகும்படி திரையை வளத்திருந்தால் யென்னை [illegible]கையிருந்தபோதிலும் வசனிக்கலாமடி என் தோழியாகிய சகோதாய்.



கர்[illegible]ராஜன் சொல் தரு.

பெண்[illegible]னையழைத்த வண்[illegible]ம்கசன் சொல்லுகிறேன்
சின்[illegible]குலத்[illegible]தானென்று யென்னையிகழ்ந்தபடி பெண்ணரசே
அன்னைப்பிதாவினன்பு கொண்டயிருந்துவிட்டாய் பெண்ணரசே
முன்னே அயனமைத்த முறைமைப்பிசகிடுமோ பெண்ணரசே
அரணமுதயமுன்னே அமருக்குபோகவேணும் பெண்ணரசே
மரணமடைகுவேனோ வருவேனோதெரியாது பெண்மயிலே
சிரமத்துவிழுந்தபின் அருகினில்வருவாயோ பெண்ணரசே
திரையின்மறைவிலேதான் நின்றுவிடைதருவாய் பொன்னுரிவி

கர்ணராஜன் சொல் திபிதை.

பதினேழாநாளினுத்தம் பார்த்திபன்தான்செயிக்க
கதிரவனுதயமுன்னே கடின[illegible]ரய்போகவேணும்
விதிப்பயன்தன்னையந்த வே[illegible]னுமறியமாட்டான்
மதிமுகமுடையப்பெண்ணே மகிழ்ச்சியாய்விடைநீதாராய்.

கர்ணராஜன் சொல் வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி பதினேழாம்நாள் யுத்தசன்னதமாய் போகவேண்டியிருப்பதால் திருவிளச்செயல் எப்படியிருக்கிறதோ அதுதெரியாது அதை யாவருமறியமாட்டார் ஆகையால் உன்கை தாம்பூலந்தந்து விடைதருவாயடி பெண்ணே பொன்னுருவி.

பொன்னுருவி சொல் விருத்தம்.

ஆவின்பாலைகாய்ந்துவைத்து அதில்முகம்பார்த்தால்நன்றாய
மேவியமுகத்தின்ரூபம் விளங்கிடத்தெரியுமோதான்
வாவியும்பிரண்டுவொன்றாய் வையகமுழுகினாலும்
தீவினைவந்திட்டாலும்குலம் தெரியாமல்பேசலாமோ.

பொன்னுருவி சொல் வசனம்.

ஆ யம்மா சந்திரம் ஆவின்பாலை காய்ச்சிவைத்து அதில் ரூபசவுந்திரியத்தை பார்த்தால் முகத்தினழகு தெரியுமோ சொல்லும் பெண் தோழிமார்களே.

தாதி சொல் வசனம்.

பாலில் முகம் தெரியமாட்டாது யெத்தவிதம் செய்து பார்த்தால் முகம் தெரியும் சொல்லும் பொன்னுருவி நாயகமே.

பொன்னுருவி சொல் வசனம்.

ஆனால் சொல்லுகிறேன் கேளடி சந்திரம் பாலைக்காய்த்து புறையிட்டு பொழுதுவிடிந்தபின்பு கடைந்து வெண்ணெயெடுத்து அனலில் உருக்கி அதில் முகத்தைப் பார்த்தால் ரூபசவுந்தரியம் தெரியும் அத்தன்மைபோல் இவர் யுத்தம் செய்யப் போகவேணுமென்று சொன்னாரடி முடிப்புபோல் தாம்பூலம் கேழக்குறார் அல்லவா யிவர் குலத்தை காணறியும்படியாய் வசனித்தால் அப்படியே நடந்துக் கொள்ளலாமடி என்தோழியாகிய சந்திரமே.

தோழிசொல் திபிதை.

ஆனையின் மீதிலேறி அமர்ந்ததேரொட்டிதன்னில்
பூனைபோல்நுழையலாமோ பூபதியரசே அய்யா
நானையஞ்சொல்லுமென்று உன்னுயகிவரிந்துகேட்க
ஏனதைசொல்லாமற்றான் யிருக்குரீர்மன்னர்மன்று.

தாதி சொல் வசனம்.

கேளுமையா கர்ணபூபதியே ஆனையின் மீதிலேறி கிட்டி வாசற்படியில் நுழைவதுபோல உன் மர்மத்தை வெளிப்படுத்தாமலிருக்குரீர் இனி சந்தேகம் நிவர்த்தி செய்யவேண்டியது மகாராஜனே.

### கர்ணராஜன் சொல் தரு.

எந்தன்குலத்தையான் சொன்னதின்பிற்பாடு — பெண்ணே
இயலாகத்தாம்பூலம் தருகுவாயோயெந்தன் — கண்ணே
விந்தையாகவுந்தன் மனதிற்படியேயானும் — பெண்ணே
விளம்பிடுவேனதை விபரமாய்கேளடி — கண்ணே
குந்தமாதேவிக்கு முந்தியேயானுமே — பெண்ணே
குமரிவயற்றினில் பிரந்தவனடி — கண்ணே
நிந்தனையாலென்னை பெட்டியில்வைத்துமே — பெண்ணே
நேராகஆத்தினில் விட்டுவிட்டாளடி — கண்ணே
பெட்டிவருவதை தேர்ப்பாகன்கண்டுமே — பெண்ணே
பிடித்துப்பிரியமுடன் யெடுத்துவளர்த்தாண்டி — கண்ணே
இட்டியென் அருகினில் வருகவும்நீவேண்டாம் — பெண்ணே
கெலிப்பாகத்தாம்பூலம் தந்துவிட்டால்போதும் — கண்ணே

### கர்ணராஜன் சொல் கவி.

கன்னியில்குந்திதேவி கவனித்தால்பரிதிதன்னை
வண்ணமாய்கதிரோன்வந்து வளப்பமாய்சேர்ந்தபின்பு
மன்னனுன்வதிக்கப்பால் மாதாவும்பங்கப்பட்டு
என்னையும்பேழைவைத்து யேவிடச்செய்தாளாத்தில்.

### கர்ணராஜன் சொல் வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி என் தாயாராகிய குந்தமாதேவி இளமைப்பருவத்தில் துருவாசரால் போதித்த ஐந்துமந்திரம் பெற்றிருந்தாள் அதிலொன்றை பிரவிடையாகாத காலத்திலே ஸ்தோத்தரிக்க சூரியபகவான் வந்து குந்தமாதேவியைச்சேர தட்சணம் யென்னை பிரசவித்தாள் உலகத்துக்கு நீதியல்லவென்று என்னை பெட்டியில்வைத்து வைகையாற்றில் விட்டுவிட அது அஸ்தினுபுரத்திற் கருகாமையில் வர தேர்ப்பாகன்கண்டு எடுத்து வளர்த்தாண்டி பொன்னுருவி நாயகமே.

### பொன்னுருவி சொல் தரு.

ஆபிராணநாதா நாதா — நான்மயலானேன் நாதா
விரகமீரிவாடுதே நாதா — நான்தாளேன் (ஆ)

| | |
|---|---|
| சுவாமிநானென்னசெய்வேன் | சதிசெய்தான்பிர்ம்மதேவன் |
| காமிகளாகினேனே | கலந்துவிளையாடுவோம் (ஆ) |
| என்னைமணம்புரிந்து | பின்னுள் வரையில்சாமி |
| உன்னையிகழ்ந்தயானும் | உருவம்குலைந்துநின்றேன் (ஆ) |
| தலையில்தயிலமிட்டு | வாரிமுடித்திருப்பேன் |
| அலையவிதித்தான்பிரமன் | ஐயோநானென்ன செய்வேன் (ஆ) |
| புஷ்பம்முடிக்குமயிர் | புழுதியடையவைத்தேன் |
| தஷ்டையென்றுசொல்லி | தள்ளிவிடாதீர்மன்னா (ஆ) |
| சந்தனம்பூசுமேனி | சாம்பலடையவைத்தேன் |
| எந்தன்குறைதயைபின்னம் | யெவரிடம்சொல்லிடுவேன் (ஆ) |
| வளையலிடும்கைகள்ரெண்டும் | வயிரதடியைப்போல |
| மூரலிடும்விரலுக்கு | மோதிரமிட்டிருப்பேன். (ஆ) |

பொன்னுருவிசொல் விருத்தம்

மன்னவாவென்பிராணநாதா உன்மதிமுகம்பாராமற்றான்
என்னமாயிருந்தேன்பாவி யெவரையொப்பிடலாயிப்போ
பொன்னுருவானயெந்தன் பூபதிஅரசேபோற்றி
பின்னமும்அடியாள்செய்த பிழைபொறுத்திடுவீர்சுவாமி.

வசனம்.

கேளும் என் பிராணநாதரே பூரணச்சந்திரனைப்போலே குளிர்ச்சியும் பிரகாசமுடைய உன் ரூபசவுந்தரியத்தை நானறியேன் எனக்கு இந்தவயதில் மாலையிட்ட பின்னுள்வரையில் அடியாள் முகம்பாராமல் இருந்தது என்தாய் தந்தை செய்த தீவினையோ அல்லது நான்செய்த தீவினையோ அல்லது நான் செய்தகுறையோ அறிகிலேன் தெய்வமே.

கர்ணராஜன் சொல் த்விபதை.

முன்னமேநடந்துபோன மொழியதுகேட்கவில்லை
என்னிடயெதிரியான வியனுள்ளவிஜயனோடே
வண்ணமாயுத்தஞ்செய்ய வகையுடன்போகவேணும்
உன்கைதாம்பூலம்நன்றாய் யுகந்துமேதருவாய்பெண்ணே.

வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி நடந்துபோன சங்கதியை யார் உன்னைகேட்டார்கள் வீணுயுடைந்த பாண்டம் பூணாம்பூண்டபாவனைபோல் என் வீணாய் வசனிக்குராய் ஒருவசனம் தர்தவிடு மான்போய்வருகிறேனடி பொன்னுருவிநாயகமே.



## பொன்னுருவிக்கும் கர்ணனுக்கும் தர்க்கம்.

பொன்னுருவிசொல் தரு.

அவ்வக்கொடியோனுக்காயமர்செய்யப்போகிறனென்றும்
அடியாளுமெனவிசெய்வேன் முடிமன்னரே
இரவில்பிரியங்கொண்டு ஐவர்தனையெதிர்த்தால்
உள்ளபலன்பெறுவிர் கண்ணாளனே

கர்ணராஜன்சொல் தரு.

பலனுண்டுமில்லையென்றும் பெண்ணேநீ அரிந்ததை
பயிரங்கமாகச்சொல்வாய் வழியோடே
நிலையரியாமனுந்தன் மனம்போனபடிக்கெல்லாம்
நின்னையும்சொல்லலாமோ பொன்னுருவி.

பொன்னுருவிசொல் தரு.

ஆனைமின்மேல்யேரி ; யவாகிட்டிவாசப்படி
அமர்செய்யநுழைந்தார்கள் பிரியமுடன்

பூனைவாயெலியைப்போல் தூரியனரசருகில்
பொருந்தயிருந்தாலும் பெருமையென்ன.

கர்ணராஜன் சொல் தரு.

யென்னதவனம்கொண்டாய் பெண்ணேயுன் சிந்தைதனில்
மியலாயெனக்கருளும் தெரியநன்றாய்
வர்ணப்பசுங்கிளியே அன்னநடையினளே
வசனமெனக்களிப்பாய் பிரியமுடன்.

பொன்னுரிவி சொல் திபிதை.

தீவட்டியருகில்வைத்த தீபத்தின்வெளிச்சமுண்டோ
பாவத்தையனுசரிக்கும் பாம்புவின்கொடியோனுக்காய்
கோபத்தைதீக்கலாமோ தொத்த்வராஜபூபா
ஆபத்தைகார்க்குமந்த ஐவரைசேர்வோம்வாராய்.

பொன்னுரிவி சொல் வசனம்.

யென் பிராணநாதரே பெருந்தீவட்டியருகில் ஆயிரம் தீபம் வைத்தபோதிலும் தீவட்டியுடைய பிரகாசம் தெரியுமென்கிறது தெரியவாதோ அந்தன்மைபோல பாவத்தை சதா அனுசரிக்கும் பேர்களை கூடி அவரிட கோபம் தணியவேணுமென்றால் அபயமென்கிறவர்களை காளுனின்றஐவரை உயிர்சேதஞ்செய்துவிட்டால் கோபம்தணியும் நீரும் உடைந்தையால் தீவட்டியின் கீழ் விளக்குபோலயிருக்கலாம் அதுவேண்டாம் உன் தப்பிமார்களிடத்தில் சேர்ந்து சுகத்தை அனுபவிக்கலாம் வாரும் மகாராஜனே.

கர்ணராஜன் சொல் திபிதை.

உந்தனிட குழந்தையைநான் பார்க்கவென்று
ஒருமன்தாய் தூரியமகா ராஜன்தானும்
விந்தையுடன் யிருவருமா யுன்வீதிவந்து
விதியினாலவதரித்த பாலன்தன்னை
யெந்தனிட மடிமீதில் யெடுத்துவிட்டார்
யிழிகுலத்தான் மகன்தனை தொடாதேயென்று
முந்தாணி பட்டயென்மேல் தொட்டெடுத்து
முன்னுகிழித்து யென்மேல் போட்டாய்பெண்ணே,

கர்ணராஜன் சொல் வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியா லுனக்கவதரித்த புத்திரனுலாவது நீ யென்னை சேர்ந்து வாழ்வையென்று துரியோதன மகாராஜன் சந்தோஷமாய் அப்புத்திரனை யென் மடிமீதில்வளர்த்தவும் நீயோடோடிவந்து குனிந்து குழந்தையை தூக்கும்போது உன் மூந்தானி யென்பேரில்பட்டதென்று இழுத்து என்முகத்தின்மீதில் விட்டெறிந்தாயல்லவா அதை துரியோதனன் பார்த்து யெனக்கு மனவருத்தமாகுமென்று கோபம் தணியவிட்டார் அவரை நிந்தனைசெய்து யெதிரிகளிடத்தில் சேரலாமோ சொல்லும் பெண்ணே பொன்னுருவி நாயகமே.

பொன்னுருவி சொல் நிபினத.

பேதமையென்பதெல்லாம் பெண்களின்வசனமென்று
ஓதியபெரியோர்வார்த்தை உண்மையாய்கேட்டிருந்தும்
தீதுயான்செய்ததெல்லாம் சிந்தையில்நினைக்கவேண்டாம்
காதகதுரியனுசை கண்டித்துவிடுவீர்சுவாமி.

பொன்னுருவி சொல் வசனம்.

கேளும் யென்பிராணநாதரே பேதமை யென்பது பெண்டுகளுக்கென்று பழமொழிபடிக்கி நடந்துபோனதை பாராட்டினால் அடியாள் யென்னசெய்குவேன் அந்த வஞ்சகரான துரியோதனனை நீக்கிவிடுகிறதோல்லது என்பிராணநாதரே.

கர்ணராஜன் சொல் தரு.

தந்தையைப்போல யென்னை விந்தையாய்வளர்த்தாரே
தயவைமறந்துவிட்டால் பிழையாய்நினைத்துவிடுவார்
யுந்தன் மனதின்படி விந்தையாய்வசனங்கள்
யுரைத்தாலும்போகாது வருத்தாதேயினியம்மா

பொன்னுருவி சொல் தரு.

கொஞ்சிப்பிரியமுடன் குழந்தையைப்போல்கிளியை
கொண்டுவளர்த்துவந்து பூனைதின்பதுபோல
வஞ்சகனை அந்த திருதாட்டிரனுன்னை
வளர்த்தானேசண்டைசெய்ய வேண்டாம்யென்மொழிகேளும்
பஞ்சவருடனேநாம் சோத்துக்குறைவில்லாமல்
பாலித்திருவருமாய் காலங்கழித்திடுவோம்

கர்ணராஜன் சொல் தரு.

அண்டம்கிழுந்தாலிந்த மண்டலம்திரந்தாலும்
உண்டவீட்டினுக்கு ரெண்டகம்நினைப்பனே
மண்டலந்தனிலுள்ள சண்டப்பிரசண்டரெல்லாம்
பெண்டுகள்மொழிகேட்டு கண்டதைசொல்லுமடீ.

பொன்னுருவி சொல் தரு.

தேவரழைத்தாரென்று மதனும்ரதிதேவியை
போகவிடை தாவென்று பொருந்திமதனும்கேழ்க்க
பாவைதடுத்திடவும் தன்னிடைக்குமதன்
பஸ்பமாய்ப்போனதை கேட்டிருப்பீர்களே

கர்ணராஜன் சொல் திபிதை.

சண்டைக்குபோகவென்று சரசமாய்விடைதாவென்றால்
கெண்டைபோல்விழியினளே கொவங்கொண்டென்னசொன்னாய்
பெண்டுகள்மொழிகேளாமல் போனவர் ஆர்தான்மாண்டார்
கண்டதைசொல்லும்பெண்ணே கருத்தினிலறியனன்றாய்.

கர்ணராஜன் சொல் வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி யிந்த பூமண்டலத்தை யாளுகின்ற அரசர் மனையாளுடைய வசனம் கேளாமல் யுத்தம்செய்து யிரந்துபோனவர் களை சொல்லும் பெண்ணே பொன்னுருவி.

பொன்னுருவி சொல் திபிதை.

மன்மதன்ரதியின்வார்த்தை மதியாமல்யேகியந்த
விண்ணவர்வசனம்கொண்டு விமலன்மேல்பாணமெய்ய
கண்பொரியதனால்காமன் கழல்பட்டுமொழியருந்தும்
யின்னம்நான்யென்னசொல்வேன் யென்பிராணநாதனுரே.

பொன்னுருவி சொல் வசனம்.

கேளும் பிராணநாதனே சாட்சாத் பரமசிவனிட யோகத்தை தவிர்த்தி நேனென்று தேவர்களிட வசனம் தள்ளாமல் மதகேயாகிய மன்மதன் ரதி தேவி வசனம் கேளாமல்போனவர் அடைந்த கெதி கேழ்விப்பட்டிருந்தும் அடியாள் யென்ன சொல்லுவேன் பிராணநாதரே.

கர்ணராஜன் சொல் திபிதை.

யின்னவரினியாரென்று யாவருமறியாரந்த
மன்னவர் [illegible] மகனென்றுவளர்த்தான்யென்னை

உன்னிடவசனங்கொண்டு உயர்பஞ்சபாண்டவாளை
வண்ணமாய்ச்சேர்ந்தேனுல் வைகுண்டமடைகுவேனே.

கர்ணராஜன் சொல் வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி நாயகமே யின்னார் யினியாரென்று யாவரு மரியாத யென்னை யிளமைமுதல் இன்றன்வரையில் வளர்த்தவர்களை விட்டு ஐவர்களை சேர்ந்தேனே யானுல் வைகுண்டமடைவேனே சொல்லடி பொன்னுருவி நாயகமே.

பொன்னுரிவி சொல் திபிதை.

பாவையாரடியாள் நானும் பகர்ந்திடும்வசனம்கேளும்
ராவணனீன்றமைந்தன் நலமுள்ளயிந்திரசித்து
கோவையாள்சீதைக்காக கோதண்டம்பிரையானுப்போல்
நீவிளையுந்தனுக்கு ஸ்ரீகிருஷ்ணதேவராலே
ஆவியும்நீயஅந்த அர்ச்சுனன்மடியச்செய்வான்.

பொன்னுருவிசொல் வசனம்.

கேளும் யென்பத்தாவாகிய பிராணநாதரே அடியாளொரு விண்ணப்பம் சொல்லுகிரேன் திரேதாயுகத்தில் யிராவணேஸ்வரன் மைந்தன் யிந்திரசித்து யிராவணன் ரதகஜ துரகபதாதிகளெல்லாம் சீதையம்மனுக்காக ராமசுவாமி யினுடைய கோதண்டத்துக்கு யிரையானுப்போல் விசையனிட காண்டீபத்துக்கு உங்களை யிரைகொடுக்க கிருஷ்ணமூர்த்தி வந்திருக்கின்றார் நீர் யுத்தத்துக்கு போகவேண்டாம் யென் பிராணநாதரே.



கர்ண்ணராஜன் சொல் தரு.

வெந்தகெதிவந்திட்டாலும் உந்தன்மொழிகேட்பதுவும்
யேர்க்குமோ - அதுமார்க்கமோ.
விந்தையாய்வசனமொன்று. விளம்புகிறேன்கேளு
மெந்தன்நாவியே - பிராணதேவியே.
முந்தியொருகாலந்தன்னில் விந்தையாய்பெருந்திருவாள்
அம்மனும் - வந்து நம்மினம்.
சிந்தையுமரியவென்று முந்தியெதிர்பகடையாட
வருந்தவே - யவனும் தெரிந்துமே.
பாசிகையெடுத்திருவர் பண்புடன்யெதிரெதிராய்
கூடினோம் - பகடை யாடினோம்.
நேசமுடன் ஆடவெந்தன் ஆட்டமும்கெலித்திருக்கும்
வேளையில் - தூரியன் காளையும்
நேசமுடன்வேட்டையாடி வருவதைகண்டு அம்மன்
யேகினுள் - நானும்கையால் தாவினேன்.
ஆசையுடன் பூண்டிருந்த ஆபரணம் அத்துவிழ்ந்து
போச்சுதே - கிலேச மாச்சுதே.
தூரியனுமருகில்வந்து பிரியமாய்மணிபொருக்கி
சேர்க்குரான் - யொன்றாய் கோர்க்குரான்.
அரிபத்தம்நாதாவென்று மனதிலேஅவரை அன்பாய்
கூரினேன் - மனம் வாடினேன்.
நெரியையரிந்துமன்னன் அரிவைதனையழைத்து
ஆடென்றான் - பகடை போடென்றான்.
பிரியமுள்ளராஜனையுன் பிரியமொழியால்மோசம்
செய்வனோ - பாசம் விடுவனோ.

பொன்னுருவி சொல் திபதை.

புலிதனைபிடிக்கவென்று போனினில்மோசங்காட்டி
நலியவும்செய்யுகின்ற நலமைபோல்உம்மையிப்போ
பொலியதுகொடுக்கநன்றாய் பொருந்தவேவளர்த்தாளென்று
அலையுதேயெந்தனுவி லுயையோநானென்னசெய்வேன்.

### பொன்னுருவி சொல் வசனம்.

கேளும் என் பிராணநாதனே புலியைபிடிக்கிறநிமித்தியம் மேஷமென்கிற ஆட்டுக்கிடாவை போனில் கட்டின பாவனைபோல் ஐவரை நீர் செயிக்கவும் துரியோதனராஜன் தானே கெடிஸ்தலாதிபதியாயிருக்கவும் நினைத்து உம்மிட மனதின்படி நடந்தார்களென்று அறிந்துக்கொள்ளும் யென்பிராணநாதரே.

### கர்ணராஜன் சொல் திபிதை

தூத்தும்பெண்டீர் கூத்தனைகருமேயென்ற
மாத்தரனைபோலேயென்னை மரிக்கவும்வந்தாய்பெண்ணே
வேத்துமைதுரியனென்று விளம்பரமாகல்ல
சூஸ்த்திரம்சொல்லவந்தாய் சுந்திரமுடையமாதே.

### கர்ணராஜன் சொல் வசனம்

வாரும் பெண்ணே பொன்னுருவி புருஷ ரகசிய வசனங்களை விளம்பரமாக வசனிக்கும் ஸ்திரீகள் குடத்துலென்றும் விளங்கிய பழமொழிப்படிக்கு நீ யெனக்குவந்து சேர்ந்ததும் தவிர அந்த துரியோதனமகாராஜனும் நானும் வெவ்வேறான மனுஷரென்று உன் மனதில் கவனிக்கவேண்டாமடி பொன்னுருவிநாயகமே.

### பொன்னுருவி சொல் தரு.

பாவியான்செய்தவினைக்கென்செய்வேன் , நாதாயுந்தன்தேவி
மனமகிழ்ந்தாலாகுமோசுவாமி.

### கர்ணராஜன் சொல் தரு.

சுவாமியென்றும்தெய்வமென்றும் கூறியேயெந்தன்தேவியே
மரிக்கவேண்டாம்வழிவிடுங்கண்ணே.

### பொன்னுருவி சொல் தரு.

கண்ணேயென்றுயெந்தனையும் உந்தன்மொழியால்
உன்னிதமாய்கூட்டவும் காமமீருதே

### கர்ணராஜன் சொல் தரு.

காமன்கணையுந்தனக்கு நேர்ந்ததுபோல்பெண்ணே
தீமையாய்விஜயன் வில்லை பூட்டிநிற்குறான்

பொன்னுருவி சொல் தரு.

விஜயனென்றஜவனையும் சேர்ந்தாயிருவரும்
அஞ்சவில்லா திருக்கலாமே யேகுவோம்வாரும்

கர்ணன் சொல் தரு.

வாருமென்றஜவரிடம் சொல்வதைவிட்டு
நீராய்நான்போகவென்று கூறுவாயடி.

பொன்னுருவிசொல் கந்தார்த்தம்.

எப்படிசுவாமிநான் யென்னென்றுசொல்வேன்
யெனக்கெவராதாவு
இப்புவிமீதினில் அலைபவுமெந்தனை
யெழுதினன்பிரம்மனுந்தான்
தப்புவதில்லையே வந்திடும்விதிகளை
தள்ளுவதிரவர்களுமுண்டோ
செப்பினவார்த்தையை சிந்தைமகிழ்ந்துநீர்.

பொன்னுருவி சொல் தரு.

ஒப்புடனேகேளும் அடியாள்வார்த்தை
தப்பாது சுவாமி
ஒப்புடன்கேளும்நான் செப்பினவார்த்தையை
யிப்புவியாவலாம் தப்பாதுயென்மொழி (ஒப்புடன்)

கர்ணராஜன் சொல் கந்தார்த்தம்.

யேதடியாதகியெந்தனை தப்புவது யின்பமுனக்கிதுவோ
நீதுகள்மனதில்நினைப்பதைவிட்டு உன்சிந்தைமகிழ்ந்திடவும்
வாதுபுரிந்தெந்தனை தடுக்கநினைக்குறாய் மங்கையேயென்னடிநீ
வேதனையாகநீ நினைப்பதைவிட்டுநீ.

கர்ணராஜன் சொல் தரு.

வேண்டாம்வசனம்சொல்லடி போய்வாவென்றால்
மாண்டால்சுகுர்தமுண்டடி

வேண்டாம்நீதடுக்காதே நீண்டக்குழலினளே
மாண்டாலும்வீரசொர்க்கம் பூண்டிருக்கதடை (வேண்)

பொன்னுருவிசொல் விருத்தம்.

கடினமாய்விடை தாவென்று கடும்சினம்கொண்டுநீரும்
மடியவும்போறேனென்று மன்னவாயெந்தனோடே
யிடியதுவிழுந்தாற்போலே யெப்படிச்சொன்னீர்சுவாமி
அடியாள்நானென்னசெய்வேன் ஐயையோபிராணநாதா.

பொன்னுருவி சொல் வசனம்.

கேளும் யென் பிராணநாதனே யுத்தசன்னசமாக யேகி மடிந்துப்போக வேண்டுமென்று இடியிடித்தாற்போலே விடை தாவென்று கேட்கிறீரே அடியாளுக்கு யென்ன கெதிசொல்லும் பிராணநாதரே.

கர்ணராஜன் சொல் விருத்தம்.

பொழுதுமேவிடியகாலம் பொருந்தவேஆச்சுதிப்போ
அழுதுநீபுலம்பவேண்டாம் அரிவையேயுந்தன்வாக்கால்
பழுதில்லாவசனம்தந்தால் பார்த்திபன்கணையால்மாண்டு
தொழுதுமேவிஷ்ணுபாதம் சொர்க்கமுமடைகுவேனே.

கர்ணராஜன் சொல் வசனம்.

கேளும்பெண்ணே பொன்னுருவி பொழுது விடியகாலமாய்விட்டது நீ யென்ன விசனப்பட்டழுதபோதிலும் பிரமன் லிபிப்படிக்கி நடக்குமே தவிர நம்மாலே யொன்று மாகமாட்டாது சந்தோஷமாக தாம்பூலம் தனைதயேயா [illegible]ம்சேர்த்து வீரசொர்க்கமடைவேன் ஆலஸியம் செய்யாமல் விடை தருவாயடி பெண்ணே பொன்னுருவி.

பொன்னுருவி சொல் கந்தார்த்தம்.

இன்னமும்பேதைநான் யென்னென்றுசொல்லுவேன்
மன்னனேயென்னுடல் பதறுதேஐயையோ
சொன்னதோர்மொழிகள் தள்ளியேவிடுதீர்
வண்ணமாய்நானொரு.

பொன்னுருவி சொல் தரு.

வகைசொல்வேன்கேளும் யினியொரு
பிழைவராதையா

வகைதனைக்கேளுங்நன்றாய் சுகமாயிருக்கலாம்
ஜெகமெச்சஜவரை சேர்ந்து அரசாள (வகை)

கர்ணராஜன்சொல் கந்தார்த்தம்.

பேதமடியெந்தனை தடுக்கவும் நினைக்கிறாய்
சூதுகள்மனதினில் நினைக்குதேயிப்படி
வேதனைவசனம் விளங்கிடவென்றுநீ
வாதுகள்செய்யாதே.

கர்ணராஜன்சொல் தரு.

வழிவிடுங்கண்ணே தடையில்லாமல்
வகைவிடும்பெண்ணே
வழியைவிடுமெந்தன் பழியைக்கழிக்கிறேன்
அரிவிற்கணையாலெந்தன் உயிரைவிடுகிறேன் (வழி)

பொன்னுருவி சொல் தரு.

பாதகிராஜனுன்னை மாலையிட்ட முதல்
பதறிபேசெனென்மனம்நொந்து கதறிவாடினேன்
சூதபுங்கவன் புத்ரனென்றுமே
சுகந்தராமலே உன்னையிகழ்ந்துபேசினேன்
உன்னைச்சேர்ந்து சுகமுமறியா
உன்தேவியாகினேன் வெகுபாவியாகினேன்
பின்னம்பட உன்னையிகழ்ந்து
பேதையாகினேன் மனவேதையாகினேன்
அங்கம்நடுங்க அயன் விதியும்
அமைத்துவிட்டானே யெழுதிமறைத்துவிட்டானே
திங்களணியும் அடியார்க்கென்ன
தீங்குசெய்தனோயின்னம் கோவதைசெய்தனோ
உந்தன்முகத்தை பார்க்கமனமும்
உருகிவேகுதே மேனிகதறிவாடுதே
மைந்தனழகை பார்த்துக்கையால்
எடுத்துத்தருகுவீர் சண்டைதொடுத்துவருகுவீர்.

கர்ணராஜன் சொல் திபிதை.

அருணனும்உதையகாலம் அரிவையேஆச்சதிந்த
தருணத்தில்போய்வாவென்று தாம்பூலம்தந்தையானல்
பரமன்மால்பூசைசெய்து பாரியாதமுமேரி
கர்ணன்யான்யுத்தம்செய்ய கடிகியேபோவேன்பெண்ணே.

கர்ணராஜன் சொல் வசனம்.

கேளும் பெண்ணே பொன்னுருவிநாயகமே அருணனும் உதயகாலமாய் விட்டது யினி அட்டிசொல்லவேண்டாம் நான் கெங்கைக்கரைபோய் நித்திய க[illegible]லக் கடன்கழித்து பரமசிவம் விஷ்ணு இருவரையும் தியானம்செய்து [illegible]ருகிறேன் பெண்ணே பொன்னுருவி.

பொன்னுருவி சொல் வசனம்.

அப்படியே பூசை முடித்துவாரும் கொடிய பாவியாகிய நான் உம்மை மாலையிட்டமுதல் யின்னாள்வரையில் சூதபுங்கவனுடைய புத்திரனென்று உம்மை சேராதிருந்ததிம் பிர்ம்மலபியே தவிர வேறில்லை ரதிதேவி மன்மதனைப்போலே சுகங்களை அனுபவியாத பாவியாகினேன் நீங்கள் யான் செய்த அபசாரம் பொருத்து அடியாள் விடுதியில் யென்கை போசனமருந்தி சந்த கஸ்தூரி கதம்பம் யிதுகளைக் கலந்து யிரு[illegible]வருமணிந்துக்கொள்ள அடியாள் பிரியங்கொண்டேன் பூசை முடித்துவாரு[illegible] யென்பிராணநாயகரே.

கர்ணராஜன் சொல் தரு.

சங்கர[illegible]வசந்திரசேகர[illegible] ஓமகாதேவா
[illegible]வசங்கராகிருபைபாளனே ஓமகாதேவா
திங்க[illegible]சூடியதேவதேவனே ஓமகாதேவா
செங்கை[illegible]யில்மான்மழுவேந்தமீசனே ஓமகாதேவா
ஆலமுண்[illegible]டிடும்நீலகண்டனே ஓமகாதேவா
அம்பலத்[illegible]னிலாடுமோர்த்தனே ஓமகாதேவா
காலகாலனேசூலமேந்திடும் ஓமகாதேவா
கருதினேன்பதம்சோதியேசுடர் ஓமகாதேவா
சுந்திரர்க்கிடர்தந்தநாதனே ஓமகாதேவா
சோமசுந்திரநாதமூர்த்தியே ஓமகாதேவா
பாற்கடலினில்பள்ளிகொண்டவா ஓமகாதேவா
பக்ஷம்வைத்தென்னை ரக்ஷித்தருளுவாய் ஓமகாதேவா

கார்க்கவேணும்நீகெதியறிகிலேன் ஓமகாதேவா
தர்மவினைகளை நீக்கியாளுவாய் ஓமகாதேவா

கர்ணமகாராஜன் சொல் விருத்தம்.

அந்தபாய்ப்பூசைசெய்து அன்புடன்வந்தேனிப்போ
உந்தன்கைஅமுதளித்து ஒருமனதாகயெந்தன்
புந்தியில்வெறுப்பில்லாமல் பொருந்தவேதாம்பூலங்கள்
தந்துமேதடைசொல்லாமல் தையலேஅனுப்புவாயே.

வசனம்.

கேளும் பெண்ணே பொன்னுருவிநாயகமே உன்னிஷ்டப்பிரகாரம் பூசை முடித்துக்கொண்டு வந்தேன் யினிமேலாகிலும் தடைசொல்லாமல் ஒருமனதாய் போஜனமிட்டு போய்வாவென்று சொல்லும் பிராணநாயகி.

பொன்னுருவி சொல் தரு.

பிராணநாதரேயெந்தன் விடுதிக்குவந்துவிடும்
பிரியமுடனே அன்பாய் அமுதளிப்பேன்
கரியும்பொரியலிட்டு கச்சாயம்வைத்துயெந்தன்
கண்ணால்குளிரப்பார்ப்பேன் மன்னவரே
நெறியுமறியாதேதான் நீக்கியிருந்தேனுன்னை
நின்னயமாய்நீரும் அமுதருந்தும்
சிறியபுத்தியினாலே அறியாமல்பேசினேன்
சிந்தையிலதைவையாமல் அமுதருந்தும்

கர்ணராஜன் சொல் கவி.

போஜனம்புசித்துமேநான் பொருந்தவேதையலம்பி
நேசமாயாசனத்தில் நெறியுடனிருந்தேனிப்போ
பாசமாய்கதிரோனுந்தான் பண்புடன்உதையமானார்
ரோஷமாய்விஜையனென்னை ஜெயித்திடக்கூறுவானே.

வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி உன்கை போஜனமருந்தினேன் கதிரோனாகிய சூரியபகவானும் கிழக்குதிசையில் உதையமானார் என்னெதிராளியாகிய விஜயன் யுத்தத்திற்கு வந்துவிடுவான் நாம் ஆலசியம் செய்யக்கூடாது சந்தோஷமாய் தாம்பூலந்தருவாய் பொன்னுருவி.

பொன்னுருவிசொல் கவி.

எந்தனைமாலையிட்ட வென்பிராணநாதாயானும்
சந்தனம்புனுகுபூசி தாம்பூலந்தந்தேனிப்போ
சந்தோஷமாகநீரும் சனுதியாயெதிரிதன்னை
விந்தையாய்செயமும்பெற்று விரைவுடன்வருகுவீரே.

வசனம்.

கேளும் பிராணநாயகா அடியாள் மாலையிட்ட நாள்முதல் உம்முடன் வார்த்தையாடாமலிருந்து பிர்மன் கட்டளைப்படி நடந்துவிட்டது சந்தோஷமாய் எதிரியைஜெயம்பெற்றுவாரும் மன்னவா.

கர்ணராஜன்சொல் தரு.

போய்வாரேனடிமானே யிருநீயிப்போ
போய்வாரேனடிமானே
போய்வாரேனவர்களை போரில்சமர்புரிய
ஆயனெண்ணினவண்ணம் அறிவேன்தெரிவேனானும் (போ)

பொன்னுருவி சொல் தரு.

எனக்கொருஆதரவு யென்னசொல்வீரென்று
எண்ணினேனடியாளும்
எனக்கொருஆதரவு யென்ன அருள்புரியும்
வனம்விட்டவானரம்போல் வந்துதவிக்கிறேனே (என)

கர்ணன்சொல்தரு.

போர்செய்துநான்மடிந்தால் துரியனுன்னை
பொருந்தவருகவென்பான்
போர்செய்துநான்மடிந்தால் போகாதேஅத்திநகர்
சீர்செய்புபாண்டவாளை சேர்ந்துயிருந்திடுவாய் (போ)

பொன்னுருவி சொல் தரு.

தேர்ப்பாகன்மைந்தனென்று அடியாளும்நான்
செப்பினேன்யுந்தனையும்
தேர்ப்பாகன்மைந்தனென்று சேதிமறையும்விதம்
யார்ப்பாகம்தெரியலாம் ஆண்டவனேசுவாமி (தே)

### கர்ணராஜன்சொல் விருத்தம்.

போர்செய்துபாண்டவரை வென்றாயாகும்
புகழுடனே வருவேனோ தெரியாதந்த
தீரமன்னர் கண்டபன் கணையாற்பட்டு
சிதறிடவேபார்தனிலே விழுந்தேனானால்
சூரசேனன்ராஜனவன் புதல்வியாகும்
சொகுசாகபெண்ணையீன்ற குந்திதேவி
மாரடித்துமென்பேரிலே விழுவாளப்போ
மதிகுலத்தோனென்றவரு மறிவார்பெண்ணே.

### வசனம்.

வாரும் பெண்ணே பொன்னுருவி நான் வருவேனோ அல்லது யிறந்துவிடுவேனோ அது தெரியமாட்டாது நான் யிறந்துவிட்டேனேயானால் என் தாயாராகிய குந்திமாதேவியால் சந்திரகுலத்தானென்று யாவரும் தெரிந்துகொள்ளுவார்கள் நான் போய்வாரேனடி பொன்னுருவிமாயமே.

### பொன்னுருவி சொல் தரு.

| | |
|---|---|
| தேரேறியேமன்னன் | போருக்குப்போகையில் |
| சிறந்தேஆக்கையும்பாருமம்மா | |
| நேராகவேயொரு | வேதியனும்வாரான் |
| நிந்தனைபாரடி | தோழியே |
| தாசன்மாபெண்ணே | சொண்டுமேசெக்காரும் |
| கூறிவருவதை | பாருமம்மா |
| அதைப்பாராமல்ராஜனும் | சாரியாய்ப்போறோ |
| பாங்கியரேஅம்மா | யென்னசெய்வோம் |
| குக்கிசுடுவென்று | கோட்டானும்கூவுதே |
| கொத்தனருக்கது | கேட்கிலையோ |
| ஒத்தைநரிகுலமூ | சத்தமும்கேழ்க்குது |
| உத்துநீகேளடி | தோழியே |
| அக்கிரகர்க்கத்தி | யோரியுங்கூவுது |
| அரிவையேயுன்செவிக் | கேட்கிலையோ |
| தத்திதத்திபூனை | குறுக்காகப்போவதை |
| சுவாமியதைக்கண்டால் | பார்க்கிலையோ |

பொன்னுருவிசொல் திபதை.

வையகமாளுஞ்சூரியன் வார்த்தையாலெந்தநாதன்
தையலின் விடையும்பெற்று சமருக்குபோகும்போது
அய்யோநானென்னசெய்வேன் ஆகாதசகுணந்தன்னி
லையவேயெந்தநாதன் படைக்கென்றுயேகினாரோ.

பொன்னுருவிசொல் வசனம்.

வாருமம்மா யென் தோழியாகிய சுந்திரமே யென் பிராணநாயகனானவர் துரியோதனமகாராஜன் வசனங்கொண்டு என் கைதாம்பூலம்வாங்கி யுத்தசன்னத்தமாகி ரதமேறி நடக்கிறபோது அவசகுணங்களானதைப் பாராமல் யேகினாரே அவர் என்னகெதியடைவாரோ அறிகிலேனடி என்தோழிமார்களே.

தோழிமார்கள் சொல் தரு.

பொன்னியிராளித்தயெந்தன் புகழுள்ளமாதுமேகேள்
மன்னனுக்கோரிடர் வாராதுவாராதம்மா
அன்னநடையினாளேநன்றாய் அமர்செய்து வன்கணவன்
வண்ணமுடன் வருவாரம்மா வஞ்சனைகள் வாராதடி
காண்டீபனை ஜெயித்துமன்னன் கடிகியேவந்திடுவார்
நீண்டகுழலாளேயொரு சிந்தனையும்வாராதம்மா
தாண்டிரதமேறிமன்னன் சடுதியில்வந்திடுவார்
வேண்டினேனுன்னையம்மா விசனத்தைவிட்டுவிடு

போது வசனம்.

இவ்விதமாய் தோழியாகிய சுந்தரம் பொன்னுருவி அம்மனுக்கு தேறுதலைச் சொல்லியிருக்குங் காலத்தில் கர்ணமகாராஜன் யுத்தசன்னத்தனாய் ரதமேறி வருகிறவிதங்காண்க.





## கர்ணராஜன் யுத்தத்திற்குவருகிற தரு

தேரின்மீதில்யேறிவந்தனனே கர்ணபூபதி
தேரின்மீதில்யேறிவந்தனனே

தேரின்மீதினில் யேறிவந்தனன்
தீரமாய்ப்படை போர்புரியவும்
மாருமாரென பூரிபேரிகை
வீரகாளமும் விருதுகொடியுடன் (தே)

அண்டகோளமும் அதிரபேரிகை
கண்டபேர்களும் கதறிவாடிட
ரெண்டுகண்களும் பொரிபறந்திட
சண்டமாருதம் போலேசீறியே (தே)

### கர்ணன் சொல் திபிகை.

ராஜராஜர்கள்போற்றும் ராஜப்பிரதாபாபோற்றி
ஆசையுமன்புமாக அடியேனைவளர்த்தமன்னா
நேசமாய்விஜயனுக்கு நேர்ந்தசாரதியைப்போலே
பாசமாயெனக்கு சாரதிபகருவாயே.

## கர்ணராஜன் சொல் வசனம்.

சரணம் சரணமையா துரியோதனமகாராஜனே எதிரியாகிய பாண்டவர் யுத்தம் செய்கிறதற்கு குருக்ஷேத்திரத்தில் வந்து நிற்கிறார்கள் இனி ஆலஸ்யம் செய்யக்கூடாது அர்ச்சுனனுக்குச் சமமான யெனக்கு தேர் சாரதி தருவிக்கவேணுமென்று கர்ணன் துரியோதனனுடன் வசனித்து யிருக்கும் காலத்தில் சல்லியாராஜன் வருகிற விதங்காண்க.

## சல்லியராஜன் வருகிற விருத்தம்.

ஆண்டர்களும் மாமுனிவர் அமரர்மெச்ச
 அழகுபெரு மன்மதனும் யிவனேயென்ன
கண்டவர்கள் திடுக்கிடவும் சிங்காணிவில்லும்
 கரமதனில் கத்திகேடயமுந் தாங்கி
மண்டலமும் விண்டலமும் மதிக்கும்திவ்ய
 மணிமகுடம் பளபளென்ன பணிகள்மின்ன
சண்டப்பிர சண்டனெனும் மத்தியதேச
 சல்லிய ராஜனுமே வருகின்றனே.

## சல்லியராஜன் வருகிற வசனம்.

அகோதேப்படியென்றால் இத்தப்பிரகாரம் யாதொரு மத்தியதேசத்தை பரிபாலனஞ்செய்து வாநின்ற சல்லியமகாராஜன் துரியோதனமகாராஜனை காணத்தக்கதாய் சபைக்கு வருகிற விதங்காண்க.

## சல்லியராஜன் வருகிற தரு.

ராஜபோஜவிஸ்வாசன் சல்லியமகாராஜ
போஜவிஸ்வாசன் வந்தனனே
ராஜனாகியவீர தீரனும்நேசமாய்
பலசாலியாகவே ராஜபோஜவிஸ்வாசன்
மகுடமுடிகளும் பளபளவென்னவே
வீராதிவீரர்மன்னர் மன்னருக்கதிகதீரனே
திகுடதிகுவென சிலம்பொலிக்கவே
மேட்டானமேட்டி தீரனாகியவீரனென்னவே (ரா)

தரணியெங்கும்கிடுகிடென்னவே முரசபேரி
டவுலுடங்கா ஆர்ப்பரிக்கவே

அரிவையொருபுரம் கவரிவீசவே
நடனமாதர்ஆலவட்டம் சுற்றும்போட்டவே (ரா)

சல்லியராஜன் சொல் விருத்தம்

மண்டலம்புகழும் அதிகவீரதீரனும்
மன்னவர்களெனக் கெதிருண்டோ
சண்டப்பிரசண்டனும் ஜெகமெச்சகொடிகட்டி
தரணியை யாண்டமன்னன்
அண்டரண்டங்களும் சல்லியன்பேர்சொன்னால்
அதிருமே கிடுகிடென்று
வண்டணிதுளபமணிமாலையை யணிந்தவரை
மகிழ்ந்திடும் அதிவீரனும்.

பொது வசனம்.

இவ்விதமாக ராஜாராஜாக்களுக்கெல்லாம் அதிக பலவானாகிய சல்லிய மகாராஜன் ஸ்ரீகிருஷ்ணதேவருக்கு சரியான தந்திரங்களறிந்தும் பூபதியைக் காணவென்று துரியோதனமகாராஜன் வருகிற விதங்காண்க.

துரியோதனன் சொல் நிபிதை.

மன்னர்க்குமன்னுயர்தன் மலரடிபோற்றிபோற்றி
விண்ணப்பம்நானுமொன்று விளம்புவேன் துரியனிப்போ
என்னையீடேறச்செய்து யென்குலம்விளங்கச்செய்ய
வரணமாயெந்தனுக்கோர் வாக்கருள்வீரேமாம.

துரியோதனன் சொல் வசனம்.

சரணம் சரணம் அடியேன் மாமாவாகிய மத்தியதேசாதிபதியே யொரு விண்ணப்பம் யென்னவெனில் தாயாதியாகிய பாண்டவர் நேற்றையதினம் பதினாறு நாள் யுத்தத்தில் இரதகஜதுரகபதாதிகள் யின்னம் அனேக ராஜாக்கள் சர்வமும் மூர்ச்சையாகும்படி செய்துவிட்டார்கள் கர்ணனுக்கு சொற்பசேனைகளிருக்கின்றது உம்மை கர்ணனுக்கு தேர்சாரதியாக யிருக்கும்படி கோருகிறேன் மகாராஜனே.

சல்லியராஜன் சொல் விருத்தம்.

சூதபுங்கன் புதல்வனுக்கு
சோருசாரதியும் வேணுமென்று

எதுநீயேளிதமாய் வசனமொன்று
யியம்பிடவுமவந்துவிட்டாய் போதும்போதும்
ஜாதியிலுங்கீழ்வான கர்ணனுக்கு
சாரதியாய்நானிருக்க வென்னைக்கொண்டு
வேதனையாயொருவசனம் விளங்கச்சொன்னாய்
விபரீதம்விளைந்துவிடும் வேர்பணிதனாுல்

சல்லியன்சொல் வசனம்.

வாருமப்பா துரியோதனா குருபுங்கவனுடைய புதல்வனுக்கு யென்னைசாரதியாகவேணுமென்று யேளிதப்பண்ணினாயல்லவா யின்னம் வேறொருமனிதனானால் யின்னேரம் பின்னம்செய்துவிடுவேன் அறிந்துகொள்ளும் துரியோதனமகாராஜனே.

துரியோதனன்சொல் தரு.

யிப்படியென்மீதில் கோபம்கொண்டால்
யெப்படியென்செய்வேன்மாமா
நான்செப்பினவார்த்தையை கேளும்
கர்ணன்தேர்சாரதியாக வேணும்

சல்லியன்சொல் தரு.

யேதுநீயென்தனை விந்தையாயொரு
யேளிதம்செய்திட வந்தயோ
தீதுகளாகிய வார்த்தையும்பேசி
துரியனேவெகுபலம் கொண்டயோ

துரியன்சொல் தரு.

பலமற்றுவருமென்றுகூறினேன் யெந்தன்
படைவெல்லசாரதி யாகுவீர்
அகித்தநீவருவதுபோலவே யெந்தன்
ஆவியல்லயுதே வருகுவீர்

சல்லியன்சொல் தரு.

சாரதியாகியசுதனுக்கு யென்னை
சாரதிவைக்கவோ வந்திட்டாய்
பாருக்குள்யுன்னைப்போல் துரியனை
வீரபலமுள்ளவர்யாரும் அறிகிலேன்

துரியோதிரன்சொல் திபிதை.

மத்தியதேசராஜ மபிபனேகேளுமிப்போ
பத்தியாய்கிருஷ்ணமூர்த்தி பார்க்குணன்ரதமுமோட்ட
சித்தமுமகளித்துஐவர் ஜெயங்கொண்டாரிதுவரைக்கும்
வித்தகன்சாரதியுமாக விளங்கினன்பிர்மதேவன்.

துரியோதனன்சொல் வசனம்.

கேளும் மத்தியதேசாதிபதியாகிய சல்லியமகாராஜனே பரமசிவனுனவருக்கு சமதையான பிர்ம்மதேவன் சாரதியாகி தேரை நடத்தவில்லையா ஸ்ரீ கிருஷ்ணதேவரே காண்டீபனுக்கு சாரதியாயிருக்குறரோ அதைப்பார்த்தாயிருந்தும் கோபம்கொள்ளாமல் வாரும் சல்லியநூபதியே.

சல்லியராஜன்சொல் விருத்தம்.

முன்னாளில்பாண்டவர்கள் மருகனென்ற
முறைமையாலவாருகில் வந்தேன்காணும்
பின்னமாயெனக்கிருந்த பசியாலன்னம்
பிரியமுடன் தண்ணீர்ப்பந்தல் பசியும்தீர்ந்தேன்
உன்னதென்று தண்ணீர்ப்பந்தல் கேள்விப்பட்டு
உண்ணமுது அரிகூஐவர் படையிற்சேர்ந்தால்
வண்ணமுள்ளபதமெனக்கு வாராதென்று
வந்தேனானுன்படைக்கு மன்னர்மன்னா.

சல்லியராஜன் சொல் வசனம்.

கேளுமப்பா துரியோதனா முன்னாலே பாண்டவர்கள் மருமகனென்கிற முறைமைகொண்டு ஐவரைக்கோரி வருகும்போது பசியும் தாகமுமாய் தண்ணீர்ப்பந்தல்வைத்து பசிதீர்ந்தபின்பு துரியோதனனுடைய தண்ணீர்ப்பந்தலென்று கேள்விப்பட்டு உன்னிட போஜனமுண்டு ஐவரிடம் போகக்கூடாதென்று வந்துவிட்டேன் துரியோதனமகாராஜனே.

துரியோதனன் சொல் தரு.

நான்செய்தபாக்கியம் உன்னால்
நகராளவேணுமையா
நான்செய்தபாக்கியம் வீணைபாட்டாது
தானகம்திரிந்திடும் காணே பாண்டவர்களை(நான்)

பாணசரங்கொண்டு பங்கப்படாமுன்னே
மானம்காக்கவென்று வந்துதவுமுன்னே (நான்)
யெந்தனரசுகள் யீடேறவகையாக
தந்திரமாகவும் சாரதிநீர்செய்தால் (நான்)
விந்தையானநாக பாணத்தால்கர்ணனும்
ஐந்துபேரையும்கொன்று அதம்செய்துவருகுவீர் (நான்)

சல்லியராசன் சொல் தரு.

கர்ணனிட ரதமேறி யோட்டுதற்கு
கருத்தின்படி போய்வாரேன் துரியமன்னு
சிறியனிட வசனமும்நான் பிரியங்கொள்ளேன்
சித்தத்தில் கெட்டியாய் நினைந்துகொள்ளு
தருணத்தில் யென்மொழியை கேளாவிட்டால்
தாழ்வே குதித்திரங்கி வருகும்போது
அரியயன்மால் வந்துயென்னை தடுத்தாலுந்தான்
அமர்க்களத்தை நாடிபின்னால் வருகுவேனே.

சல்லியராஜன் சொல் வசனம்.

கேளும் துரியோதனமகாராஜனே கர்ணன் யுத்தம்செய்யுங்காலத்தில் நான் சொல்லும் தந்திரப்படிக்கி கேட்டு நடந்தாலாச்சுது யென் வசனம் தள்ளிவிட்டால் யிரதத்தைவிட்டிராங்கிவிடுவேன் அது நிஷயம் தெரிந்துக்கொள்ளும் நான் போய்வருகிறேன் யென்று ரதமேறி பாண்டவாள்பேரில் யுத்தத்துக்கு வருகிறவிதங்காண்க.

கர்ணன் யுத்தத்திற்கு வருகிற நொண்டிச்சிந்து.

விசையாய்நடத்துமையா - யின்னம் - வெகுதூர மிருக்குது குருஷேத்திரம் - எஜமான் மொழிப்படிக்கி - ரதத்தை - யேகிட துருசாய்பாகவனே - அண்டம் நடுங்கிடவும் - பேறி - அடியுங்கள் வீரர்படைமுறியும்படி - மண்டலம் தானதிர - டங்கா - மாரியடிய டாஜெயமென்று - சல்லியராஜனே நீ - யெந்தன் - சமர்த்தையும் பாரினியிப்பொழுதே - வில்லினில் வல்லவனாய் - வந்து - விளங்கிடும் விஜயனை நானுமிப்போ - யொருக்கணையால்சிரசை - பாரில் - புரண்டிடசெய்குவேன் - ஒருநொடிக்குள் - துருசாய்குதிரைகளை - போக - தாண்டிநடத்துவீர் வேகமுடன் - தந்தினதனனம்,



சல்லியன்சொல் திபிதை.

ஒருகணையாலேயிந்த உயர்பஞ்சபாண்டவரை
கறுவறுத்திடுவேனென்று கவுரவரெல்லாமுன்னே
அரிவைபாஞ்சாலிக்காக ஆசையாய்வில்வளைத்து
வெரியன்போல் மண்ணைக்கவ்விவிழுந்ததுமறிவேன்கர்ணா.

சல்லியன்சொல் வசனம்.

ஆ! ஆ! சபாஷ் நீயே சாமார்த்தியவான் முன்னாலே துரோபதையை மாலையிட வில்வளைக்க மாலைநாணியறுந்து பாரில்வீழ்ந்து உயிரிழந்தவன் போலே பிரண்டு உருண்டதில் அனேகசீவராசிகள் மடிந்துபோய்விட்டதல்லவா அவ்வளவு பலமுடையவனென்று யாவரும் உன்னைஜெயிக்கமாட்டார்கள் கர்ணமகாராஜனே.

கர்ணராஜன்சொல் தரு.

நல்லதுநல்லதடாபாகனே வுந்தன்
வல்லமைக்கொண்டுயென்னை யேளிதம்சொன்னாய்
சல்லயனே நீயெனக்கு மல்லுசெய்யவந்தவன்போல்
காணுதேயிப்போ.

சல்லியராஜன்சொல் தரு.

சிரியபுத்தியுடையவனே சேர்ந்தபடியால்
மரியாதைபோதுமடா யீனப்பயலே

வெரிபிடித்தபயலைப்போல பேசுராயுன்னை
முரியவடித்து உயிர்போகசெய்குறேன்

கர்ணராஜன்சொல் தரு.

யென்னடாசல்லியனே யெந்தனையிப்போ
பின்னப்படசொல்லிவிதம் யுன்னையரிவேன்
வண்ணமுடன்யுன்னுதர்க்கு அன்னமில்லாமல்
வந்தியேயுந்தனுக்கு வார்த்தையேதடா

சல்லியன்சொல் தரு.

யென்னடாஜாதிகெட்ட மூடப்பயலே
பின்னப்படபேசுராய் வாடாய்நீயிங்கே
மன்னவனும்யென்றுயெண்ணி சாரதியானேன்
யுன்னையும்யார்மதிப்பார் பாரின்மீதிலே

கர்ணராஜன்சொல் தரு.

பெருத்தமனிதனென்று அஞ்சினேனிப்போ
காத்தில்தனுவெடுத்தேன் நில்லடாமுன்னே
வரத்தில்பெருத்தவனே சல்லியாயுன்னை
அர்த்தசந்தரபாணம்கொண்டு அருக்குறேனிப்போ

சல்லியராஜன்சொல் தரு.

உந்தனையும்பாணத்தையும் சேத்துசுழட்டி
அந்தரம்யெறிந்திடுவேன் பாரடாயிப்போ
வந்துதொடாயுந்தனுக்கு நிந்தனைகாலம்
வாரியரைந்திடுவேன் பாரின்மீதிலே

துரியோதனன் சொல் திபிதை.

சல்லியன்கர்ணனுக்கும் சபர்த்துமேனேர்ந்ததென்று
அல்லலைதுரிதராஜன் அரிந்துமேயோடிவந்து
நல்லதுநீங்கள்செய்த நன்மைக்குமெச்சினேன்யான்
வல்லமையுள்ளஐவர் வந்துமேநகைப்பார்தானே.

துரியோதனன் சொல் வசனம்.

வாருங்கள் சல்லியமகாராஜனே கர்ணமகாராஜனே நீங்களிருவரும் நல்ல யோசனைசெய்தீர்கள் நீங்கள் நடத்துகின்ற நடத்தை பாண்டவரறிந்தால் யேளிதப்செய்வார்கள் அதற்கு முன்னமே யென்தன் உயிருக்கு ஒரு யேர்ப்பாடு செய்துவிட்டு உங்கள்மனதின்படி நடவுங்கள் சல்லியமகாராஜனே.

சல்லியராஜன் சொல் விருத்தம்.

யென்மீதில் கோபமாய் துரியமன்னு
யியம்பினது நானறிந்து கொண்டேயிப்போ
வண்ணமுடன் கர்ணனவன் சொன்னதெல்லாம்
மறந்துவிட்டேன் நீர்சொல்லும் வசனத்தாலே
மன்னவனே போய்வாரோம் யிருவர்தாமும்
பண்ணும்வின்னும் அதிர்ந்திடவே ரதத்தையோட்டி
அன்னகரம் இடுகிடென்ன ஆர்பரிக்க
அந்திரதுந்துமி முழங்க அமரில்வந்தார்.

பொது வசனம்.

இவ்விதமாக சல்லிய மகாராஜன் கர்ணன் யிவர்களின் சச்சரவு நீங்கி ரதமேறிக்கொண்டு துரியோதனன் சகுனி அஸ்வத்தாமன் வீஷ்டுமர் யின்னம் சில ராஜாக்களும் மூன்ராக்ரோணி சேனையுடனே ரதகெஜதுரகபாதாதிகளுடனே முரசு பேரி டவில் டங்கா எக்காளை பஞ்சவர்னக்கொடி அரவக்கொடி யிதுகளை பிடித்துக் கொண்டு பதினேழாநாள் யுத்தத்துக்கு குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்தபின்பு பாண்டவாள் வருகிறவிதங்காண்க.

பாண்டவாள்வருகிர விருத்தம்.

ஐவர்களும்மாயவரும் துஷ்ட்டத்துய்மன்
அழகுள்ள பாண்டியனும் சேனைசூழ
கைதனிலேவில்லம்பும் பரசுபாங்கும்
கனத்ததேர்கத்திகே டயமுந்தாங்கி
தெய்வசெயல்போல்நடக்கு மென்று ஐவா
திருவுளத்தை அன்பாக மனதிலெண்ணி
ஜெயமென்றுமுரசுடங்கா ஆர்பரிக்க
சிங்காரகூடாரம்தனில்வந்தாரே.

### பொது வசனம்.

இவ்விதமாக ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் பஞ்சபாண்டவர் பாண்டியராஜன் துஷ்டத்தூய்மன் யின்னும் சிலபடைகளும் கூட்டிக்கொண்டு முரசுக்கொடி அனுமக்கொடி ரதகஜ துரகபதாதிகளும் ஜெயபேரிகை யடித்து சங்கத்தொனிசெய்து யுத்தம் வேணுமென்று பாடிகூடாரம் வருகிரவிதங்காண்க,

### பாண்டவாள் வருகிற தரு.

பாண்டுபுத்திரர்வந்தார் துஷ்டத்தூய்மனுடனே
பாடிகூடாரம்சேர்ந்தார்
நீண்டகெதையும்வாளும் நிகரில்லா அம்பும்வில்லும்
காண்டீபம்கையில்கொண்டு கர்ணன்தனைஜெயிக்க (பாண்)

காலபூசைமுடித்து கடவுள்தனை துதித்து
கரியமாலுடன்கூடி
பாண்டவர்சேனையொன்றாய் பாங்குடனேசேர்ந்து
மாலையன்துஷ்டத்தூய்மன் மன்னன்பாண்டியராஜன்
காலைக்கடன்கழித்து கடவுள்தனைதுதித்து - சரு

காலையிலாயனை சிரமுடனேதொழுது
மூலபலம்பொருளை ஞாலம்தனிலிருந்து (பாண்டு)

ஆயன்...வேண்டி ஐவர்படையுடனே
அமர்செய்யவேணுமென்று
தூயன்துரியன்படை முரியவடிப்போமென்று
நேயமுடன்செலிப்பாய் துரியன்படையைவெல்ல
மாயவருடன்கூடி மகிழ்ந்துகுருக்ஷேத்திரம் - சரு

ஆவலுடன்பல அருள்தனைக்கொண்டு
தூயன்துரியன் படைதனைவெல்ல (பாண்டு)

டமரம்கிடுகுகொம்பு டவினுமுரசதிர
டங்காவும் தான்முழங்க
திமிதிமியென்றுமே சிங்காதம்தொனிக்க
ஜெயங்கொள்ளவேணும் அமர்செய்வோமென்று

அடியுங்கள்பேரிகை அமராதுபுரியவே
சங்குதொனிகள்செய்ய பெங்குந்துலங்கிட - சரு
அந்திரத்துமி னந்தமிதேவன்
விந்தையுடனேசங்கு வீரிட அடியுங்கள் பாண்டு

தர்ம்மராஜன்சொல் வசனம்.

அடிகாவாரும் தம்பிஅர்ச்சுனு பதினேழாநாள் யுத்தம்செய்கிறதற்கு யெதிரியாகிய துரியோதனனைச்சேர்ந்த கர்ணன் குருஷேத்திரத்தில்வந்து நிற்கின்ருன் ஆகையால் சூரியன் உதையமாகி யிரண்டுநாழிகையாச்சுது யின்னம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வரக்காணுமேயென்று தர்மராஜர் ஆயாசப்படவும் அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வருகவென்று தோத்திரம்செய்கிறவிதங்காண்க

அர்ச்சுனன்சொல் தரு.

கருணைபுரிந்திடும்கிருஷ்ணமூர்த்தியே நீரிந்தவேளையில்
கடுகிநொடியினில் வந்துகாத்திடும்
தருணமுந்தனை வருகவென்றுமே கிருஷ்ணதேவரே
சமர்புரியவும் வருகுவீரையா

கர்ணராஜனும் மாணமடையவும் உந்தனைக்கோரி
கருதிபாண்டவர் வருகக்கோரினேம்
கெருடவாகன மேருமுகரி வருகவென்று தொழுதுநின்ருேம்
கெஞ்சினேமுனை பஞ்சபாண்டவர்

குந்திமைந்தர்களைவரும் சமர்
செய்யவேளைநீர் வருகுவீரையா
னந்தகோபாலா யிந்தவேளைநீர்
ஐந்துபேரையும் வந்துகாப்பீரே

சிந்தைமகிழவும் னந்தன்மைந்தனே நீர்
யிந்தவேளையில் வந்துகாத்திடும்
பந்தமாகவே கோபஸ்திரீகளை
பரிந்துநீருமே பாதுகார்த்தவா

பொது வசனம்

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியைநோக்கி அர்ச்சுனன் தோத்திரஞ்செய்யவும் கிருஷ்ணமூர்த்தி வருகிறவிதங்காண்க.

## கிருஷ்ணமூர்த்திவருகிற விருத்தம்

வேதமுமறிந்தமூர்த்தி விகலாமகிலமெல்லாம்
போதமாய்நின்றோரான பூண்டதோர் துளபமாலை
நீதமுமகனுமந்த நின்மலாபொருளாஞான
சாதககுருவாய்கிருஷ்ண சுவாமியும்வருகின்றாரே.

## கிருஷ்ணமூர்த்திவருகிற வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனன் தோத்திரஞ்செய்யவும் துவாரகாபுரியில் வீற்றிராநின்ற ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு இந்த சத்தங் கேட்டு பஞ்சபாண்டவர்களை காணும்படியாய் குருக்ஷேத்திரம் வருகிறவிதங்காண்க.

## கிருஷ்ணமூர்த்திவருகிற தரு.

தேவர்தேவராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரும்
திவ்யர்கொலுவில்வந்தார் ஜெகமோகனாகிய
தேவன்கொலுவில்வந்தார்
சிதான்பஞ்சவர் பாடியில்வருகவும்
சித்ரமண்டலம்தன்னில் ரத்தினகுண்டலமின்ன - சரு

சித்ராஜனைவர் திருவடிதொழுதிட
சுத்தபாண்டவர் முத்தியடிபெற
திருமுடியொளிவிட திலர்தமதிகளென
அதிகபலமுள - ஐவரைக்கண்டிட (தேவர்)

பச்சமணிகளாலும் உச்சிதப்பணிகளாலும்
கச்சிதமானதொரு உச்சிதப்பாடியில்-சரு
பத்திபத்தியாய் ஐவருங்கூடியே
சுத்திலும்புடை சூழ்ந்துபஞ்சவர்
பலவிதமுரசுகள் அதிவிதமுடன்வெரு
பதரிகிரணமென சுருதிகடனம்பத (தேவர்)

## பாண்டவர்சொல் திபிதை

பஞ்சபாண்டவர்களொன்றாய் பாடியில்வந்துசேர்ந்து
கஞ்சன்தன் தங்கையின்ற கபடநாடகனைக்கண்டு
வஞ்சனையில்லாமற்றூன் மாயனைவேண்டிஐவர்
தஞ்சம்உன்பாதம்போற்றி தற்காக்கவேணுமய்யா.

### பாண்டவர் சொல் வசனம்.

அரிகரி நமோ நாராயணா கபடநாடக அவதாரம்பொருந்திய அடியார்களை காக்கவந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே பதினேழாநாள் யின்றையதினமாகையால் உமக்கு சமதையானவனென்று சல்லியனை தேர்சாரதியாகவமைத்து கர்ணன் நாகாஸ்த்திரம்கொண்டு யுத்தம்செய்ய வந்திருக்குறானே இதுசமையம் அடியார்களைக்காக்கவேணும் அய்யா கிருஷ்ணதேவரே.

### கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்.

பதிவிட்டு கெதிகலங்கி ஐவர்நீங்கள்
  பதிமூன்று வருஷம்பஞ்ச பாண்டவரானே
பதிசெய்யும் துரியனிட கொடுமைநீக்கி
  சந்திரகுலம் விளங்கிடவும் தர்மபூபா
யிதுவரையில் உங்களையான் பாதுகார்த்தேன்
  யீசன்செய லெப்படியோ யின்றைக்குத்தான்
அதிகபல முடைய கர்ணன் நாகபாணம்
  அபர்தடுக்க ஆராலும் முடியாதப்பா.

### கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருங்கள் பாண்டுபுத்திராகிய பஞ்சபாண்டவர்களே நீங்கள் யிளமைப் பருவமுதல் வனவாசம் பதிமூன்றுவருஷமும் யிந்தப்பதிநாருநாள் யிதுவரையில் உங்களுக்கு துரியோதனனால் யேற்பட்ட சதிசர்ப்பனைகளை நீக்கி பாதுகார்த்தேன் யின்றையதினம் கர்ணராஜனிட நாகபாணமானது யென்ன விபரீதம் நடக்குமோ திருவுளச் செய லெப்படியோ நானறிகிலேன் தர்மராஜனே.

### தர்ம்மர் சொல் தரு.

கபடநாடகசூஸ்த்திர — காளிங்கநிர்த்தனு
  அரிகிருஷ்ணதேவா
நிபுணாரகூத்தகுதா — சம்மாரனே-அரி
  கிருஷ்ணதேவா.
துரியன்பாதகஞ்செய்த — துன்பத்தைநீக்குவீர்-அரி
  கிருஷ்ணதேவா
பிரியமுடனன்பாய் — பிழையெல்லாம்காத்தாள்வாய்
  கிருஷ்ணதேவா

சின்னவயதுமுதல் — சிந்தனையில்லாமல்-அரி
கிருஷ்ணதேவா
பின்னையவரைக்கும்நீ — யெபலாககார்த்தீரே-அரி
கிருஷ்ணதேவா
கனத்தபலமுள்ள — கர்ண்ணனைசெயிக்கவும்-அரி
கிருஷ்ணதேவா
வனத்தில்கார்த்தமூர்த்தி — வந்துயிருக்றீரே-அரி
கிருஷ்ணதேவா
தேவேபதிரு — நாள்மட்டும்கார்த்தீரே
கிருஷ்ணதேவா
பதினேமூநாளினில் — பாம்புக்குபயந்தீரோ
கிருஷ்ணதேவா
நன்மைகள்செய்தவர்க்கு — நலம்பெருவார்களே
கிருஷ்ணதேவா
துன்மைகள்செய்தவர் — துன்பப்படுவாரே
கிருஷ்ணதேவா
யெங்களுயிருக்கு — யிடர்வந்தாலுன்செயல்
கிருஷ்ணதேவா
பங்குள்ளபடிதந்து — ஆண்டாலுமுன்செயல்
கிருஷ்ணதேவா.

கிருஷ்ணமூர்த்திசொல் திபிதை.

கார்ப்பதுவிரதமுன்னோர் கருதியமொழிப்படிக்கு
தோர்ப்பனைதுடரலாமோ சொகுசானபாண்டுமைந்தா
சேர்படுதணலுமைந்த திருவிளைச்செயலேவென்று
போர்ப்புரிசமருசெய்ய பொருந்தியேபார்ப்போம்வாரும்.

வசனம்.

வாருங்கள் பஞ்சபாண்டவர்களே கார்ப்பது விரதமென்கிற பழமொழிப் படிக்கு நடக்கிறவனாயிலும் திருவுளச்செயலல்லாமல் வேறில்லை யுள்ளபடியாகுதா ஆலஸ்யம்செய்யாமல் யுத்தத்துக்கு எகுவோம் வாருங்கள் பஞ்சபாண்டவர்களே.

கிருஷ்ணமூர்த்தி சொல் திபிதை.

தர்மபூபதியே சேனை தனங்களையணிவகுத்து
பிரிவினைநாலு திக்கும் பிரித்துமே வெவ்வேராக
கர்ணன் மேல் சேனையொன்றாய் கவ்வியே வளைந்து பிப்போ
மாணமும் படையை வென்று மன்னனே போவோம் வாரும்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாரும் தர்மராஜனே ரதகஜதுரகபதாதிகளை அணிவகுத்து அதோடு குருக்ஷேத்திரத்தில் கர்ணராஜன் வந்திருக்கிறான் பார்த்தீர்க்கமாய் நம்மிட சேனை களைவிட்டு சக்ரவியூகம்போலே வளைக்கச்செய்யும் தர்மராஜனே.

தருமர் சொல் தரு

சேனைகளையொன்றாக கூட்டுங்கள்
குருக்ஷேத்திரம் சேருவோம் வாருங்கள்
ஆனைபரிரதமோட்டுங்கள் துருசாய்
அமர்க்களம் சேருவோம் வாருங்கள்
அண்டம் அதிர பேரியடியுங்கள் யெக்தன்
அருகில் முரசக்கொடி பிடியுங்கள்
துண்டு துண்டாக சேனை பிரியுங்ரின் யோடி
துரியன் யெதிர்பட நில்லுங்கள்

துஷ்ட்டத்துய்மன் சொல் விருத்தம்.

படபடென துடிதுடித்து துஷ்டத்துய்மன்
படைகளையும் வெவ்வேறாய் அணிவகுத்து
மடமடெனபற்கடித்து உதட்டைகவ்வி
மதவீமன் கொக்கரித்து தெண்டுங்கொண்டு
திடமுடையகாண்டீபன் ரதமுமேறி
தேவதுந்துபிமுழங்க ஆர்ப்பரித்து
கடலொலிக்கும்போலதும்பி ஐவர் சேனை
கர்ணனிடயெதிர்புரிந்து நிற்கின்றனே.

பொது வசனம்.

இவ்விதமாக துரியோதனனிட சேனைகளும் தர்மராஜன் சேனையாகிய இருசித்துப் படைகளும் யெதிர்த்து நிற்கிற சமையத்தில், தர்மபூபதி சகா தேவராஜனை அழைத்துச் சொல்லுகிற விதங்காண்க.

தர்மர்சொல் வசனம்.

வாருந்தம்பி சகாதேவராஜனே நீர் சதுதியாக துரியோதனனிடத்திற் சென்று ஒருவசனங் கேட்கவேண்டியது எங்களைவருக்கும் முப்பத்திரெண்டடிகொண்ட அரண்மனையாக ஐந்துமனைவிட்டால் போதும் ராஜாச்சியம் தேவையில்லையென்று துரியோதனனை கேட்டுவாரும் தம்பி சகாதேவா.

சகாதேவன்சொல் வசனம்.

அப்படியே தேவரீர் உத்தாரப்படிக்கு அவ்விடம்சென்று கேட்டு வருகி றேனென்று அண்ணாவாகிய தர்மராஜர் பாதத்தில்வணங்கி துரியோதனனைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

சகாதேவன்சொல் விருத்தம்.

பெரியதந்தை யீன்றெடுத்த மைந்தனென் றும்
பேர்பெற்ற அண்ணாவே அடியேன்போற்றி
சிரியவராம் தர்மர்மொழி கேட்டுவந்தேன்
செயலரியவந்தவொரு வசனம்கேளும்
உரியவர்கள் ஐவருக்கும் வெவ்வேறாக
உள்ளபடி அரண்மனையும் விடுவாயென்று
பிரியமுடன் அண்ணனவர் கேழ்க்கச்சொன்னார்.
பெரிதல்லவிட்டுவிடப் போதுமண்ணா.

வசனம்.

கேளும் அண்ணாவாகிய துரியோதனமகாராஜனே நாங்களைவரும் விலாடபுரம் விட்டுவந்து இந்த பதின்மூனாளாக கானல் பனி குளிர் இப்படி குருக்ஷேத்திரத்தில் நின்று அவதிப்படுகிறோமென்று எங்கள் அண்ணாவாகிய தர்மராஜா ஐவருக்கும் முப்பத்திரெண்டடிகொண்ட இரண்டரண்மனை விட்டால்போதுமென்று கேட்டுவரச்சொன்னார் இனி சுபவசனமாக வாக்கருள வேணும் துரியோதனமகாராஜனே.

துரியோதனன் சொல் தரு.

ஏதடா நீயேளிதங்கள் பேசவும்வந்தாய்
அடா சகாதேவனே
இன்றையதினம்பொருத்து வாடா நீயிங்கே
சூதனென்றயாதவனும் சொன்னமொழியால்
நீ யென்னிடம் வந்து
சூக்ஷமாயொருவசனம் கேழ்க்கவந்தாயோ

சகாதேவன்சொல் தரு.

உள்ளபடி அண்ணன்மொழி கேட்டுநான்வந்தேன்
பொருமனதாய்ஐந்தூடனே விட்டுவிடுவீர்
கள்ளதினமென்றுநீ நினைக்கவேவேண்டாம்
கரியமாலவரையேன் தூஷணிக்குறாய்

துரியோதனன்சொல் தரு.

கடுகளவுமிடமுனக்கு விடுகவுமாட்டேன்
அடா சகாதேவனே
கருத்தினில்நினைத்துவந்ததை அறிந்தேனேயிப்போ
மடையனென்று எண்ணியெண்ணி வந்தாயோயிங்கே
வெகு ஞாயமாகவே
மரியாதையுடன்சென்று போடாநீயிப்போ

சகாதேவன்சொல் தரு.

அண்ணனென்ற மரியாதை வைத்தேனேயுன்னை
ஓகோ துரியராஜனே
ஐவர்யிருக்கயிடம் கேழ்க்கநான்வந்தேன்
கடுகுயிருக்கவும்யிட மில்லையென்றுநீ
தீரமுடன்சொன்னாயோடா துரியராஜனே

துரியோதனன் சொல் விருத்தம்.

போதனையால் சகாதேவன் வந்துநம்மை
பொருந்தவே ரெண்டரை மனையுங்கேட்க
நீதியாய்வந்தவனும் யென்முன்னின்று
நெரியுடனே ஐவருக்கும் யிடந்தாவென்று
மாதவகாற் பலங்கொண்டு யிவ்விடம்வந்து
மதிப்பில்லா தெதிர்புரிந்து வசனம் சொன்னான்
யேதுநீ அமைச்சிமிஷம் அஸ்வத்தாமா
யிருந்துவிட்டால் சூதுசெய்வான் மாயன்தானே

துரியோதனன் சொல் வசனம்

கேளும் சலலியமகாராஜனே அப்பா கர்ணராஜனே அய்யா அஸ்வத்தாமனே என்னிட அரண்மனையொன்றும் கர்ணனிட அரண்மனை யொன்றும் ஆகயிரண்டு அரண்மனையும் என் உயிருடனே அந்த யாதவனுடைய தந்திரம்

கொண்டு கேழ்க்க வந்தானல்லவா அதாவது எளிதம்செய்ய வந்ததோ அல்லது கர்ணனிட நாகபாணத்துக்குப் பயந்து சம்மதிக்க வந்தவன்போல் காணுது எது யெப்படி யிருந்தபோதிலும் செம்பருந்து வாகனனுடைய இடையனை நம்பக்கூடாது யென்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது சகாதேவன் தர்மராஜனிடத்தில் சொல்லுகிறவி தங்காண்க.

சகாதேவர் சொல்நொண்டிசிந்து.

தாக்ஷண்யமுள்ளயெந்தன் - தமயனேயுந்தன் மொழிதட்டாம லே - சூக்ஷமாய்துரியனிடம். யானும் - சென்றுமேஜந்தமனை கேட் டதினல் மாயானை தூஷணித்தவன் - பின்னுல் - மனையொன்றும் கடையாது கடுகனவே - சண்டைக்கு வாங்கவென்ருன்-பாவிசொ ல்லைதட்டாமல் வந்துவிட்டேன் ஓட்டாரமாய்— தந்தினதன.

சகாதேவன் சொல் விருத்தம்.

அண்ணாவேதுரியராஜன் அருளியவார்த்தைகேளும்
வண்ணமாம்கடுகிருந்து வழங்கவும் யிவடந்தன்னில்
உன்னியயிடமுமில்லை யோடிநீபோடாவென்று
பின்னமாய்துரியன்சண்டை புகழுடன்செய்வோமண்ணு.

செனம்.

யென் அண்ணுவாகிய தர்ம்மபுத்திரரே உங்கள் மொழிபடிக்கி துரியோ தனனிடத்திற்சென்று ஐவருக்கும் ரெண்டரை மனைவிடுமென்றுகேட்டதர்க்கு செம்பருந்து[illegible]ராகின்ற இஷ்டனுடைய தந்திரம்யான் அறிகுவேன் யுத்தத் துக்குவாங்கவென்று துரியோதனன்சொல்ல நான்வந்துவிட்டேனென்று வச னித்துயிருக்கும் காலத்தில் அஸ்வத்தாமன் வருகிறவி தங்காண்க.

அஸ்வத்தாமன்சொல் விருத்தம்.

சிரஞ்சீவியாகவும்நான் பாரின்மீதில்
ஜென்மித்தேன் தந்தையுயிர்போகச்செய்த
வரம்பெத்தேன் உயிருடனேனிருக்க
வையகத்தில்யெனைநகைப்பார் அவனையிப்போ
மரணமிட துஷ்ட்டர்களை யெந்தன்கையால்
மாண்டிடவும்அவனைநான் செய்யாவிட்டால்
துரோணரிடமைந்தனுநான் அஸ்பமென்று
சொல்வதுநீதியல்லா துரியமன்னு

அஸ்வத்தாமன்சொல் வசனம்.

கேளும்துரியோதனமகாராஜனே யென்தந்தையாகிய துரோணாச்சாரியரை நேற்றுயுதினம் பதினாறாம்நாள் மூர்ச்சையடையும்படி செய்த துஷ்டத்துய்மனை யின்றையதினம் பதினேழாம்நாளில் கொல்லாவிட்டால்ஜிரஞ்சீவியாய்நான் உயிர்பெத்து யிருந்ததுயென்னபலனுச்சது யென்று வசனித்துயிருக்கிறகாலத்தில் துஷ்டத்துய்மானவன் சொல்லுகிறவிதங்காண்க.

துஷ்டத்துய்மன்சொல் கந்தார்த்தம்.

அஸ்வத்தாமாவுன் அப்பனைப்பார்க்கிலும்
அதிகமோயில்லுனக்கு
துஷ்டத்துய்மனான் அடிக்கவேயுன்னையும்
துண்டாகவெட்டிவிடுவேன்
சஷ்ட்டியின்சாதிருதிரையின்பேர்கொண்ட
சவுரியம் நானிருவேன்
யிஷ்டத்தைப்போல வந்தனுனுன்னையும்

துஷ்டத்துய்மன்சொல் தரு

விடுவேனோயிப்போ யுந்தனையானும்
மடியவும்வைப்பேன்
விடுக்குறேன்பாணத்தால் மடிக்குறேனுந்தனை
யெடக்குவசனம்சொல்லி முடுக்காகவந்தோனை - விடு

அஸ்வத்தாமன் கந்தார்த்தம்.

யென்னடாயெந்தனை யிகழ்ந்தாய்பேசுராய்
யிரும்பாதவிபுனக்கு
பன்னவென்றநீபகிஷ்களைடையுராய்
டையனேயுந்தனைநான்
சின்னபின்னப்பட சிதறிடஅடித்துநான்
சேர்க்குறேன் யெமபுரத்தை
வண்ணமுடனெந்தனிட வாளினாலுந்தனை

அஸ்வத்தாமன்சொல் தரு.

வதையருப்பேனே காங்கொண்டு
சிதையருப்பேனே
வதைகாரவெட்டியே பகையெல்லாம்தீர்க்குறேன்
ஜெகமெச்சவேயிப்போ அகமரவாட்டுறேன் (வதை)

துஷ்டத்தாய்மன் விருத்தம்.

குதிரையின்பேர்படைத்த அஸ்வத்தாமா
குரியாகவேயீன்ற துரோணர்தன்னை
கெதிகலங்கிபாரில்விட பதினாறாநாள்
கிஞ்சிதமும்அஞ்சாமல் அடித்துக்கொன்றேன்
விதியுனக்குமென்கையால் மாளவென்று
வீரனாய்வந்துவிட்டாய் உன்னையிப்போ
பதைபதைக்க வுடல்வேறுகால்வேறாக
பாணத்தால்கண்டிப்பே னிதோபாருன்னை

துஷ்டத்தாய்மன்சொல் வசனம்,

அஸ்வமென்னப்பட்ட குதிரையின்பேர்கொண்ட அஸ்வத்தாமனே உன் பிதாவாகிய துரோணர்சாரியாரை னேற்றியதினம் பதினாறாநாளில் மூர்ச்சையடையும்படி செய்துவிட்டேன் யின்றையதினம் உனக்கு காலமாய்விட்டது பதுங்காமல் வாடா அஸ்வத்தாமனே.

அஸ்வத்தாமன்சொல் தரு.

துஷ்டத்தாய்மனென்றிடுமதிபல  தீரனே
துர்க்கிசுமுட்டியேசுடனிலகப்பட  செய்குவேன்
அஷ்டமச்சனியதுபோலவும்வந்தியோ  வீரனே
அடிகருமேறுந்தன்னையெதிர்படவில்லடா  சூரனே
யெந்தன் சரத்தாலுந்தன்  பொந்திவிழமடித்து
சிந்துசிந்தாகவுன்னை  சிதரஅடிப்பேனிங்கே
சீறிவந்தாயடா  மீறிவந்தாயுன்னை
நீறுநீறாகவே  வாரியரையுரேன்-சுரு
மீறிவந்தவனானான்  சாகவடிக்குறேன்
நீருநீருபட  தணலாய்மூட்டுறேன் (துஷ்ட)

துஷ்டத்தாய்மன்சொல் தரு.

அஸ்வத்தாமனுன்யென்றிடும்  அதிபலதீரனே
அதிகபிலமுனக்குண்டோ  யென்னெதிர்படவில்லடா
கஸ்திகள்செய்யவும்  சவுரியமுண்டோடா தீரனே
நசுக்கிப்புழிகுறேன்  கரும்புகள்போலவேயுந்தனை

கையில்தனுவெடுத்து தொய்யவிடுகுறேன்
யெய்யுங்கணைக்குயுன்னை யிரையாய்கொடுக்குறேன்
யேகிவந்தாலுன்னை சாகவடிக்குறேன்
வேகமுடனேகணை தொடுக்குறேன்பாரிதோ
வாகுவல்லயம்கொண்டு திரேகபழிக்குறேன் - அன்

துஷ்டத்தூய்மன்சொல் விருத்தம்.

பாஞ்சாலன்மைந்தனை பாங்குள்ளதுஷ்டத்துய்மன்
அஞ்சாமல்அஸ்வதம்தன்னை அடிக்கவும் ரதத்தில்சாய்ந்தான்
வஞ்சகனடித்தானென்று வசிப்பமாய்அஸ்பன்சேனை
நஞ்சாககொடியோன்முன்பு நவின்றிடதுரியன்வந்தான்.

பொது வசனம்.

பாஞ்சாலபிடமைந்தன் துஷ்டத்துய்மனிடபாணத்தினல் அடிப்பட்டு யிளைப்பாகி அஸ்வத்தாமன் யிரதத்தில் சாய்ந்துவிடவும் சேனைகளோடிசொல்லதுரியோதனன் யுத்தத்திற்கு வருகிறவிதங்காண்க.

துரியோதனன்சொல் கவி.

கடகடவென்றுபல்லை கடித்துமேதுரியன்தானும்
மடியவும்தஷ்ட்டாயுன்னை மாரிபோல்பாணம்விட்டேன்
பிடியதுயிடித்தார்ப்போல யெரிபாணம்சக்ரபாணம்
விடுகவும்துஷ்ட்டத்தூய்மன் விழுந்தானேபாரிறம்சேர்ந்து

பொது வசனம்.

பாஞ்சாலனிடகுமாரனுகிய துஷ்ட்டத்தூய்மன் சோர்ந்துயிளைப்பாகி யிரதத்தில் சாய்ந்து யிருக்கிறதைக் கண்டு வீமசேனன் துரியோதனனை யெதிர்க்கிறவிதங்காண்க.

வீமன்சொல் தரு.

வந்தேதநானிதோனில்லடா துரியாயுந்தன்
வலுவால்யெனையும்நீ வெல்லடா
வந்தாப்யெனைஜெயிக்க வலுவிருந்தால்வாடா
உந்தன்பலமுரிதி யரியவேணுமேபிப்போ - வந்

துரியோதனன்சொல் தரு.

யெந்தன்கரத்ததாலுன்னேபாரடா வீமா
யெமன்பதியைசேர்க்குறேன்
யெந்தன்கைபாணத்தால் யேமன்பதியடைய
உந்தனைசறைதயாமல் விடுவேனோஅடவீமா யெந்த

வீமன்சொல் தரு.

யேமன்பதியைசேர்க்கவே துரியாவுன்னே
யெடுத்தேன்கெதையைப்பாரடா
யேமன்பதியளிக்க வீமனுனிருக்குரேன்
நேமம்குலையச்செய்வேன் காமன்யெரிந்ததுபோல்-யேம

திரியோதிரன்சொல் தரு.

யெரிபாணங்கைபிலெடுத்தேன் நில்லடாவீமா
யெரியக்கனையைவிடுத்தேன்
யெரிபாணம்விடுகுறேன் சிரியப்பயலேயுன்னே
கரியாய்கரிக்கியெரி தணலாயுரிக்கிடுவேன்-யெரி

வீமன்சொல் தரு.

துரியன்விடும்பாணங்களெல்லாம் கெதையெடுத்து
சுழட்டியேமோதியடித்தேன்
துரியன்விடுத்தபாணம் தூளாய்பாக்கடித்து
யெரியகெதையெடுத்து யெரியும்சரமருப்பேன்-துரி

துரியோதனன்சொல் தரு.

மோகனஅஸ்த்திரமெடுத்தேன் யிப்போதுவீமா
மூர்ச்சையாகமடிப்பேன்
மோகனஅஸ்த்திரம்கொண்டு சோகப்படசெய்குவேன்
சாக்கனைவிடுத்தேன் தேகமழியவென்று-மோக

வீமன்சொல் விருத்தம்.

எதிர்த்தவீமன்மேல் துரியன்பாணம்
இயலானமழைபோல சொரிந்திடவும்

துதித்தேஅன்பாய் மாயவனை
  தொழுதுவீமன் பாணமெல்லாம்
குதித்தேபிடித்து சேர்த்தவொன்றுப்
  கொடுத்தான்ராசில் ஓடியும்
பதைத்துதுரியன் யிளப்பாகி
  படுத்தான் ரதத்தில் சோகையுடன்.

பொது வசனம்.

இவ்விதமாக துரியோதனன்விட்ட பாணமெல்லாம் வீமசேனன் பிடித்தவொன்றாய்ச் சேர்த்து சுழட்டி துரியோதனன் ராசில் யோடிவந்து தன் பலங்கொண்டவரையில் கெதையால் மோதியடிக்கவும் இளப்பாகி இரதத்தில் துரியோதனன் சாய்ந்துவிடவும் கர்ணன் பார்த்து ஓடிவந்து வீமனை வளைத்துக்கொள்ளுகிற விதங்காண்க.

கர்ணன் சொல் திபிதை.

மணிமுடிதரித்தஅந்த மன்னனையடித்தாயுன்னை
கணங்கொண்டபாணத்தாலே கர்ணனடிப்பேன்பாராய்
வனம்விட்டவாரணம்போல் வந்துமேகிக்கிகொண்டாய்
க்ஷணப்பொழுதாகுமுன்னே உன்திராணியையறிவேன்பீமா.

வசனம்

அடா வாடா வீமசேனா வணங்காமுடிபடைத்த துரியோதனமகாராஜனையடித்தாயல்லவா உன்னை யென் சக்கிராயுதத்துக்கு இரைகொடுக்கிறேன் பாரடா வீமசேனா.

வீமசேனன் சொல் தரு.

மரணமுனக்குநேர்ந்தபடியால்  ஆடாகர்ணராஜனே
வந்துயெதிரினிலகப்பட்டுக்கொண்டா  யுந்தனையிப்போ
ஆரணமண்டலமேகிடவுன்னை  தூக்கிகெதையால்
அடிக்கவந்தவன்யெதிரிலில்லடா  வல்லவனானால்
வல்லவனான்யென்று  வந்தாயடாயிங்கு
வீரம்பேசிடும்  வாய்வுமைந்தனும்

மூர்ச்சையாகிட கர்ணராஜனும்
அல்லலாகிய அகோரபாணமும்
தொடுத்துவிட்டவும் அமர்க்களத்தினில்
சோர்ந்துவீழ்ந்தனன் வீமராஜனும்

பொது வசனம்.

இவ்விதமாய் கர்ணனுடைய பாணத்தினால் அடிபட்டு வீமசேன னிளைத்து விழுந்துகிடக்கிறதைக் கண்டு தர்மராஜன் ஓடிவந்து கர்ணனை வளைத்துக்கொண்டு யுத்தஞ்செய்கிறவிதங்காண்க.

தர்மர்சொல் திபிதை.

வீமனும்பிளந்துபாரில் விழுந்ததைதர்மர்கண்டு
தீமைகள்செய்தானென்று திடுக்கெனஓடிவந்து
தாமிஷமில்லாமற்றன் தன்கையில்தனுவெடுத்து
நேமமாய்கர்ணன்தன்னை நெரியவேவளைத்துக்கொண்டார்.

தருமர்சொல் தரு.

அடாயிழிகுலத்தானேநீ அங்கதேசாதிபதியென்றுமே
துரியன்குடையாள யிச்சொத்துக்காகவெகு
கொடிகட்டிபடைகளையும் கூட்டியேவந்து
திடமாகரதமீதிலேறிவெகு தீரனென்றுமேவந்தாய்
உடலும்மெலிந்துபாரில்விழுவாய் நான்
உள்ளபடிசொன்னேன் மொழிதப்பாதுகர்ண

கர்ணன்சொல் தரு.

ஒருவனுக்குநீபிறந்து தர்மா
மற்றொருவனுக்குபேர் சொல்லும்வகையதுபோல
தீரமுடன்வெந்தனை யிப்போ
வெகுதீரமாயிழிகுலத்தானென்று சொன்னாய்
வெரிபாணமாயிர மெடுத்துயானுமே
யேவினேன்தப்பாது உந்தனுயிர்போகும்
உரியவர்களுடனோடி சென்று
திருசாய்உந்தனிட கூடாரம்யேகிவிடும்தர்ம்மா

பொது வசனம்.

இவ்விதமாக கர்ன்னராஜன் தர்ம்மராஜன் இருவரும் யுத்தம்செய்து கர்ணன் அனேகபாணங்களைவிட தர்ம்மராஜனுக்கு திரேகம்மெலிந்து யிளைப்பாகி தம்பியாகிய அர்ச்சுனனுடனே சொல்லுகிறவிதங்காண்க.

தர்மர்சொல் திபிதை.

அர்ச்சுனதம்பிகேளும் அதிபலமுடைடகர்ணன்
வரிசையாயனேகபாணம் விட்டதால்மிகமெலிந்தேன்
துருசாகஅமரில்சென்று துணிவானகர்ணன்தன்னை
பெரிதானபாசுபதாஸ்திரம் புரிந்துமேமடிவிப்பாயே.

தர்மர்சொல் வசனம்.

வாரும்தம்பி அர்ச்சுனமகாராஜனே கர்ன்னனென்கிறவன் பாணம் விட்டு யென்னுடைய திரேகம் மெலிவாகும்படி செய்துவிட்டான் யெனக்கு யிளைப்பாகிவிட்டது நான் பாடிசட்டாரம்.போய்வருகிறேன் நீ தாமிஷடிசெய்யாமல் யுத்தம்செய்து கர்ணனை பாரில் விழும்படியாய் அடித்து வாரும் தம்பி அர்ச்சுன.

பொது வசனம்.

இவ்விதமாக தர்ம்மராஜன்மேல் கர்ணராஜன் பாணம்விட்டு திரேகமெலிவாகும்படி செய்ததை அர்ச்சுனன் பார்த்து மகாகோபத்துடன் இரண்டு கண்களும் அக்கினிபொரிபரக்க அண்ணனாகிய தர்ம்மராஜரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கர்ணனை ஜெயிக்கும்படியாய் ரதமேரிக்கொண்டு வருகிறவிதங்காண்க.

அர்ச்சுனன்வருகிற தரு.

தேரின்மீதில்விஜயன்யேரினனே போருசெய்திட
தேரின்மீதில்விஜயன்யேரினனே
தேரிலேரியே சவ்வாரியாகவே
போருசெய்திட சிருய்யாளிபோல்
வீரனாகிய கர்ண்ணராஜனை
வெல்லவென்றுமே விஜயபூபதி (தே)

பொது விருத்தம்.

கோடைபிடியிடிப்பதுபோல் விஜயராஜன்
கொக்கரித்துவந்துமே பிர்மன்மாலும்

தேடரியாயீசனவர் யீந்தபாணம்
  செங்கையிலேந்தியே ரதத்திலேறி
மேடையின்மேலுட்கார்ந்து விஜயன்தானும்
  மேன்மையுடன்மாயவரும் பூரிகட்டி
சர்டவிடகடலொலிபோல் கதும்பிசேனை
  சமர்க்களத்தில்கர்ணனெதிர் னின்றிட்டாரே.

பொது வசனம்.

இவ்விதமாக பாண்டுபுத்திரனாகிய அர்ச்சுனராஜன் கிருஷ்ணமூர்த்தியுடன் யிரதமேரிக்கொண்டு யுத்தகளத்தில்னின்று வலம்புரிசங்கை தொனிக்கவும் துரியோதனன் சேனை செவிடுபத்தி விழுந்ததைக்கண்டு கர்ணராஜன் சொல்லுகிறவிதங்காண்க.



கர்ணராஜ்ன்சொல் கர்தார்த்தம்.

கிரீடியின்பேர்கொண்ட விஜயனேயுன்னிட
  கெர்வமுமதிந்துநீயும்
இருமையும்கொண்டந்த விலாடபுரந்தனில்சென்று
  சுதற்கணையேவல்செய்து
வசங்கொண்டபேடியின் ரூபமாய்வழங்கிநீ
  யிருந்ததும்கானரிகுவேன்
பாம்பின்சரங்கொண்டு தீரமாயசுவபாணத்தினால்

கர்ணராஜன்சொல் தரு.

சிரமறுப்பேனே சரங்கொண்டு
குலமறுப்பேனே
சிரமதுதணிக்குறேன் யொருகணையாலுன்னை
அரவபாணங்கொண்டு அருக்குறேன்பாரிதோ (சிர)

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்.

கொடிகட்டிரதமேறி குலங்கெட்டராஜனே
குவலயந்துதித்திடுமென்று
மூடிபெத்ததுரியனுக் கிச்சகம்பாடியே
மூடனேயுன்சேதியறிவேன்
படிவாங்கிசோர்தின்னும் பலமுள்ளபாகனே
பாரடாவுன்னுயிர் பறக்கடிப்பேன்
அடியற்றமரம்போல் விழுந்திடவுந்தனை

அர்ச்சுனன்சொல் தரு.

அடிக்குறேன்வாடா பாணத்தாலே
மடிக்குறேன்ஜாடா
அடிக்குறேனிதோபார் னொடிக்குள்ளேயுந்தனை
தடிகொண்டுயிலுப்பக்காய் அடிப்பதுபோலவே-அடி

அர்ச்சுனன்சொல் விருத்தம்.

ஆடரவன்வாயினில் அகப்பட்ட
தவளைபோலுந்தன்மீதில்
கோடையிடிபிடிப்பதுபோ லொருபாணம்
குறியாகவிடுகிறே னெதிரில்வாடா
மூடனேயுன்னையும் யெமபுரம்சேர்க்கவே
மோகனஅஸ்திரம்கொண்டேன்
வேடனைப்போலவே செடிமறைவாகிநீ
விடுதிக்கியேகியேபோடா

அர்ச்சுனன்சொல் வசனம்.

இவ்விதமாக அரவமென்றிடும் சர்ப்பத்தின் வாயினில் அகப்பட்ட தவளையைப்போல அடா கர்ண யென்னெதிரி லகப்பட்டுக்கொண்டாய் யிடிபா

ணம் மோகனுஸ்த்திரம் இதுகளை உன்மீதில் யேவினேனேயானல் யெமபதி சேர்ந்துவிடுவாய் சொல்லாமலோடிப்போடா கர்ணராஜனே.

கர்ணன்சொல் நொண்டிச்சிந்து.

அடடாபேடிவிஜயா - யென்னை - ஆங்காரம்கொண்டுநீ யோடிப்போவென்ருய் - திடமர்னநீதிவான்போல் வந்துநீ - செப்பிஞய்உந்தனையும் மெந்தன்சரத்தால் - மடியவுமொருநொடியில் - உன்னை வாரியறையுறேன் பார்விஜயா-யிடிபாணம்கையிலெடுத்தேன் பாரும்-யெமபுரம்சேர்க்குறேன்-ஒருநொடியில்-தத்தினம்தனனம்.

அர்ச்சுனன்சொல் தரு.

யேதடாபாகவனே    மிஞ்சிமிஞ்சிநீ
யிகக்ஷிகள்பேசவெகு    ஆணுவங்கொண்டாய்
காதககுரியனுக்காய்    வந்துசவு[illegible]
பேசுருய்நீசொந்த    உரியவனே
பேதகமானகுலம்    நீயும்
பிண்டகத்துக்    கிச்சகம்பேசியே
அந்தருதககுரியனிடம்    சேர்ந்து
நல்லசுயகுலமென்றுநீ    வந்தயோயிங்கு

கர்ணன்சொல் தரு.

குந்தியின்மைந்தனே நீ    நல்ல
குருகுலவங்கிஷம்    நானுமென்ருய்
யிந்திரதேவனவர்    உன்னையீன்றிடும்
தந்தையின்    பேருமறிவேன்
யெந்தகுலத்தில்    பிறந்துநீயும்
யெவனிடபேர்சொல்லி    நீயுமெதிர்த்தாய்
உந்தனையான்    யிந்தப்பொழுதில்
உருண்டிடசெய்குறேன்    ஒருகணையால்

அர்ச்சுனன்சொல் தரு.

நாகமிருக்குதென்று    யிங்கே
நாடியெனைஜெயிக்க    ஓடிநீவந்தாய்
வேகமாயகோர    பாணமும்விட்டு
வீரிடஅடித்துவுயிர்    பாரில்மடிப்பேன்

சாகவுனக்காலமாச்சே யிப்போ
சனதனைவிடுத்துவுயிர் போகச்செய்குறேன்
பாகனேயுன்நாகபாணம் விட்டு
பதரிடஅரிகுறேன் ஒடனேயிப்போ

கர்ணன்சொல் தரு.

அரகராமகாதேவாசம்போசங்கரா பார்வதிநேயாபரமதயாளா
தீனரக்ஷகாதிரிபுரதகனு காலகண்டனேகரியுரித்தோனே
சூலசடாதராசுந்தரநாதா வேலனையீன்றவிமலதயாபரா
நீலகண்டனேநிர்மலசொருபனே அரியயன்மாலுக்கரிதாய்நின்று
சுருதியின்பொருளேசோதியேசுடரே கிரியமால்மைத்துனகங்கையின்தேவா
கிரியகர்ணன்திருவடிபோற்றி உந்தனைக்கோரிஉயர்ந்திடுநாகம்
பந்தமாய்கொண்[illegible]குணன்மீதில் விந்தையாய்விடுக்கவேண்டினேன்யீசா
[illegible]பாணம்யேகிடவென்று உந்தனைப்போற்றினேன்ஓம்ஆசிவனே.

முடுக்கு விருத்தம்.

ஆங்காரகோபமுடன் கண்களும்சிவந்திட
அதட்டியவன் அம்புவிடவே
செங்கையில்நாகமது பொங்கமுடன்கொண்டுமவன்
செழுப் சிலை யெடுத்துவிஜையா
திங்களணியீசனவர் செங்கமலர்பாதமிது
சிந்தையி லழிந்துவிடவே
பொங்கமுடன்வந்ததவும் விஜயன்முடிசிதறிட
பொருந்திவிடு பாம்புகணையே.

பொது வசனம்.

இவ்விதமாய் கர்ணராஜன் சிந்தாக்கிராந்தனாய் அதிக கோபத்துடனே தனுசில் சர்ப்பாணத்தைப்பூட்டி அர்ச்சுனன் சிரமறுக்குறேனென்று வீரசவுரியங்கொண்டிருக்கிறதைப் பார்த்து சாரதியாகிய சல்லியராஜன் சொல்லுகிற விதங் காண்க.

சல்லியராஜன் சொல் தரு.

மார்புக்குங்காமிக்கும் னேருண்டெனவாக
மத்தியில்குறிபாரும்
மாருக்குநேராக நீராய்பாணத்தை

ஆருக்கும்புடங்காத அர்ச்சுனன்மடியவும்
நெருக்குதல்கள்பட தீரமுடனேக்கணை
வீரமுடையபெரும் நாகந்தனையெடுத்து
மார்புக்கும்கர்ணனையென் நல்லமொழியைக்கேளும்
தருணமிதுசமையம் மரணமடைந்திட
அர்ச்சுனனவன் மூர்ச்சையடைந்திட
துருவுடன்பாணமும் னெரியுடனேவிட (மார்புக்)

கர்ணமகாராஜன் சொல் தரு.

தேர்ப்பாகனுகிய சல்லியாயெவர்
செயலிதுவோவெருங் கல்வியோர்
நேரைநேராபோட்டும் வீரனைப்…ராதே
சேரும்கணையினுலே பாரில்ஐவர்மடிவா…

சீரியநாகமும் மீறிஜெபிப்பதை
ஆசரிவாரிது தீரமும்பேசுறாய்(தேர்ப்பா)

தீரமுடன்யானும் யொருகணைவிடுகிறேன்
அரன்செயலிதுவென்று யாசரிவரிப்போ
கின்னயமாகவு மரியவுங்கூடுமோ
அரனிடசெயலீது யெவரறிவாரிதை.(தேர்ப்பா)

கர்ணன் சொல் திபிதை.

காண்டீபன்சிரமறுக்க வென்றுநாகம்
கருத்தின்படியிசைந்ததென்று யிந்தவேளை
வேண்டியேபிசணையும் மனதிலெண்ணி
வீரமுள்ளசர்ப்பகணை கையிலேந்தி
நீண்டிருக்கும்வில்லதனில் பூட்டிமந்த்ரம்
நெரியுடனேபோற்றி தூபதீபமிட்டு
காண்டீபன்சிரமறுக்க வென்றுகர்ணன்
கதும்பியவன்கொக்கரித்து யெதிர்நின்றுனே.

கர்ணன் சொல் தரு.

சங்கராசிவனேயென்று கர்ணராஜனும்
நாகபாணமும்கொண்டு

118120

சரசமாயெடுத்ததும்பி கொ[illegible]கரிக்குறான்
சிங்கமதுபோலேசீறி படுகளத்தி[illegible]ல்-கர்ணராஜன்
ஜெயமுரசடவிலுடங்கா நின்றுமே அடியுங்கோளென்றான்.

சல்லியன் சொல் தரு.

சல்லியராஜனென்றபாகனும்தேரை யொருநொடியினிற்போக
சவ்வாரியாகபுரவிகளை தூண்டியோட்டினான்
வல்லவனுய்வந்துநிற்கும்விஜயனருகில் ரதம்வ[illegible]நிற்கவும்
வண்மையுடன்சல்லியனும் சாரதிசெய்தான்.

கர்ணராஜன் சொல் தரு.

அர்ச்சுனன்சிரமறுக்கசர்ப்பக்கணையை கர்ணன்கையிலெடுத்து
ஐவருமடியவென்று பாணமெடுத்தான்
யொருகணை[illegible]ன்விடுக்க யிறந்துபோகவும்
[illegible]பதியடையவும் யோக்கினேன்சல்லியனே.

சல்லியராஜன் சொல் தரு.

மன்னவனேகர்ணமகாராஜனேயிப்போ யென்தன்வார்த்தையைக்[illegible]ளும்
மார்புக்குசரியாய்கணை யேகவிடுவீர்
கண்ணனென்றயாதவனைநம்பக்கூடுமோ அவன்மோசங்கள்செய்வான்
கர்ணனேநீயென்மொழியை கேளும்நீரிப்போ

கர்ணன் சொல் தரு.

யென்தன்கணைதப்பிடுமோவென்றுமேநாகம்அந்தபாணமும்கொண்டு
யிச்சையாகவிஜயன்மீதில் விட்டுவிடவும்
விந்தையாயிருக்குமந்தநாகபாணமும் யிங்கேயோடியேவந்து
விஜயனைக்காணமல்நாகம் திரும்பிவந்துதே

சல்லியன் சொல் தரு.

விஜயனைக்காணமல்நாகம்யோடிவந்துமே கர்ணராஜனைக்கண்டு
விட்டுவிடுயின்னமொரு திரமாகவே
யிசைவாகயோடியெங்குந்தேடியேவந்து முடியறுத்துமே
யேகினேன்வருவேனென்று நாகம்சொல்லவும்.

கர்ணராஜன் சொல் - திபிதை.

மறுக்கணைவிடவுங்கர்ணன் மாளாதுவென்றுசொல்ல
அரிதமாயரவயோதி துணிபடயிறந்தபின்பு

பெரிதானசல்யராஜன் பொருந்தாமல்ரதத்தைவிட்டு
சுருக்காககுதித்திரங்கி தூரப்போய்நின்றுவிட்டான்.

சல்லியன் சொல் திபிதை.

பகையெலாம்போச்சேகர்ண பட்டதும்வீணாய்ப்போச்சே
ஜெகமெச்சரதமுமேறி தீரமாய்விஜயன்தன்னை
அகமற[illegible]ட்டுமுந்தன் அரவமுமடியசல்லி
வகையுடன்ரதமும்விட்டு வண்மையாயிரங்கினனே.

சல்லியன் சொல் வசனம்.

வாரும் கர்ணமகாராஜனே நான் சொல்லும் வசனத்தை தள்ளிவிட்டாய் பின்னும் மறுகணை விடுமென்று நாகம் கேட்கவும் அதையும் தடுத்துவிட்டாய் நாகமும் இறந்துவிட்டது நானும்பட்டபாடெல்லாம் வீணாய்ப்போச்சுதென்று சாரதியாயிருந்த சல்லியராஜன் ரதத்தைவிட்டு யிறங்கிப்போகவும் கர்ணராஜன் சொல்லுகிறவிதங் காண்க.

கர்ணராஜன் சொல் திபிதை.

அர்ச்சுனன்ரதத்தைகிருஷ்ணன் அழுந்தவேமண்ணிலூணி
ஒருகணைநாகத்துக்காய் ஒளித்துமேவிட்டான்மாயன்
பெரிதல்லயின்னமிந்த பிலமெங்கேயோடிப்போச்சு
துரிதமாய்விஜயன்தன்னை துணிபடசெய்குவேனே.

கர்ணன் சொல் வசனம்,

ஸ்ரீகிருஷ்ணதேவர் கர்ணராஜன் விட்ட நாகாஸ்திரத்திற்குப் பயந்து பூமியில் ரதத்தை அழுந்த ஊணவும் நான்விட்ட நாகபாணத்துக்கு நேர்தப்பி விசையனிட முடியாகிய சிரோரத்தினத்தைக் கொண்டுவந்தாய் யினி யென் பலமும் போய்விட்டதென்று நினைக்கவேண்டாம் வாடா கிரீடியென்கிற அர்ச்சுனனே.

அர்ச்சுனன் சொல் தரு.

யினியென்னிடபிஷ்டத்தில் யெண்ணமெல்லாமுடிப்பேன்
அந்தகிருஷ்ணனவனே
யெடுத்தசபதம் தொடுத்துநான்கெலிப்பேன்
தனியொருத்தனேகினன் முடிப்பேன்
அந்தசூதன்மகனை

தவுடுபொடிபட உதிரநானடிப்பேன்
கனியுதிர்வதுபோலே தடிகொண்டுஅடிப்பேன்
கர்ணணவனை
சக்கைசக்கையாய்ஆலை கரும்புபோல்முறிப்பேன்

கர்ணன் சொல் தரு.

உன்னைபெலியிடவந்தவன் நானடாபயலே
பாரும்என்திராணியை
உயிருடன்உன்னையும்விடுவேனோ நானடாவிஜயா
உன்னைபெலியிட்டு ஓரிபிடுங்கிடச்செய்வேன்பாரடா
உன்னிடஅன்னை அழுகவும் அம்பலமாகவும்விடுப்பேன்
சின்னகுலமென்று செப்பினாய்யெந்தனை விஜயாநீ
யென்பலங்கொண்டு யேளிதம்பேசினாய்விஜயா
வன்னமுடனுன்னைபிளப்பட ரெண்டாய்கிழிப்பேன்
யிந்தமண்ணில்மடியவும் கன்னம்தலங்கிட அடிப்பேன்

பொது வசனம்.

இவ்விதமாக கர்ணராஜனும் அர்ச்சுனனும் ஒருவருக்கொருவர் யுத்தசவுரியம்கொண்டு வசனித்திருக்கிறகாலத்தில் கிருஷ்ண தேவர் சொல்கிறவிதங்காண்க.

கிருஷ்ணமூர்த்திசொல் விருத்தம்.

தனஞ்செயனேபாருமுந்தன் கண்ணாலேதான்
தவலத்தாய்வந்துவிட்ட கர்ணனுக்கு
கனங்கொண்டபரசுராமர் சாபத்தாலே
கரந்தனிலேஆயுதங்க ளில்லாமற்றான்
வனம்விட்ட வானரம்போல் விழித்துநிற்கும்
வகையதுவும்பார்த்துவுந்தன் தனுவெடுத்து
ரணக்களத்தில்கர்ணனுயிர் போகச்செய்ய
தெரியானபாணமது விடுநீமன்னா.

கிருஷ்ணமூர்த்திசொல் வசனம்.

கேளும் அர்ச்சுனராஜனே கர்ணராஜனுக்கு யிளமையில் பரசுராமர்கொடுத்த சாபம் யிப்போது யுத்தத்தில்வந்து சேர்ந்தது நிராயுதனாய் நிற்கிறதைப் பாரும் அர்ச்சுனா.

அர்ச்சுனன்சொல் திபிதை.

கர்ணனையிரதத்தில்காணோம் கடவுளேயென் அண்ணவான
தர்மரைதூக்கிவந்து தடக்தேர்மேல்கர்ணனைப்போல்
மர்மமாயென்கையாலே மாளவும் துரியன்செய்தான்
யென்னமாய்கொல்வேன்சுவாமி யெளியகானென்செய்வேனே

அர்ச்சுனன்சொல் வசனம்.

கேளும்கிருஷ்ணதேவரே யிரதத்தில் கர்ணனைமறைத்துவிட்டுயென் அண்ணவாகிய தர்ம்மராஜர் சோகையாய் பாடிகூடாரத்தில் தன்னை மறந்திருக்கும் காலத்தில் கொடிய பாவியாகிய துரியோதனன் தூக்கிவந்து கர்ணனைப்போல யெனக்கு யெதிரியாக ரதத்தில் உட்காரவைத்து யென்கைபாணத்தினால் மடியவேணுமென்று யெண்ணங்கொண்டதற்கு நான் யென்னசெய்வேன் கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

கல்லமதிகுறித்தாய் மைத்துனா
நான்சொல்லும்வகையைக்கேளும் மைத்துனா
வல்லவனுதுரியன் தர்ம்மரைத்தூக்கி
வண்ணமுடன்கொண்டு யேகிட

அர்ச்சுனன்சொல் தரு.

சுவாமிநானென்னவென்று கூறுவேன்
யென்தமயனவர்தானே கிருஷ்ணரே
தீமைகள்செய்கின்ற துரியனும்மோசம்
செய்திடவென்று நினைத்தானே

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

அண்ணனும்பாடியிலிருக்குறார் யோடி
அறிந்துநீவந்திடும் விஜயனே
யென்னமதியாலுந்தன் மனதின்படிநின்று
யியம்பினுமுந்தனை மெச்சினேன்

அர்ச்சுனன் சொல் தரு.

வரமொன்றுதருகுவீர் யேகவும்யேகி
வருகிறேனுனிதோ கிருஷ்ணரே
யொருகொடிதன்னிலே அண்ணனைநான்பார்த்து
யோடிநான்வருகிறேன் தேவனே

அர்ச்சுனன்சொல் திபிதை.

அண்ணனைபார்க்கவென்று அர்ச்சுனனோடிநன்றாய்
வண்ணமாய்பாடிசென்று வகையுடன் அண்ணனுக்குதன்
பொன்னடிசரணம்போற்றி போதவேயென்றுமன்னன்
யென்னென்று அண்ணருக்கு மியம்புவோமென்றுகின்றான்.

தர்மர்சொல் விருத்தம்.

அர்ச்சுனாதம்பிவாரும் அமரதுசெய்துநீரும்
பொருவனுப் தனித்துவந்தாய் யுலகளந்தோனுமெங்கே
துரியனும் தவிரகர்ணன் துரைமன்னர்மடிந்தசேதி
பிரியமாய்நானும்கேழ்க்க புகலுவாய்ராஜமன்னா.

தர்மர்சொல் வசனம்

வாரும் தம்பி அர்ச்சுனா குருக்ஷேத்திரம் நீங்கி நீ தனித்து கிருஷ்ணமூர்த்தியைவிட்டு தனியாகவந்தாயே நீசெய்தயுத்தத்தில் துரியோதனன் தவிர கர்ணன் முதலான ரதகஜதுரகபதாதிகள் மடிந்ததை விபரமாய் சொல்லும் தம்பி அர்ச்சுனா.

அர்ச்சுனன் சொல் தரு

அண்ணாவேயுன்னெதிர்பேசவும்நாவெனக் கில்லையேநான்
அரும்பாவிதுரியனும்மோசம்செய்தானென்று யெண்ணினேன்
யென்னென்றுசொல்லுவேன்யேளிதமாகநீர் பேசவீரோ
யெந்தன்வசனமண்ணாபியம்பிடுவீரோநீர் அறிகிலேனே

தர்மர்சொல் தரு.

வானவர்நம்மைப்போல்வேணஅவதிப்பட்டார் அறிகுவாயோ
உத்தனுக்குவந்தயிடைரநானறியவும் அர்ச்சுனனே

ஒளியாமலென்னுடன்தெரியவுரையடா    கண்மணியே
வந்தவிதியதுவழியிலேநிற்குமோ    விஜயபூபா

அர்ச்சுனன்சொல் தரு.

கர்ணன்நாகபாணம்மோதியறைந்துமே    பிறந்தபின்பு
கரியமால்வண்ணனும்கண்டித்திடவென்று    சொல்லிவிட்டார்
மரணமடையவும்செய்யாமல்நானுமே    மயங்கினேனே
மன்னவாஎன்னுடன்னைப்போல்தோற்றனன்    மதிகுலைந்தேன்

தர்மர்சொல் தரு.

காண்டீபனென்றுமேகையில்தனுவெடுத்தாய்    விஜயபூபா
கவரியமில்லாதமனிதனைப்போலானாய்    அர்ச்சுனனே
நீண்டதனுவில்லும்நீயேன்பிடித்துநின்றாய்    விஜயபூபா
நெரியானமன்னன்போல்பெரியதனுவெடுத்தாய்    போதும்போதும்

தர்மர் சொல் திபிதை.

அர்ச்சுனயுந்தனக்கு அக்கினிதேவன்தந்த
பெரிதானகாண்டீபத்தைப் பிடித்துமேரதத்திலேறி
கரியமால்துணையுமாக கௌரியவானுமேயினி
விருதாவில்பொழுதுபோக்க வீணனாய்வந்தாய்போதும்.

தருமர் சொல் வசனம்.

வாருமப்பா அர்ச்சுனா அக்கினிதேவன்கொடுத்த காண்டீபத்தினால் காண்டீபனென்றுபேர்வந்த பேர் போதுமப்பா அர்ச்சுனனே.

அர்ச்சுனன் சொல் தரு.

கடகடவென்றுபல்லைக்கடித்துமே    விஜயராஜன்
கடிலொலிபோலதிம்பிதிம்பினான்
படபடவென்று துடிதுடித்துமே    விஜயராஜன்
பாரிலுள்ளதேசர்முதலோர்பதறிக்கதறவே
மடமடவென்றுதனுசையெடுத்துமே    வில்லில்பூட்டி
மண்ணும்விண்ணும்அதிரப்பதறுறான்
கோடையிடிபோல்இரடியும்    பதைபதைத்திட
குனிந்துநிமிர்ந்துதனுவைவிழுக்குறான்.

பொது வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனன் காண்டீபத்தை தர்மபூபதி ஹீனிதம் செய்தாரொன்று தமயன்பேரில் வருத்தமடைந்து காண்டீபத்தில் தனுவைப்பூட்டி எதிர்த்து நிற்கிறதை கிருஷ்ணமூர்த்தி யறிந்து யோடோடியும் வருகிறவிதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி சொல் தரு.

பதறாதேயென் றுமேகிருஷ்ணரும் பாங்குடனேயோடிவருகிறார்
பதறாதேஅர்ச்சுனா பாவங்கள்நேர்ந்திடும்
மதிமோசமாகிடும் மன்னவனேசொன்னேன்
பதறாதேபதறாதே கெதியுனக்கிட்டாதே
அதிவீரனென்றாலும் மதிமோசம்போகாதே
அண்ணன்மனம்நோக்காலது விண்ணவர்பதமுனக்கிட்டாது
திண்ணயமாகவும் அண்ணனைபகையாதே
சொன்னேன்சொன்னேன்பழி யுன்னைவிடாதிப்போ.

கிருஷ்ணமூர்த்தி சொல் விருத்தம்.

பதறாதேயென் றுகிருஷ்ணர் பாங்குடனேயோடிவந்து
யிதவாகவிஜயன்கையை யிருக்கியேபிடித்துகொண்டு
மதங்கொண்டுதனுவெடுத்து மன்னன்மேல்விடுவுமன்னா
கெதிவந்துநேர்ந்ததென்று கிருஷ்ணரும்கேட்கலுற்றார்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருமப்பா தனஞ்செயனே உங்களண்ணாவாகிய தர்மபூபதியேயென்று வந்ததுவும் தவிர தர்ம்மராஜன்பேரில்கொண்ட வருத்தத்தையும் விபரமாகச் சொல்லுமப்பா அர்ச்சுனராஜனே.

அர்ச்சுனன் சொல் விருத்தம்.

அண்டர்களும் மாமுனிவர் அமரர்தேவர்
அதிகபல முடையவர்கள் யெவரானாலும்
மண்டலத்தில் எனையீன்ற தந்தையின்னம்
மன்னவர்க ளுடன்பிறந்தோர் உத்தார்தாமும்
யெண்டிசையும் பேருடைய காண்டீபத்தை
யியலாக யேளிதங்கள் செய்தபேரை

சண்டபிர தனுவெடுத்து உயிரைவாங்க
சபதமது கோரினேன் கிருஷ்ணதேவா.

அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளும் கிருஷ்ணமூர்த்தியே அக்கினிதேவன்கொடுத்த காண்டீபத்தைத் தேவர்கள் ராக்ஷதாள் யின்னம் யென் தாய் தந்தை தமையன் மன்னமண்டலீசர் காண்டீபத்தை யேளிதமாகவசனிக்கிறவர்களை உயிருடனேவிடுகிறதில்லையென்று சபதங்கோரியிருக்கிறேன் அய்யா கிருஷ்ணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் திபிதை.

போர்செய்யுங்களத்தில்நின்று பொருந்தவேயிகக்ஷிசொன்னால்
நீகூரியவசனபெய்தான் கொற்றவாவிஜயமன்னா
தேரியபெரியோர்வார்த்தை திடமுடன்கேட்டிருந்தும்
சீரியகோபம்விட்டு திரும்பியேவாரும்போவோம்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருமப்பா அர்ச்சுனா போர்செய்யும் படுகளத்தில்நின்று உன்னிடகாண்டீபத்தை யிகக்ஷியாக யெவர்கள் சொன்னபோதிலும் உன்சபதப்படிக்கு நடத்தவேண்டியதுதான் இந்த யிடத்தில் தர்மராஜர் வசனங்கொண்டு நீ கோபித்தல்சரியல்ல வாரும் படுகளம்போவோம் அர்ச்சுனராஜனே.

ஆர்ச்சுனன் சொல் தரு.

யெடுத்தகணைவிடுகவும் அடியேனுக்கு
யியம்புவீர்கிருஷ்ணதேவரே
யெடுத்தகணைவிடுக்க யியலாயருள்புரியும்
தொடுத்தசரத்தைவிட்டு தருசாயேகுவோமய்யா
அளந்ததேவாயென் தமையன்மேல்விடுகவென்று
கரந்தனில்பிடித்தயெந்தன் கணைவிடயுந்தன்வாக்கில்
வாந்தரவேணுமென்று வணங்கினேன் அடியேன்யானும்
அரிகிருஷ்ணதேவதேவா அருளுவீர் அடியேனுக்கு.

அர்ச்சுனன் சொல் வசனம்.

கேளுமையா கிருஷ்ணதேவரே யென்தமையனாகிய தர்மராஜர்பேரில் நான் யெடுத்த காண்டீபத்தில் யேரிட்ட பாணத்திற்கு யினி யெதைத் தொடுக்கிறது சொல்லும் கிருஷ்ணதேவரே.

கிருஷ்ணதேவர் சொல் திபிதை.

காண்டீபந்தனிலேரிட்ட கனமுள்ளதனுவையந்த
நீண்டதேர்பாடிகம்பம் நெரிபடவிட்டுவாரும்
தாண்டிநாம்யேகியந்த சமர்க்களம்தனிலேசென்று
மாண்டிடகர்ணன்தன்னை மடிந்திடச்செய்வோம்வாரும்.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருமப்பா அர்ச்சுனனே யிந்த பாடிகூடாரத்தில் நடுஸ்தம்பத்தை உன் காண்டீபத்தில் யேரிட்டபாணத்தினால் முரிய அடித்து வாரும் குருக்ஷேத்திரமேகுவோம் அர்ச்சுனராஜனே.

அர்ச்சுனன்சொல் வசனம்.

என் அண்ணவாகிய தர்ம்மபூபதியின் உத்திரவு பெற்றுக்கொண்டு வருகிறேன் கிருஷ்ணதேவரே.

அர்ச்சுனன்சொல் திபிதை.

அண்ணையுன்பாதம்போற்றி அடியேனுன்செய்தகுற்றம்
மன்னிக்கவேணுமெந்தன் மகிபனேபோற்றிபோற்றி
வண்ணமாய்பொழுதுக்குள்ளே வதைசெய்துகர்ணன்தன்னை
கொண்ணுமேமடியச்செய்வேன் போகநீர்விடையுந்தாராய்.

தர்மர்சொல் திபிதை.

உன்னிடகுணமறிய உள்ளத்தில்நினைந்தயானும்
பின்னமாய்கிரீடியுன்னை பொருந்தவேதூஷணித்தேன்
யென்னிடமனதில்கிலேசம் யில்லைநீயேகியந்த
கர்ணனைமடியச்செய்து கடினமாய்வாரும்தம்பி.

தர்மர்சொல் வசனம்.

வாரும் தம்பி அர்ச்சுனா நான் உன்சபதப்படி நடக்கிறாயோ யில்லையோ வென்று உன்னுடைய திறத்தை அறிந்தேன் அதினால் யென்மீதில் கோபம் கொண்டாயென்று மிகவும் சந்தோஷப்பட்டேன் யிதுதவிர வேறொன்றும் மனக்கவலையில்லை நீர் படுகளம்யேகிவாருமப்பா அர்ச்சுனனே.

பொது வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனராஜன் தன் அண்ணவாகிய தர்ம்மரைப்போலயிருக்கிறதென்று தர்மரிருக்கும் பாடிகூடாரத்துக்கு யேகவும் யுத்தத்துக்கு பயந்து முதுகுகாட்டி அர்ச்சுனன் ஓடிப்போனானென்று கர்ணராஜன்சொல்லுகிறவிதங்காண்க.

கர்ணன்சொல் தரு.

வாரும்வாரும்சபையோர்களே வந்து
வரிசையாயொருமிக்கசேருங்கள்
மாறுமாறெனபேரிகை யிந்த
மண்டலமதிரவே அடியுங்கள்
வெத்திவெத்தியென்றேமுரசுகள் அத்திநகர்சுத்தியடியுங்கள்
துத்தாரிகர்பத்துமுழங்கிட நன்றாய்தொனிபுங்கள் மங்களங்கூறியே

கர்ணராஜன்சொல் வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனன் பயந்து முதுகுகாட்டி ஓடிப்போனானென்று கர்ணராஜன் ஜெயபேரியடிக்கவும் நகுலராஜன் வருகிறவிதங்காண்க.

நகுலராஜன்சொல் திபிதை.

ஆ! ஆகா! சபாஷ்கர்ணா அதிவீரனென்றாயிந்த
மாகாணந்தன்னிலுள்ள மன்னர்கள்மெச்சநீயும்
போகாமல்வாடாயுன்னை போர்செய்யநகுலன்யானும்
சோகாமல்மடித்துயுன்னை உயிர்போகச்செய்வேன்வாடா

நகுலராஜன்சொல் வசனம்.

அடாவாடாகர்ணராஜனே ஆ ஆகா சபாஷ் நீயே கெட்டிக்காரன் உன்னைச் செயிக்கமாட்டாமல் அர்ச்சுனராஜன் முதுகுகாட்டி ஓடிப்போனானல்லவா யிதோ நகுலன் காணிருக்கிறேன் வாடா கர்ணராஜனே.

நகுலன்சொல் தரு.

தேரினிலேறியே வீரியம்பேசினாய் கர்ணா
சேவகமறிகிறேன் வாடாயெதிர்பட பயலே
கூறான அம்பினால் குத்தியேயுன்னுடல் கிழிப்பேன்
குதிக்காதேநில்லடா வதைப்படவாளியை விடுப்பேன்

கர்ணராஜன்சொல் தரு.

புலியைக்கண்டபூனையோடிப்பதுங்குமோ பயலே
பூச்சிக்காட்டாதேநீகிரிடியைப்போலோடிப் போடா

யெலியைக்கண்டுபூனை யேங்குமோடாசிறு நகுலா
யெதிர்க்காமல்விஜயன்போலோடிப்போடாநீ பயலே

### நகுலன்சொல் தரு.

மன்னவனென்றுதேரேறிவந்தாயே யுந்தனை
வாறியக்கறையுமேறினன்றேடிக்காம்பிடித்தேன் உன்னையும்
கொல்லாமல்போவனேவந்தேனென்திராக கர்ணு
யொருகணையேவினேன் தப்பித்துக்கொள்ளடா பார்ப்போம்

### கர்ணராஜன் சொல் தரு.

யென்னடாபயலேஆணவம்கொண்டுஅம்பையு மேவினாய்
உன்னையும்வதைபடசெய்குறேன் பாரடா
அண்டாதகோபமாய்கர்ணனும்பாணந்தை யெடுத்து
அடிக்கநகுலனும்பாரில்விழுந்தானே சோர்ந்து

### சகாதேவன்சொல் திபிதை.

கர்ணன்கைபாணம்பட்டு கலங்கியேநகுலன்தானும்
சரணைகளற்றுபாரில் சோர்ந்துமேவிழுந்திருக்க
தருணத்தில்சகாதேவன் தமயனைப்பார்த்துநன்றாய்
மரணமுமிடுவேனென்று மதியாமலோடிவந்தான்.

### பொது வசனம்.

இவ்விதமாக கர்ணன்கைபாணத்தால் அடிப்பட்டு நகுலன்சோர்ந்திடப் பதைப்பார்த்து சகாதேவன் சொல்கிறவிதங்காண்க.

### சகாதேவன்சொல் திபிதை.

அண்டங்களிடிந்தாற்போலே அதட்டியேகொக்கரித்து
சண்டப்ாதனுவெடுத்து சகாதேவனோடிநின்று
வண்டைப்போல்மண்டியிட்டு வகையுள்ளபாணம்கொண்டு
கண்டிப்பேன்உன்னையிப்போ கர்ணனேயிங்கேவாடா

### சகாதேவன்சொல் வசனம்.

இவ்விதமாகக் கர்ணன் கையினால் நகுலன்பட்டு பாரின்மீதில் சோர்ந்து தன்னைமறந்து யிருக்கிறதை சகாதேவன்பார்த்து கர்ணன்பேரில் யுத்தம்செய்கிறவிதங்காண்க.

சகாதேவன்சொல் தரு

நல்லதுநல்லதடா பாகனே — யிதோ
வந்தேனேநில்லடா பாகனே
அல்லல்படவுமெங்கள் — அண்ணனையடித்தாயே
விடுவேனோபாகனே — நொடியினில்கொல்கிறேன்

கர்ணன்சொல் தரு

ஆகட்டும்ஆகட்டும்அடாபயலே — நான்
அடித்துஉன்னுயிர்போகச் — செய்குறேன்
சாகக்கணையெடுத்துவிடுகிறே — னடா
தப்பித்துக்கொள்ளடா — பயலே

சகாதேவன் சொல் தரு.

கணைக்குக்கணையெடுத்துவிடுகிறேன் — உன்னை
கண்டித்துவிழுந்திடச் — செய்குறேன்
பனைவெட்டிசாய்ந்தாற்போல்சாய்க்குறேன் — யிந்த
பாரிலுள்ளவர்மெச்ச — நீட்டுறேன்.

கர்ணன் சொல் தரு.

சிறியபயலேயெதிர்நில்லடா — உன்னை
சிரமறுத்துயிப்போ — கொல்குறேன்
முறியக்கணையினாலே — யுந்தனையிந்த
தரையில்விழும்படியாய்ச் — செய்குறேன்.

சகாதேவன் சொல் தரு.

விதியைப்பாராமல்நீயுமூடனே — யிதோ
சதையைவதைக்குறேன் — நில்லடா
கெதிகலங்கிடபாரினிலென்னுடன் — உன்
விதியாலெனையெதிர்த்தால் — விடுவனோ.

கர்ணன் சொல் தரு.

கடைகெட்டசகாதேவப்பயலே — யிதோ
மடியக்கணையெடுத்து — விடுகுறேன்

உடலுமுயிரிழந்துபேசிட யானும்
வடவாக்கினியாஸ்திர பேசினேன்

அர்ச்சுனன் சொல் திபிதை.

அண்ணனைப்பார்த்துகிரீடி அமர்க்களம்வந்துசேர்ந்து
தன்னிடதம்பிமார்கள் சகாதேவநகுலராஜன்
பின்னமாய்ப்படுகளத்தில் பிதறியேசோர்ந்திருக்கும்
மன்னரைவிஜயன்தூக்கி மாருடனணைத்துச்சொல்வான்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

இவ்விதமாக தர்மராஜரை அர்ச்சுனன்பார்த்து விடைபெற்றுக்கொண்டு குருக்ஷேத்திரம்வந்து தன் தம்பிமாராகிய நகுலசகாதேவர்களை கர்ணனுலடிபட்டு யிளைப்பாய் தன்னைமறந் திருப்பவர்களைத் தூக்கி மார்போடணைத்து மூர்ச்சைதெளியவிட்டு யுத்தத்திற்கு வருகிறவிதங்காண்க.

அர்ச்சுனன் சொல் விருத்தம்.

இத்திசையி லுண்டான நரிநாய்பூதம்
  மியலான சென்னும் கழுகுகாகம்
குத்தியுனைத் தின்றிடவே செய்யாவிட்டால்
  குந்திமகன் விஜயனு னல்லகர்ணு
சத்திவேல் பாசுபாங்கு வில்வில்பூட்டி
  சதைசதையா யறுத்திடுவேன் வாடாவென்று
மெத்தவேல் ஆக்ரமித்து வுதட்டைக்கவ்வி
விஜயனுமே கர்ணனெதிர் யுதம்பிநின்றான்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அடா கர்ணராஜனே நானில்லாத சமயம்பார்த்து யென் தம்பிமார்களை அடித்துப் பாரில்விழச்செய்தாயல்லவா உன்னை நரி நாய் பூதம் கழுகு காகம் பிடுங்கித்தின்னும்படிச் செய்யாவிட்டால் நான் கிரீடியாகுவேனோ நீ கற்ற வித்தைகளெல்லாம் காட்டடா கர்ணராஜனே.

கர்ணன்சொல் தரு

சண்டைக்குபயந்தோடினவன் கிருஷ்ணன்பலத்தாலே
சமர்புரியவும் திரும்பிவந்தாயோ அடாவிஜயபயலே
அண்டவிடமில்லாமலே அடித்துமேயுந்தனையிப்போ
அமர்க்களத்தில்மடியவிடுகுறேன் அடாவிஜயபயலே

அர்ச்சுனன்சொல் தரு.

அமர்க்களத்தில்சமருசெய்துமே உந்தனையிப்போ
அடித்துவுடலைக்கிழிப்பேனுனை அடாகர்ணராஜனே
யேமன்பதியில்நீமையடையவே யுந்தனையிப்போ
யெதிர்த்துகணையால்சாகவடிக்குறேன்கர்ணமூடப்பயலே

கர்ணன்சொல் தரு.

சாகக்காலம்வந்தபடியால் அடா திருட்டுவிஜயா
சண்டைசெய்யமிண்டனாய்வந்தாய் அடா திருட்டுவிஜயா
மேகமண்டலமதிறுமேயெந்தன் பாணம்விடுத்தால்
மெய்மறந்திடகாலம்வந்துதோ கிரீடிவிஜையா

அர்ச்சுனன்சொல் தரு.

அண்டமளந்திடும்மாயகிருஷ்ணரும் யென்னருகிலிருக்கவும்
அமருசெய்யவும்பயந்துபோவனோ அடாயீனப்பயலே
சண்டைசெய்யவும்வீரனாய்வந்து காலம்கழிக்க
ஜ[illegible]வித்தைகள்பேசவந்தாயோ அடா திருட்டுகர்ணா

கர்ணராஜன்சொல் திபிதை.

அர்ச்சுனனேகிருஷ்ணதேவன் ஆங்காரங்கொண்டுநீயும்
கெர்ச்சித்துயுத்தம்செய்ய கெர்வமும்கொண்டாயுன்னை
வர்ச்சித்தேன் தனுவினாலே உன்முடியறுத்துப்பாரில்
மெச்சிக்கக்குழியில்போட்டு மேவிநான்புதைப்பேன்பாராய்.

கர்ணன்சொல் வசனம்.

அடாவாடா அர்ச்சுனா கிருஷ்ணனுடைய ஆங்காரம்கொண்டு ரொம்பவும் அட்டகாசம் செய்குறாய் உன்னை துண்டுதுண்டாய் வெட்டி ஆழக்குழி பரித்துப்போடுவேன் பாராய் அர்ச்சுனா.

அர்ச்சுனன்சொல் கொண்டிச்சிந்து.

வெருங்கையனாகவும்நீ - கர்ணா - வீணாகவார்த்தையைவி
ளம்புகிறாய் - மரியாதையுடன்சென்று - நீயும் - மாளிகைசேருமெ
ன்று மகிழ்ந்துரைத்தேன் - தந்தின தன தனனம்.

கர்ணன்சொல் கொண்டிச்சிந்து.

யேளிதமாயர்ச்சுனனே - யென்னை - யெகடவிகடமாய் பேச
வென்று - யெண்ணியடாயுன்னை - யெனது - வாளும்வளைதடியும்

கொண்டுயுன்னை - வரியரய்கிழித்துவுடல்-உன்னை வாரியேயிறைப் பேய்போராகவும் - தக்கின தன தனனம்.

அர்ச்சுனன்சொல் கொண்டிச்சிந்து.

வீண்சமர்த்துபேசுவதினால் - கர்ணா - வீரியவானென்றுகூறு வரோ - யீனகுலமானவனே - வாடா - யெதிர்த்துசமர்புரிவோம் - விடமாட்டேன் - தக்கின தன தனனம்.

கர்ணன் சொல் கொண்டிச்சிந்து.

பேடியென்று பேர்படைத்தாய் - மூடா - பெண்டுகள்போலே யிப்போ பேசுபவனே - ஆடிவரும்பெண்களுக்கு - யேற்ற - ஆண முக னாகியும்நீ அமரில்வந்தாய் - தக்கின தன தனனம்.

அர்ச்சுனன் சொல் விருத்தம்.

கிராயுதனாகிநின்று ரீகரிலாவீரம்பேசி
அரவழக்குரைத்தாற்போல அதாரியாய்பேசுகின்றாய்
தோராதபாணங்கொண்டு தொடுக்கிறேன்கர்ணாவென்று
தாராளமாகபாணந் தனஞ்செயனெடுத்துநின்றான்.

அர்ச்சுனன் சொல் வசனம்.

அடா வாடா கர்ணராஜனே சூரியன் அஸ்தமாகிறகாலமாய் விட்டது யினி அவரவர்கள் யெண்ணப்படி நடக்கவேண்டியது தான் கர்ணராஜனே.

கர்ணன் சொல் கொண்டிச்சிந்து

கர்ணராஜன் கோபமுடனே - குதித்தெழுந்து - கருத்தில் சிவனேயன்பாய் தொழுதுமேயிந்த - தருணமிதுகாருமென்று - பாணமெடுத்து தனஞ்செயன்மேல்காணன் கின்றுசீறினான் - தக் கினம் - தன தனனம்.

அர்ச்சுனராஜன் சொல் கொண்டிச்சிந்து.

ஆயனோமன திலெண்ணி - கிரீடியும் அன்பாககாண்டீபத்தை கையிலெடுத்து பொருத்தவேதனுவதனில் - அப்போ பூட்டிவிஜய னுமேசரந்தொடுத்தான் தக்கின தன தனனம்.

கர்ணராஜன் சொல் கொண்டிச்சிந்து.

கடகடென்று பல்லைகடித்து - கர்ணராஜன் - கதும்பி அதும் பியுந்தான் - விஜயனைப்பார்த்து - அடங்காதபாணந்தனையும்.

விஜயன்மேல் - ஆக்கிரத்துடன்பாணம்விட்டுவிடவும். தந்தின தனதனனம்.

அர்ச்சுனன் சொல் நொண்டிச்சிந்து.

விஜயனும் பாணமெடுத்து - நீரத்துடன் விலகிடசரக்கூடம் கட்டிமுடித்தான் - கெஜமென்றயானைபைப்போல-காண்டீபனும் - சிங்கமுகா அஸ்த்திரத்தைகர்ணன்மேல்விட்டான், தந்தின தனதன

கர்ணராஜன் சொல் நொண்டிச்சிந்து.

பரசுராமர்சாபமதினுல் - பாணமற்று - பட்டமரம்போலேசின் ஞன் கர்ணராஜனும்- அரிகமோகாராயணுவென்று அம்பரம்திகம்ப ரமாய் நின்றுவிட்டானே. தந்தினம்தன தனனம்.

அர்ச்சுனன் சொல் நொண்டிச்சிந்து.

இதுசமையம் பாணம்விடென்றூர் - மாயவரும் - யியம்பிட வே அர்ச்சுனன் கணையெடுத்து - விட்டானனேகபாணம் - ரணக் களத்தில் - விழுந்தான் கர்ணனவன் - ரதத்தின்மேலே விஜயனும் விட்ட பாணம் - அப்போ வேகமாயோடியே கர்ணன்மார்பில் - அ சையாமலுருகியோட கர்ணன் - அரிவாசுதேவாயென்று - நெடி யோனைவேண்டி - முடியதுசோர்ந்ததுபார் - ரதத்தின்மேல்-மொ ழிந்தார்கள் பிர்மனுடசெயலென்றுமே தந்தினம் தனதனனம்.

பொது வசனம்.

இவ்விதமாக அர்ச்சுனன்விட்ட பாணமானது கர்ணராஜன் மார்பில் பட்டமாத்திரத்தில் யுருகியோடவும் மூர்ச்சையாகி கர்ப்ப கத்தேரின்மீதில் சாய்ந்துகிடப்பதை கதிரவன்பார்த்து சொல்லு கிறவிருத்தங்காண்க.

கிருஷ்ணமூர்த்திசொல் திபிதை.

பரிதியின்மைந்தனிந்த படுகளமூர்ச்சையாகி
கர்ணனுமிறந்தானென்று கதிரவன்கண்ணுல்பார்த்து
துரியனைச்சேர்ந்துயிந்த துன்பத்தையடைந்தானென்று
சலுதியாய்மேற்குத்திக்கில் சூரியன்மறைந்துபோனுர்

பொது வசனம்.

இவ்விதமாக சூரியபகவான் தன்குமாரனுகிய கர்ணராஜன் அர்ச்சனன் பாணம்பட்டு கர்ப்பகத்தேரின்மீதில் மூர்ச்சையாயிருக்கிறதைப்பார்த்து விச

ணப்பட்டு மேற்குத்திசையில் மறைந்தபின்பு யேழைப்பிராமணன்வருகிறவிதங் காண்க.

பொது வசனம்.

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தியென்கிறவர் கர்ணராஜன் கொடுத்த தர்மமானது சீவனைப்போகவொட்டாமல் வதைசெய்யு தென்று யிளமைமுதல் யிதுவரையில் கர்ணன்செய்த தர்மத்தை யாசகம்கேட்டு வாங்கவென்று கிருஷ்ணமூர்த்தி பிராமணரூபமாய் வருகிறவிதங்காண்க.

பிராமணன் சொல் தரு.

பேழைபிராமணன்தானே முஷ்டியெடுக்கும்
யேழைப்பிராமணன்தானே
யேழைபிராமணன்தானும் வந்தேன் அத்திகர் (யேழைப்)
அத்திகநாகந்தி அலைந்தேன்கர்ணனை தேடி.
யித்திசையில்வந்திருந்தால் யியம்புவீர்சபையோரே (யேழைப்)

வேதியர்சொல் திபிதை.

காசியிலிருந்துவந்தேன் கர்ணனை கோரியிந்த
தேசத்தில்கர்ணராஜன் திரவியம்கொடுப்பானென்று
ஆசையாய்வந்தேன்நானும் அரும்பசியாலேயிப்போ
ராஜனைக்கண்டபேர்கள் நவிலுவீரறியத்தானே-

வேதியன்சொல் வசனம்.

கேளுங்கள்சபையோர்களே நானு காசிப்பிராமணன் இந்த அஸ்திநா புரியில் கர்ணராஜனென்கிறவன் கேட்டபொருள் கொடுப்பதாக கேள்விப் பட்டுவந்து அஸ்திநாபுரியெங்கும் தேடிப்பார்க்குமளவில் குருக்ஷேத்திரத் தில் யிருக்குறாரென்று கேழ்விப்பட்டுவந்தேன் கண்டவர்கள் தெரியச்சொல் வீர்சபையோர்களே.

பொது வசனம்.

தெண்டம் தெண்டமையா சுவாமி அதோ படுகளத்தில் ரத த்தின்பேரில் தீபம் யெரியுது பார்த்தீர்களா பார்த்தேன் பார்த் தேன் அந்தரத்திலேதான் பள்ளிகொண்டிருக்குறார் போய்வாரு மையா சுவாமிகளே.

புரோகிதன் சொல் திபிதை.

ஆரப்பாரதத்தின்மீதில் ஆனந்தமாகநீரும்
தீரதரித்திரைசெய்தாய் தெரிந்துமேநானும்வந்தேன்

யேராளமாகதர்மம் யீக்திடும்கர்ணனெங்கே
திராளமாகசொல்லும் தளர்பதிமன்னர்மன்ன.

புரோகிதர் சொல் வசனம்.

ஆரப்பா யிந்த ரதத்தின்மீதில் சயனித்திருக்கிரவர் கர்ண ராஜன் யெக்தயிடத்திலிருக்குரார் சொல்லும் ராஜபூபனே.

கர்ணராஜன் சொல் வசனம்.

தெண்டம் தெண்டமையா சுவாமி நான் கர்ணராஜன் அடியேனிடத்தில் வந்த வகைகளை சொல்லும் வேதியரே.

வேதியர் சொல் தரு.

காசிவிஸ்வேசுரலிங்கா மகாதேவா
கர்ணனுக்குயிந்தகெதி வந்துநேர்ந்தது
பேசிடவும்சக்தியில்லை யெந்தன்பாபமோ
யீசன்செயலிதுதானோ யென்னசெய்குவேன்
யெந்தன்பசிதீரவந்தேன் கர்ணராஜனே
நான்வந்தசேதிதனை சொல்கிறேன்கேளும்
நாயகனேகருத்தறிவாய் கர்ணபூபதி
நானுமொருயேழைதானே காசிப்பிராமணன்
வருமையதுயிருந்திருக்க யேழைதனத்தால்
வந்துவுன்னைபார்க்கயெந்தன் வயறெரியுதே
அஷ்டமச்சனிபிடித்து யிந்தவேழமாய்
அரும்பசியினால்மெலிந்து யுன்னிடம்வந்தேன்
கஷ்டதிசையானதுவும் மூந்தியிவ்விடம்
சார்த்துக்கொண்டிருக்குது நானென்னசெய்வேன்
யெந்தயிடம்சென்றுயெந்தன் பசியைதீர்க்கலாம்
யெழுதியபிர்மன்விதி. தப்புவிடுமோ
சிந்தையில்நினைத்தபடி கடப்பதுமில்லே
சிவன்செயல்படிநடக்கும் யேகினான்வாரேன்.

கர்ணராஜன் சொல் ஜம்பை.

வேதமறையோதுகின்ற வேதியரேயொருவசனம்
விளம்புகிரேன்கேளுமையா விசனமதுவேண்டாம்

ஆதிமுதலிதுவரையில் ஐய்யமென்றுவந்தவர்க்கு
ஆடைபொருள்வேண்டும்வகையளித்துவிட்டேன்யானும்
மாதவனேயென்னிடத்தில்யிருக்கும்பொருளெதுவேனும்
மயங்காமல்கேட்டுவிடும் மகிழ்ந்துஉனக்களிப்பேன்
வாதைபடுதேவுயிரும் வாங்குமேதமூர்த்தியேநீர்
வருந்துவதை தருசாக மாதவரேகேளும்.

## வேதியர் சொல் விருத்தம்.

கோடிபொன் கொடுத்தாலும் பொருளில்லாது
  கொற்றவனே யென்மொழியை கேளுமிப்போ
வாடிவரு மானிடர்கள் யாவருக்கும்
  வண்ணமுடன் நீகொடுத்த தர்மம்கேழ்க்க
நாடியுன்னை வந்துவிட்டேன் கர்ணபூபா
  நல்மொழியால் கேட்டபொருள் தந்தால்காசி
கூடியெந்தன் மனைவியுடன் விதிதிசேர்ந்து
  கொற்றவனே காலகடன் கழிப்பேனையா.

## வேதியர்சொல்வசனம்.

கேளுமையாகர்ணபூபதியே நீயிருக்கிறகெதிகளையும் தெரிந்துக்கொண்டேன் பின்னும்நீர்பூண்டியிருக்கிற ரத்தினுபரணங்கள் மாணிக்கம் பதித்திருக்கிரகிரீடம் யெதுகொடுத்தபோதிலும் யென்னிட துருஅதஷ்டம் நிலைக்கஒட்டாது உம்மிட யிளமைமுதல் யிதுவரையில் செய்ததர்மத்தை கொடுத்தியானால் யென்மனையாளும்நானும் ஜெனனமுன்னபரியந்தம் காலம்கழித்துவிடுவோம்மகாராஜனே.

## கர்ணராஜன்சொல் வசனம்.

வாருமையாவேதியரே நீர்கொடுவென்றுகேட்ட தர்மத்தைக் கொடுக்க சித்தமாயிருக்கிறேன் தத்தம்கொடுக்கிரதற்கு ஜெலம்யில்லையே யென்னசெய்குவேன் சொல்லும் வேதியரே.

## வேதியர்சொல் அகவல்.

கர்ணபூபதியே கருத்தாககேளும்
சொன்னதானங்கள் சொகுசாகசெய்து
யிருக்கிறாயில் யேழையாயொருவன்
அருப்பசியாகி அன்னமும்கேழ்க்க

யென்னசெய்வோமென்று யேங்கியேநீரும்
அன்னம்பிடிப்பீடு அன்பாககாட்டின
வண்ணமாய்சுண்டு விரலையும்நீட்டினால்
தானங்கள்செய்ய ஜலமதுவருமே.

கர்ணராஜன்சொல் திபிதை.

மாயவன்செய்ததிங்கால் மதிபிறண்டெந்தனுக்கு
கோழைகள்நெஞ்சைக்கட்டி குரிகியேவருகுநிப்போ
யேழைநானென்றுயிங்கே யென்னிடம்வந்தநீரும்
தாழவேகேட்டதானம் தருகுவேன்வாங்கிக்கொள்ளும்.

கர்ணராஜன்சொல் வசனம்.

வாருமையாயேழைப் புரோகிதரே கிஷ்டன்செய்த கொடியவினையால் வரவா திரேகமெலிந்து மூச்ச ாராளமாய வாவில்லை நீ கேட்டபடிக்கு ஆதியோடந்தமாய்நான்செய்த தர்மத்தை தந்தேன் வாங்கிக்கொள்ளும் சுவாமியே.

வேதியன்சொல் வசனம்.

பிராமணன் குடுமப்பாவென்று கையைநீட்டி தானம் வாங்கிக்கொண்டு கர்ணன்சுண்டுவிரலை தூக்கி பிராமணன் கையில் தொங்கவிடவும் விரலில் தீர்த்தம் சரசரவென்றுபெரிகினபின்பு கர்ணனுக்குமோக்ஷம் தரவேண்டுமென்று கெருடவாகனருடராய் வருகிறவிதங்காண்க.

கிருஷ்ணமூர்த்திவருகிற தரு.

கெருடவாகனர்வந்தார் — குருக்ஷேத்திரம்தேடி
கெருடவாகனர்வந்தார்
கெருடவாகனர்வந்தார் — கின்னரர்புடைசூழ
வருணன்குடைபிடிக்க — வாய்வுசாமரைபோட - தரு
வானவராகிய — கோனவரிந்திரர்
வீணைகள்பாடிட — நாரதர்கூடியே (கெருட)

குந்தமாதேவியீன்ற — மைந்தன்கர்ணனுக்கு
விர்தையாய்விரசொர்க்கம் — தந்திடவேணுமென்று - தரு
குந்தியின்மைந்தனும் — முந்திபிறந்தவன்
விந்தைபதம்பெற — சிந்தைமகிழ்ந்திட (கெருட)

கர்ணன்பதமடைய கரியமால்விஷ்ணுவாகி
தருணமிதுவேயென்று அரிரூபமாகிஆயன் - சரு
கெருடனுமேறியே திருசுடநாயனும்
அரியுடரூபமாய் கர்ணனுமரியவே (கெருட)
நாலாம்பதமளிக்க நாயகியுடன்கூடி
மாலயன்விஷ்ணுவாகி வந்தார்படிகளத்தில் - சரு
மூலபலப்பொருள் காலமரிக்குமே
வேல்விழிமாதுடன் மேல்பதம்தர்திட (கெருட)

மகாவிஷ்ணுசொல் திபிதை.

தர்மங்கள்மிகவேசெய்யும் தயவுள்ளகர்ணனுந்தன்
மர்மங்களறியபாணும் மங்கையாளுடனேகூடி
செங்கெருடனேறியானும் சேர்வைதந்திடவேவந்தேன்
பொங்கமாய்பதமளித்தேன் போகுவாய்வைகுந்தந்தானே.

மகாவிஷ்ணுசொல் வசனம்.

வாருமப்பா கர்ணராஜனே பூலோகத்தில் தர்மம் மிகுதியாய் செய்தவனானபடியினால் யுத்தகளத்தில் மூர்ச்சையாகி வருத்தமடையுராயென்று வந்தேன் உனக்கு நாலாம்பதமாகிய வைகுண்டம் தந்தேன் அப்பா கர்ணராஜனே.

கர்ணராஜன்சொல் விருத்தம்.

அரிஅரிமுகுந்தா அற்சுதானந்தா
கரிகருள்புரிந்தாய் கார்மேகவர்ணா
சங்குசக்ராயுதா ஜானகினந்தனா
பொற்கரசயனா புண்டரீவர்ணா
நரசிம்மஅவுதாரா நாராயணனே
துளசிமணிமார்பா தசோயதைத்தமயா
முளரியநேத்திரா மூலாதாரரே
நாராயணாசரணம் நளினனேத்ராசருணம்
பாரெலாமீண்ட மெழுவனேசரணம்
பர்ப்பலசந்திரா சருணம்
அமலநிமலனேசருணம் வேதாந்தாசருணம்
ஆதிமூலமேஉன்பாதபங்கயம் சருணம்சருணம்.

கர்ணராஜன்சொல் திபிதை.

தேடியப்பொருளேயெல்லாம் செழுமறையோர்க்கேயீந்தேன்
கூடியமனையாளுக்குகுலயீனபலமுமீந்தேன்
நாடியேவளர்த்தோர்க்கெந்தன் நல்லியேஉயிரையீந்தேன்
வாடியேயிருக்கும்வேளை உன்மலரடிகண்டேன்கண்டேன்.

கர்ணராஜன் சொல் வசனம்.

அரிகரி நமோநாராயணா கெருடவாகனா சர்வசங்கார ஜானகிமணாள னே அடியேன் செய்த தர்மங்களை வேதியருக்கு யீந்துவிட்டேன் யென் மனையாளுக்கு யிழிகுலத்தாளென்கிற ஜாதியீனப்பொருளை யீந்துவிட்டேன் யென்னை வளர்த்தோராகிய திருதராட்டிரன் துரியோதனனுக்கு யென்னுடைய உயிரை யீந்துவிட்டேன் இதோ உன் திருஉளத்தைகண்டதும் யென் யேழு ஜென்மமும் நீங்கிவிட்டேன் அரிநமோநாராயணமூர்த்தியே.

கர்ணராஜன் சொல் தேவாரம்.

ஆதியேஅருளேயெந்தன் அர்ச்சுதாஅடியேன்வாழ்வே
சோதியேயுலகோர்தொழும்பராபரனே துதிசெயுஅமரர்நாயகனே
பாதகன்அடியேன்பட்டபோர்களத்தில் பாவுள்ளபாதமேகண்டேன்
யேதவரெவரும்யெனக்கெதிரில்லை யேழுபிறப்பினையுநாமிழந்தேன்.

கிருஷ்ணமூர்த்தி சொல் திபிதை.

அதிவீரனென்றுயுன்னை அமரர்கள்மெச்சகர்ணா
துதிபெருங்காந்தர்தேசம் சொகுசுடன்ஆண்டாய்பின்னும்
கதிரவன்மைந்தனுன்னை கண்டிக்கயெவரால்வந்த
விதிகளையுந்தன்வாக்கில் வளம்புவீர்தர்ணன்மன்னா.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் கர்ணமகாராஜனே நீசூரியனிடகுமாரன் அதிக பலவானென்று யாவர்களுக்கும் உன்னை பூசிக்குரார்களே அப்பேர்க்கொற்ற பலவான்களுக்கு யெவரால் இந்த துன்பம் னேரிட்டதோ அதை தெரியச்சொல்லும் கர்ணமகாராஜனே.

கர்ணராஜன் சொல் வசனம்,

கேளும் நமோநாராயணா யென்பலமும் ஆங்காரவீரசவுரியங்களெல்லாம் யெனக்கு சத்துருவாயிருந்த பஞ்சவர்கள் அடக்கிக்கொண்டார்கள் அடியேன்

உம்முடைய தெரிசனம்கண்டபோது யேழுபிறப்பையும்நீக்கி வைகுண்டம் தரவேண்டும் ஸ்ரீமன்னாராயணா.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

கேளும் கர்ணராஜனே உமக்கு யார் சத்துருக்கள் சொல்லுமப்பா கர்ண ராஜனே.

கர்ணராஜன்சொல் யெச்சரிக்கை.

கரியமாலைன்மூர்த்தியெந்தனுக்கு கடினசத்துருவாகினார்
பிரியமாயென்னை யீன்றகுந்தியும் பொருந்தவேசத்துருவாகினாள்
யெந்தனுக்குகந்தபாசுராமரும் யின்பமாய்சத்துருவாகினார்
விந்தையாகியயிந்திரதேவனும் விளங்கினானொருசத்துருவாய்
பூமிதேவியும்தீமையாகவே பொருந்தவேசத்துருவாகினாள்
காமதேனுவென்றகோவுமே யொருகடினசத்துருவாகிட
சத்துருவாகியஆறுபேரிட சாபம்வந்துமேநேர்ந்தபின்
பட்டபோர்களம்தன்னிலேயுந்தன் பாதமேகண்டேன்தரிசனம்.

கர்ணராஜன் சொல் வசனம்.

ஸ்ரீ வைகுண்ட வாசதேவமூர்த்தியே உம்முடைய பாததெரிசனம் கண்டபோதே நான் ஜென்ம சாபல்யமானேன் பின்னும் சேஷசயனாதனார் மாசமானபடியால் அடியேன் உத்ராயணகாலத்தில் வைகுண்டபதவியளிக்க வேண்டும் நமோ நாராயணமூர்த்தியே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாரும் கர்ணராஜனே சதாஸ்த்து நீ கேட்டபிரகாரம் எழுபிறப்படையும் நீக்கி வைகுண்டம் சேருவீரென்று அனுக்கிரகஞ்செய்து விஷ்ணு ரூபத்தை விட்டு கிருஷ்ணரூபம் கொண்டிருக்க பஞ்சபாண்டவர் காணவேண்டி குந்தியம்மன் வருகிற விதங்காண்க.

குந்தியம்மன் சொல் திபிதை.

சூரசேனராஜனீன்ற சொகுசான குந்தியம்மன்
சீருள்ளதோழியோடே செகதலம்மதிக்கயீன்ற
பேர்பெற்றமக்களைவர் பொருந்திடும்யுத்தம்பார்க்க
கூரமாய்வினையமுள்ள குருக்ஷேத்திரம் வருகின்றாளே.

## பொது வசனம்

இவ்விதமாக சூரசேனமகாராஜனுடைய குமாரத்தி குந்தியம்மன் தன் புத்திர சிகாமணியாகிய பஞ்சபாண்டவாகள் கர்ணனுடன் எதிர்த்து யுத்தஞ்செய்கிறதைப்பார்க்க வேணுமென்று குந்தியம்மன் குருக்ஷேத்திரம் வருகிறவிதங்காண்க.



## குந்தியம்மன் வருகிற தரு.

விந்தைபாய்குருக்ஷேத்திரம் — சிந்தனையறியவென்று
குந்தியம்மனும்வாராள் — மக்களைப்பார்க்க
குந்தியம்மனும்வாராள்
குந்தியம்மனும்வாராள் — கொடியப்படுகளத்தி
சிந்தனைமக்களுக்கு — னேர்ந்திடுமோவென்று (விந்)
மக்களுக்கென்னகெதி — வருமோஅரிவோமென்று
பக்குவமரியவே — பண்புடன்குந்தியம்மன் (விந்)

## கிருஷ்ணமூர்த்தி சொல் திபிதை.

குந்திமாதேவிகேளாய் குணவான்களைவருக்கும்
மூந்தியேபிறந்தகர்ணன் மொழிகளைச்சொல்வேன்கேளும்

விந்தையாய்விஜயனோடே வெகுண்டுமேயுத்தஞ்செய்து
அந்தமாய்ரதத்தின்மீதில் அமர்ந்துமேபடுத்தானம்மா.

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவர் பாண்டவர்களை அரியாமல் ரகசியமாய் குந்தியம்மனைப்பார்த்து உனக்குமுந்தி உற்பவித்த கர்ணராஜன் கர்ப்பகரத்தத்தில் மூர்ச்சையாகிறானென்று தப்புவசனமாய் கேழ்விப்பட்டு வந்தேன் நீ துருசாக படுகளம்சென்று பார்த்துவாருமம்மா குந்தியம்மனே.

குந்தியம்மன் சொல் இபிதை.

அரிவாசுதேவாநீரும் அருளியவசனங்கேட்க
வெரியுதேவைபறபத்தி யென்செய்வேன்மகனேயானும்
பிரியமாயீன்றவுன்னை போர்க்களமடியஅந்த
கரியமால்செயலோவென்று கதரியேபதறினளே.

இதுவுமது.

இரந்தாயோமகனேகர்ண வென்னநான்செய்வேனப்பா
மரந்தியோவெனக்குசொல்லும் மனதிடவுருதியெல்லாம்
பரந்தயோவெமன்பூமிக்கு பாரமாயிருக்கவைத்து
துரந்துமேபூமியாசை துடித்துமேமடிந்திட்டாயோ.

குந்தியம்மன்சொல் வசனம்.

ஐயய்யோ நான்யென்னசெய்குவேன் யென்வயத்தில் முந்தியுர்ப்பித்தோனாகிய கர்ணராஜனே உன்தம்பிமார்கள் விலாடபுரம் விட்டுவந்தவுடனே உன்விடுதிக்குவந்து நான்பாவியாகிய குந்திபெட்டியிலடக்கம்செய்து வைகையாற்றில்விட்டுவிட்டேமைந்தனென்று நானிருந்து உன் ரூபசவுந்தரியத்தை யென்பாவிகண்ணால் பார்க்கலாகாதென்று மனதாரஉன்னைபாராமல் வந்ததும்தவிர நீசொன்னவசனமாவது ஐவருக்கும் தமையனென்று சொல்லாமலிருக்க வரங்கேட்டதினால் மருபடியும் உன்னைப்பாராமல் யிந்தபடுகளத்தில் மூர்ச்சையடைந்தபின்பு பாவியாகிய யான் உன்முகம்பார்க்க விதியாச்சுதே மகனே.

குந்தியம்மன்சொல் தரு.

விதியோவிதியோ
ஜூயோவிதியோ

அடாமகனே

பாவியத்தில் பிரந்துமுன்றுயிர் பதரிக்கொடுத்தாயோ
ஓடிப்பார்த்துமே வந்துயிர்ந்திட வென்றுமடிந்தாயோ
கூவியழுவது சேனேஉன்செவி கேழ்க்கவில்லையோ
கொடும்பாவிநான்செய்தவினையது ஐயையோமகனே
செய்யாதவினைசெய்து பாவியுமாகிநின்றேன் தெய்வமேஉன்னை
செத்தபிறகுநான் வந்துமேபார்த்திட தீவினைகொண்டேனே
அய்யோஉன்முகம்பார்க்க மனமும்அலையுதே மகனே உந்தன்
அழகையெவருக் கொப்பிடலாமடா உருமைமகனே
கொடியப்பாவியன் அரியன் மொழியைக்குறித்து வந்தாயோ
யிந்தபடுகளத்தில் ரதத்தின்மீதில்நீயும் படுத்துநின்றாயோ
மடியவென்றுனைபாவி அரியனுமிப்போது மாளவிடுத்தானோ
மன்னவராயிந்த பூமியையாண்டிட மெண்ணியிருந்தானோ
அரிசிவன்மாலிட விதியதனாலே அமர்க்களம்சென்றாயோ
அண்ணன்சகோதரர் குண்ணிப்புலம்பிட அமரில்படுத்தாயோ
உரியவர்தம்பிமார்ஐவர்க்குமென்றுமேஉன்உயிரைக்கொடுத்தாயோ
அப்பாமகனேயுன்னை தெய்வம்கெடுத்ததோ அரியேனே

## குந்தியம்மன்சொல் சீசபத்தியம்.

மைந்தனேயுன்னைநான் மடிந்திடவென்றுமே
  மாபாவியானுமேமகிழ்ந்துநின்ரேன்
னிந்தனைஅரியனால் படுகளம்வந்துமே
  நேர்மையாய்ரதமீதில் சாய்ந்துநின்றாய்
முந்தியேபெற்றநான் பாவியுமாகியே
  மூர்ச்சையாயுமுடிசாய்ந்திருந்தாய்
ஐந்துபேர்மக்களால் மைந்தனேமடிந்தியோ
  அப்பனேகண்ணேயென் அழகுதுரையே

## குந்தியம்மன்சொல் திபிதை.

கன்னியென்தோழிமாரே கர்ணன்மைந்தனுக்கு
வண்ணமாய்சுவாசம்தானும் வருகுதுபாருமம்மா
அன்னைநான்கூவிகூவி அழுவதைகேட்டுமைந்தன்
யென்னமாயிருப்பாரம்மா யியலுடன்கூவிப்பாராய்.

குந்தமாதேவிசொல்வசனம்.

அடியம்மாதோழிமார்களே யென்மைந்தனுகிய கர்ணனுக்குசுவாசம் மயி ரிழைபோல் வருகுது நீங்களாவது கூப்பிடுங்களடி தோழிமார்களே,

தோழிமார்கள் சொல் வசனம்.

கூவிப்பார்த்தோமம்மா கர்ணமகாராஜன் யிறந்துவிட்டதைப்போல் கா ணுதேயம்மா யிவர் மைந்தனென்ற விபரம் யெனக்கு தெரியச்சொல்லவே ணுமம்மா தாயே,

குந்தமாதேவி சொல் தரு.

மாண்டுகிடக்கின்ற மைந்தனையும்பெற்ற
வரிசைகேளடி தோழியரே
ஆண்டவனைப்போல துருவாசரிஷி
ஐந்துஉபதேசம் செய்தாரடி
பூண்டமணிமந்ரம் ஐந்துவிலொன்றை
பொறிந்தயிளமையிலே வேண்டினேன்
சூரியன்வந்துயென்னை சேரவிளங்கினன்
சோதியாயுதித்தேனே யிந்தமைந்தன்
யெந்தன்குறையை யியம்பிடவும்வுயிர்
யெரியுதடியம்மா தோழிமாரே
யிந்தவுலகத்தில் மானிடர்யாவரும்
னிந்தனைசெய்வார்கள் யென்றும்யான்
அந்தமானபெட்டியில் மைந்தனைவைத்துமே
ஆதினில்விட்டேனே தோழிமாரே
நிந்தனைசெய்த கொடும்பாவியாகினேன்
நானிலத்திலிருக்கலாமோ தோழியரே
பாவிதுரியனிடம் பரதேசிபோல்வளர்ந்து
தேவியாய்விளங்கினள் பொன்னுருவியும்
மகனுமியிழந்திட யிழிகுலத்தானென்று
அரிவையுங்கூரிட மைந்தனுமே
தீவினைவந்து விளைந்துதேயென்று
திகைத்துமேமகளும் மனவேர்தாய்
தீதுகள்செய்யும் துரியனுக்குமகன்
செஞ்சோற்றுக்கடன் கழிக்கவுமே
வாதுபுரிந்திட வந்துமடிந்தனம்

மைந்தன்கிடப்பதை பாருமம்மா
முந்திபிறந்தவன் விந்தகெதியாகி
மூர்ச்சையடைந்ததை பாரடிநீ
யெந்தன்குறைகளை விந்தையாய்ச்சொல்கிறேன்
யின்னமுங்கேளடி தோழியரே
பாண்டுமகாராஜன் யெந்தனையுமாலை
யிட்டுதினமின்னுகத் தோழியரே
நீண்டகலைக்கோட்டு மகாரிஷிசாபத்தால்
நின்றுவிட்டாரென்னை சேராமலே
தாருவாசர்தந்த மந்திரம்நான்கையும்
தோத்திரம்நானென்றும் செய்தேனம்மா
பாரினில்யிவரை பெற்றுகாணித்த
பதமாயிருக்கின்ற நாளையிலே
மாலையிட்டமன்னன் மன்மதவிரகத்தால்
மந்திரவதிதன்னை சேர்ந்திடவும்
கலைக்கோட்டுமகாரிஷி சயாத்தினால்மன்னன்
கடுஞ்சினங்கொண்டுமே படிந்துவிட்டார்
அமங்கலியாகி குழந்தைகளும்நானும்
அத்திபுரம்வந்து சேர்ந்துவிட்டோம்
நமனைப்போலந்தகன் துரியனிருவரும்
நாடவொட்டாமலே சீறிவிட்டான்
திக்குகளில்லாதே மக்களும்நானுமாய்
திரிந்தோமே சிலகாலம்
பக்குவமாய்துரியன் வசனங்கொண்டுமக்கள்
ராஜ்ஜியமரசாண்டார் சிலகாலம்
நாடுவிட்டுமக்கள் வருஷம்பதிமூன்று
காட்டிலலையச்செய்தான் படுபாவி
சேடியரேயிந்த விதியாலலையவும்
செய்தானேபிரமன் அரியேனே

குந்தியம்மன் சொல் திபிதை.

மருகனைவிடாதேயென்று மகனைநான்சொன்னதாலே
விருப்பமாய்கோபங்கொண்டு விம்மியேயிருக்கின்றாயோ

கருத்தினில்தாய்போலன்பு கவனமாய்வைத்துநீயும்
தெரிவிப்பாய்மகனேகர்ணு சிந்தையில்வருத்தங்கொள்ளாய்.

குந்தியம்மன்சொல் வசனம்.

அடா என் புத்திரசிகாமணியாகிய கர்ணராஜனே நான் மருக்ஷணவிடவேண்டாமென்று தடைசெய்ததினுல் உனக்கு நேரிட்ட ஆபத்தினல் என்னுடன் பேசாமலிருக்கிறையோ மகனேயென்று குந்தமாதேவி துன்பப்பட்டுக்கொண் டிருக்கிறகாலத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவரை தர்மர் கேழ்க்கிறவிதங்காண்க.

தருமர் சொல் விருத்தம்.

இதுயென்ன ஆச்சரியம் கிருஷ்ணதேவா
இதுவென்ன விபரீத மரியவேணும்
கெதிகலங்கி யெனையீன்ற குந்தியம்மன்
கிட்டியந்த யிழிகுலத்தான் மேல்விழுந்து
விதிவசத்தால் யிறந்தையோ கர்ணுவென்று
விநோதமாய் சரித்திரங்க ளெல்லாம்சொல்லி
சதிசெய்யும் கர்ணன்மேல் விழுந்தழுத
சங்கதியை நீர்சொல்வீர் கரியமாலே.

தருமர்சொல் வசனம்.

கேளும் கர்ண நாடக குஸ்திரம் பொருந்திய கிருஷ்ணமூர்த்தியே எங்கள் தாயாராகிய குந்தியம்மன் எங்களுக்கு யெதிரியான இழிகுலத்தானென்கிற தேர்ப்பாகன் மீதில்விழுந்து பிரலாபிக்கிற விபரீத ஆச்சரியங்களை தெரியவசனிக்க வேணும் கிருஷ்ணதேவரே.

கிருஷ்ணமூர்த்தி சொல் வசனம்.

வாருமப்பா தர்மராஜனே உன் தாயாராகிய குந்தியம்மன் எதிரியாகயிருந்த கர்ணன்மேல் விழுந்து பிரலாபிக்கிற சத்தம் நானுங்கேழ்விப்பட்டேன் முந்தி பிறந்த மகனென்றும் கூவியழுகிறதை வாருப்போய் விசாரித்து வருவோம் தர்மராஜனே.

தர்மர்சொல் விருத்தம்.

யெனையீன்றகுந்திதாயே யிவ்விடம்சென்றுநீரும்
வினைகளைசஞ்சரித்து விழுந்திட்டாய்கர்ணன்மீது

ஜெனங்கொண்டுபிரலாபிக்கும் சேதியையின்னதென்று
மனம்விட்டுத்தெரியெனக்கு மாதாவேயுரைசெய்வாயே

தர்மர்சொல் வசனம்.

வாருமம்மாவென் மாதாவாகிய குந்தியம்மனே யென்னெதிரியாகிய துரியோதனனை சேர்ந்தயிழிகுலத்தான் மூர்ச்சையாய் கிடக்கிரதேர்ப்பாகன்மேல் விழுந்து பிரலாபிக்கிறவிதங்களை அடியேனுக்குத் தெரியும்படியாக சொல்லவேணுமம்மா தாயாராகிய குந்தியம்மனே.

குந்தியம்மன்சொல் இம்பை.

வெந்தனையும்லரிக்கியேசீர் யின்பமுடன்கேழ்க்கும்வகை
யியம்புகிறேன்கேளுமிப்போ யென்மகனே தர்ம்மா
மூர்த்தியெனக்கவதரித்த முடிதரிக்கும்கர்ணனிவன்
மூடபுத்தியால்மகனை பேழையில்நான்வைத்து
விந்தனையுமாச்சதென்று ஆற்றில்விடபெட்டியதாம்
சோரகனரியனிடம் சிக்கிவிடமகனே
வித்தையுடன்வளர்த்திவனை பெலிகொடுக்கபாவிகளும்
வீரியனுப்பவந்துயிரத பாரில்பிடித்தானே

தர்மர்சொல் திபிதை.

அரிவாசுதேவாயிர்த அன்னிதமுலகிலுண்டோ
பரிவுடன்கர்ணராஜன் படுகளமிறந்தபின்பு
உரியயெனதமையனென்று யொப்பாகவ்சனமப்பா
தெரியவும்உரைத்தாய்போதும் சிவசிவாவிதியின்வாரோ.

தர்மர்சொல் வசனம்.

அரிகரிவாசுதேவா யென்னையீன்றகுந்தியம்மன் துரியனை சேர்ந்தயிருந்த கர்ணமகாராஜன் குருக்ஷேத்திரத்தில்வந்து யெங்களால் மூர்ச்சையடைந்த பின்பு யெனக்குமுந்தி உர்ப்பத்தியானவனென்றும் முந்தியசொல்லாமல் யென்னவிதியால் யிப்பொழுது சொல்லவந்தாய் தாயேகுந்தியம்மனே.

குந்திதேவிசொல் தரு.

ஐயோமகன்பிறந்து பிறந்தகதைதனையீரும்
அரியனேனுமிடா அப்பா கண்மணியே அப்பா.

முர்த்திப்பிறந்தமகன் சூரியனிடத்தில்கர்ணன்
முகனையாயாசாக்ஷி செய்யுமாமென்றிட
சிந்தைமகிழ்ந்திருவர் சேதிதள்ளாமல்யானும்
சிவன்செயலிதுவென்று தேடிமகனைக்கண்டேன்
மாதாயிவள்தானென்று கர்ணனறிந்துமெந்தன்
மலர்ப்பாதம்தெண்டனிட்டான் கண்மணியே
யேதோவொருவசனம் பியம்பியிருவருமாய்
யிருக்கின்றவேளையிலே கண்மணியே அப்பா
யிரந்துமடிந்தகர்ணன் விழுந்ததின்பிற்பாடு
யிளையவரைவருக்கும் தெரியப்படுத்துமென்று
வசந்தாவேணுமென்றும் மகனும்மெனைவருந்த
வழங்காமல்வழங்காமல் நானிருந்தேன்.

தர்மர் சொல் விருத்தம்.

பொன்னடியை போற்றினேன் பெருவனிப்போ
பொருந்தவே யுன்னுருதி அறிந்தேனிப்போ
விண்ணமுடன் யெனையீன்ற குந்திதாயே
வரமெவர்க்கும் பிதுவென்று அறிந்துசொன்னீர்
யின்றுமுதல் பெண்டுகளும் மறிந்தசேதி
பியலாக யின்னொருவ ரறியவென்று
சொன்னமொழி யாவருக்கும் பொதுவாகத்தான்
சொகுசாக சாபம்வந்து சேர்ந்ததம்மா.

தர்மர் சொல் வசனம்.

கேளும் என் மாதாவாகிய குந்தியம்மனே கர்ணராஜன் தமையனென்று சொல்லாமல் நீ மனவுறுதியா யிருந்ததுபோல் பருவநார்கள் யாவரும் மனம் பொருந்தியிருக்கமாட்டார்கள் ஆனபடியால் பெண்டுகளறிந்த ரகசியம்பிறருக்கு யின்றுமுதல் வசனிக்கவென்று திருவுளம் செயப்படிக்கு சாபம்வந்து சேர்ந்ததம்மா குந்தியம்மனே

தர்மர் சொல் திபதை

சுக்ரீபன்கொடுமையாலே சொகுசானவாலிதன்னை
பக்குவமாகராமர் பாரினில்மடிந்தாப்போலே
விர்க்குணன்கையால்மாண்டு விழுந்திடசெய்தேயானும
அக்ரமம்சேய்தேயிந்த அபகீர்த்திமிகபெற்றேனே.

தர்மர் சொல் வசனம்.

கேளும் என் மாதாவாகிய குந்தியம்மனே மாதாசெய்தவினை மக்களுக்கே ருமென்ற பழமொழிப்படிக்கு உன்னால் யென் தமையனாகிய கர்ணமகா ராஜனை சுக்ரீபன் தன் தமையனாகிய வாலியைக் கொன்றுவிட்ட பாவனை போல் உடபிறப்பைகொன்றுவிட்டதுரோகியானேனம்மா குந்தியம்மனே.

தர்மர் சொல் தரு.

யெப்படிநானென்னசெய்வேன் யெப்போதுன்னுடன்பிறப்பேன்
யினியென்னசெய்குவேநான் அண்ணாவே
ஒப்புடனுடன்பிறந்த கர்ணனைகொன்றுரென்று
உலகம்நினைத்திடுமே அண்ணாவே
முப்பிறப்பில்செய்தவினை யிப்பிறப்பிலேவர்
மூண்டுகோணரியேன் அண்ணாவே
அப்பன்பிர்ம்மதேவன் அருளோநாமென்னசெய்வோம்
ஐவர்சத்துருவானோம் அண்ணாவே
பரசுராமரும்பெத்த தாயைவெட்டினாற்போல
பஞ்சபாண்டவர்நாங்கள் அண்ணாவே
துருசாய்தமையனுன்னை துணிபடசெய்துவிட்டோம்
துரோகிநாங்களேவர் அண்ணாவே
வீரபத்திரனிட தமையன்தனையிவர்
வெட்டியெரிந்தாற்போல அண்ணாவே
வேறுமனிதனென்று தெரியாமல்ஐவர்நாங்கள்
வேந்தனையுனைக்கொன்றோம் அண்ணாவே

தருமர் சொல் கொச்சகம்.

அத்திநகராண்டிருந்து அரவகொடிதுரியனுக்காய்
பத்தியெத்தனை அண்ணனையான் பாணத்தினால்மடியவென்று
சத்ராதியாயிருந்தேன் தமையனுயிர்போக்கிடவும்
இத்திசையில்பாவிகளாயிருந்துவிட்டேனம்மாயவனே.

தர்மர்சொல் திபிதை.

திருவுளசெயலின்வாரோ தெய்வமேஅரிகிலேலோமே
கருவினிலமைத்தவாரோ கானகமேகிவந்து
அருமையாயென்னுடன்பிறந்த அண்ணனைக்கொல்லவென்று
பிர்மனுர்விதித்தவாரோ பிழைவந்து சேர்ந்ததையா.

வசனம்.

அரிகரி நமோ நாரயணு வென்னுடன் பிறந்தோராகிய கர்ண ராஜனை யெதிர்த்து மூர்ச்சையடையும்படி செய்துவிட்ட அபிரமன லபியே அல்லது மாதா பிதுசெய்த தீவினையோ இந்தகொடியவினை யெவ்விதம் தீரும் பரம தயாநிதியே யென்று தர்மராஜர் பிரலாபிக் கிறவிதங்காண்க.

அர்ச்சுனன் சொல் திபிதை.

இவசிவாயென்னகீர்த்தி திருவுளச்செயலின்வாறோ
நவகோணமாண்டமன்னர் நகைக்கவேவுடலெடுத்தேன்
பாவியென்றாயால்வந்த பர்க்குணன்யென்னைச்சூழ்ந்து
கூவியேதமையன்மாண்ட கோலத்துக்கென்செய்வேன்.

வசனம்.

சிவசிவா என்னசெய்வேன் இதுவென்ன ஆச்சரியம் என்தா யாராகிய குந்தியம்மனுல் நவகண்டமும் ஆளாநின்ற ராஜாக்கள் நகைக்க யெங்கள் தமையனை மூர்ச்சையடையும்படி செய்துவிட் டேன் இந்த பாபம் எவ்விதமாய் தீலயும் அரிநமோ நாராயண மூர்த்தியே.

அர்ச்சுனன் சொல் தரு

ஐயனேநானென்னசெய்குவேன் விதிபின்வாரோ
ஆதியேநானென்னசெய்குவேன்
ஐயனேநானென்னசெய்குவேன் ஆயனுர்விதித்தவாரோ
வையகத்திலுள்ள மன்னர்கள்நகைப்பாரே (ஐய)
உடற்பிறப்போனென்றறியாமல் தமயனே
படுபாவிதுரியனுல் படுகளபிரந்தானே
வம்புவசனங்களால் வைதேனையறியாமல்
அம்பலமாகவுயிர் அடித்தேனே கணையினுல்
ஈனகுலத்தோனென்று யெண்ணினேனாண்ணனையும்
மானமொன்றில்லாமல் வைதேனே அண்ணனையும்

அர்ச்சுனன்சொல் திபிதை.

தேவகிமைந்தனுரேஉன் திருவிளசெயலாலேவர்
கோவதைசெய்தாற்போலே சொற்றவன்தமையனுரை
தீவிரமாகக்கொன்றோம் சிதரிடஐவர்நாங்கள்
பாவிகளானுமைய்யா பாரளந்தோனேபோற்றி.

அர்ச்சுனன்சொல் வசனம்.

கேளுமையா தேவகிமைந்தனுகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியே உன்னிடசெயலால் நாங்களைவரும் கோவதைசெய்தவர்கள்போலே கூடப்பிறந்ததமையனை கொன்றுவிட்ட பாவிகளுமாகிறேனுமையா கிருஷ்ணதேவரே.

பொது வசனம்.

வீமன்அர்ச்சுனன் வசனித்திருக்கிற காலத்திலேசகாதேவர் வருகிற விதங்காண்க.

சகாதேவன்சொல் விருத்தம்.

கொற்றவன்மைந்தனென்று குந்திமாதாயேநீரும்
உற்றதோர்மக்களோடே உரைத்திடலாகாதென்று
இத்தமும்உரிதியாகி ஜென்மத்திலடக்கம்செய்தாய்
பெத்ததாயுன்னைப்போலே பூமியிலெவருங்காணேன்.

சகாதேவன்சொல் வசனம்.

கேளும் யென்மாதாவாகிய குந்தியம்மனே அந்த கர்ணமகாராஜன் யெங்களுக்குத் தமயனென்று ஒரு வசனம் சொல்லாமல் தமயன் யிறந்துபோன பின்பு நாங்களறியவென்று கூவிபிரலாபிக்குறாயோ யிதற்கு நாங்கவென்ன செய்வோம் அம்மாகுந்தியம்மனே.

சகாதேவன் புலம்பல் தரு.

முராகரிமுகுந்தவர மொழியைக்கேட்டைவரையும்
மோசம்செல்தாயெந்தன் குந்தியம்மா
அரிகமோநாராயணர் அமைத்தவிதியிதுவோ
ஐவரும்பாவியானோம் குந்தியம்மா
தெய்வசெயலிதுவோ தெரியாமல்அண்ணனையும்
நிரேகமழியச்செய்தோம் குந்தியம்மா
மெய்மரந்திட அண்ணன் மேதினியோர்நகைக்க
மூண்டுதோபாபமுன்னால் குந்தியம்மா
சித்தமுரிதியாகி சேதிதெரிவிக்காமல்
செய்தாயெங்களைமோசம் குந்தியம்மா
பெற்றதாயெங்களுக்கு பொருந்தசத்துருவாகி
பிரமத்திருழவைத்தாய் குந்தியம்மா

சிராய்வனம்திரிந்து ஐவரிவ்விடம்வந்து
சேர்ந்ததுதெரியாமல் குந்தியம்மா
மடியப்படுகளத்தில் தமையனுயிரைபோக்கி
மயங்கிதியங்கவைத்தாய் குந்தியம்மா
மர்மம்சொல்லாமலெங்கள் அண்ணனுயிர்போக
மனதுதுணிந்திருந்தாய் குந்தியம்மா
தர்ம்மராஜரைப்போலே யிருக்குதேயிவர்முகம்
தமையனைப்பாருமெந்தன் குந்தியம்மா

சகாதேவர் சொல் திபிதை.

விதியினால்வருவதல்லால் வேறொன்றால்வருவதில்லை
சதிசெய்தாளென்றுமெத்த தாயின்மேல்கோபங்கொண்டு
மதிப்பிலாவசனம்சொல்லி மாதாவைதூஷணித்தால்
குதித்தோடிவந்து அண்ணன் குலையமாளுவாரோ.

சகாதேவர் சொல் வசனம்.

வாருமப்பா தருமராஜனே மாதாவை தூஷணிக்கலாகாது பிரமன்வயிப்படிக்கு நடந்துவிட்டால்யினி கூவிகூவி அழுதபோதிலும் அண்ணனாகிய கர்ணராஜர் உயிர்பெற்று அரசாக்ஷிசெய்யப்போகுவாரோ நகுலராஜனேயென்று வசனித்துக்கொண்டிருக்கிறகாலத்தில் தர்ம்மராஜன் சொல்லுகிற விதங் காண்க.

தர்மர் சொல் திபிதை.

ஆண்டாண்டுகோடிகாலம் அழுதுமேயிருந்தாலப்பா
மாண்டார்கள்வருவதுண்டோ மன்னர்கள்தம்பிமாரே
வேண்டாம்யென்வசனங்கொண்டு விசனத்தைவிட்டுநீங்கள்
நீண்டதோர்தமையனை நெரியுடனெடுத்துவாரும்.

தருமர் சொல் வசனம்.

வாருங்கள் தம்பிமார்களே மூர்ச்சையடைந்ததமையனை கர்ணராஜனைக்குறித்து யெத்தனைகாலம் விசனம்பட்டபோதிலும் யினிவந்து நம்மிடம் வசனிக்கப்போறாரோ அது தெரிந்திருந்தும் என் வீணாய் துக்கிக்கிறீர்கள் குருக்ஷேத்திரத்தைவிட்டு தமையனை யெடுத்துக்கொள்ளுங்கள் நம்மிட பாசறைக்கூடாரம் போய்சேருவோம் தம்பிமார்களே.

தர்மர் சொல் தரு.

தமயனை தூக்கியே கூடாரம்போகுவோம் — தம்பிமாரே
நமன்போலேசத்துருவாய் துரியன்நமக்கிருந்தான் — தம்பிமாரே
அமங்கலியாய்பொன்னி அழுதிடவும்செய்தான் — தம்பிமாரே
ஆவியிழந்திட செய்தானே அண்ணனை — தம்பிமாரே
குருக்ஷேத்திரம்விட்டு கூடாரப்போகுவோம் — தம்பிமாரே
வரிசையாகத் தூக்கி வாருங்கள் தமயனை — தம்பிமாரே
அண்ணனை கொண்டுபோய் அரசுசெய்வதுபோல — தம்பிமாரே
வண்ணமாய்முடிசூட்டி வைத்துப்பார்த்திடவேண்டும் — தம்பிமாரே
ஐவருங்கூடியே அண்ணன்திருவடிக்கு — தம்பிமாரே
செய்யும்பணிவிடைகள் செய்துகண்ணால்பார்ப்போம் — தம்பிமாரே
கவுரிசாமவரகளும் ஐவர்யெடுத்துநாம் — தம்பிமாரே
தமையன்முகம்பார்த்து விணையமூகலாச்சே. — தம்பிமாரே

தர்மர் சொல் திபிதை.

அண்ணாவேஐவர்நாங்கள் உன் அரும்பாதம்பூசைசெய்து
வண்ணமாய்முடிதரித்து வாகுமலைகளுமிட்டு
மன்னவருமக்குநாங்கள் மகிழவேகவரிவீச
பொன்னடிபோற்றிதாமே பூபதியரசேயண்ணா.

தர்மர் சொல் வசனம்.

எங்களண்ணாவாகிய கர்ணபூபனு உயிருடனே யிருக்கும்போது உபசாரஞ்செய்யாத பாவிகளானோமென்று அண்ணன் மூர்ச்சையடைந்தபின்பு முடிதரித்து கவரிசாமரை வீசி ஐவரும்உபசாரஞ்செய்து யிருக்கிரகாலத்தில் துரியோதிரன் வருகிரவிதங் காண்க.

படைத்தலைவர்கள் சொல் திபிதை.

கர்ணன் தன்சேனையெல்லாம் கடிகியேயோடிவந்து
துரியனைக்கண்டுகூவி தொழுதுமேபடையோரெல்லாம்
உரியவுன்னருகிருக்கும் ஒப்பானகர்ணராஜன்
கிரீடியின்கணையால்பட்டு சிவன்பாதம்சேர்ந்தானன்றே.

படைத்தலைவர் சொல் வசனம்.

கேளும் துரியோதனமகாராஜனே நம்மிட கர்ணமகாராஜன் ரீடி என்கிற அர்ச்சுனன் கணையால்பட்டு வைகுண்டபதம் சேர்த்துவிட்டாரய்யா துரியோதனமகாராஜனே.

துரியோதனன் சொல் விருத்தம்.

ஆருக்குமடங்காதென்ற அதிவீரக்கர்ணன் தன்னை
போருக்குள்மடியவைத்த புதுமையும்விடையன்செய்த
வாருக்குயென்னசெய்வோம் வகையுள்ளபடையேசோகம்
சேருக்குசோசய்போக கித்தனையாகுமண்ணு.

துரியோதனன் சொல் தரு.

மன்னவன்நீயென்று மகிழ்ந்தியாயிருந்தோமே — அண்ணுவே
மரணமடைந்துநீ படுகளம்சேர்ந்தாயோ — அண்ணுவே
உன்னுடன்கூடவே காலைபடுகளத்தில் — அண்ணுவே
ஒப்பாகசேர்ப்பார்கள் தப்பாது யென்னுயிர் — அண்ணுவே
அரசுமணிமுடியும் ஆண்டுமேயிருந்தாயே — கர்ணபூபா
அதிவீரனென்றுமே ஆங்காரங்கொண்டேனே — கர்ணபூபா
வரிசைகள் தப்பினுன் மாபாவியாகினேன் — கர்ணபூபா
வனம்விட்டவானரம்போல் தனியாகநின்றேனே — கர்ணபூபா
ஆனையின்பலங்கொண்ட ஆங்காரநேரமும் — கர்ணபூபா
அழிந்திடகாலமும் வந்துவிட்டதையோ — கர்ணபூபா
பூனைவாய்யெலியைப்போல் பொருந்தப்படுகளத்தில் — கர்ணபூபா
பூபதியேயுந்தன் உயிர்போகசெய்தாரே — கர்ணபூபா
வித்திசையுந்தனுல் மொழிவாகவண்டேனே — கர்ணபூபா
யீசனருளது யிப்படிவாய்த்ததோ — கர்ணபூபா
அத்தினகரமாசை ஆயனருளாலே — கர்ணபூபா
அம்பலமாகவே விட்டுவிட்டேனையோ — கர்ணபூபா

துரியோதனன் சொல் விருத்தம்.

யாதவன்செய்ததீங்கால் அமர்க்களம்தன்னில்கர்ணு
வேதனைபட்டுயிப்போ விழுந்தாயேபடுகளத்தில்

பாதகன்யெந்தன்பாபம் பத்தியேயுந்தனுக்கு
திருகள்வந்துசேர்ந்து சிவன்பதிசேர்த்திட்டாயோ.

துரியோதனன் சொல் வசனம்.

இந்த யாதவனாகிய கிருஷ்ணனிட கொடிய வினையால் ஆருக்கும் மடங்காத கர்ணராஜனே உன்னை இந்த குருக்ஷேத்திரத்தில் சிவன்பதி சேர்த்துவிட்டாயோவென்று துரியோதனன் யிரங்குவிட்டகர்ணனைத்தேடி அலையுரபோது படைத்தலைவர்கள் சொல்லுகிற விதங் காண்க.

படைத்தலைவர்கள் சொல் திபிந்த.

குந்தியின்மக்களுக்கு கொற்றவன்கர்ணன் தானும்
முந்தியேபிறந்த அண்ணன் மூர்ச்சையாய்விழுந்தானென்று
பந்தமாய்கர்ணன் தன்னை பாடியிலெடுத்துஐவர்
விக்னையாய்முடி தரித்து விளங்கினன்பாருமன்னா.

படைதலைவர்சொல் வசனம்.

கேளும்துரியோதன மகாராஜனே பஞ்சவர்கள் தங்களுக்கு முந்திபிறந்த தமயனென்று கர்ணராஜனையெடுத்து தங்கள் பாடிகூடாரத்தில் உட்கார வைத்து முடிசூட்டியிருக்கிறார் பாரும் துரியோதன மகாராஜனே.

துரியோதனன்சொல் தரு.

கர்ணன் பூபதியுந்தன்வலுமையால் அரசுசெய்து
காலங்கழித்தேன் சூரியகாளுமே
யிதுவரையில் திருதராஷ்ட்டிரன் மைந்தனென்றுமே
தீரனென்றுகானரசுமாண்டேன் கர்ணபூபதி
திரிச்சங்குமன்னனவன்சொர்க்கம்போலவே துரியனுனும்
திகம்பரமாய் நின்றுவிட்டேன்கர்ணபூபதி
அரவக்கொடியேனென்றுகானுமே யுந்தன்வலுமையால்
அத்தினகரை அரசுசெய்தனே
குக்குமம்சுமந்தகழுதைபோலவே வெரியனுனும்
கொற்றவனென்று அரசுமாண்டனே
பொங்கரவக்கொடியனுக்கலரச்சுதே யாதவனாலே

பூமியானையும்வெருத்துப்போச்சுதே
உடன்பிறந்தோர்தமையன்போலவே யிதுவரையிலும்
ஒப்பியரசுசெய்திருந்தமே
யிடையன்செய்தகொடுமையால்கர்ணு யிறந்தபின்பூ
வென்னைவிட்டை வரைசேர்த்துவிட்டிரோ

துரியன்சொல் திபிதை.

கர்ணநீர்செய்ததர்மம் கடினசத்துருவுமாகி
சொர்ணகள் தம்பிப்பாரில்சோர்ந்துமேவிழுந்துநீரும்
யென்னமாய்மூர்ச்சையாகி ரெணகளம்படுத்தாய்நீயும்
மன்னவன்யென்னசெய்வேன் மதியதுவிதியின்வாரே.

துரியோதனன்சொல் வசனம்.

அப்பா கர்ணமகாராஜனே நீர்செய்ததர்மம் உனக்குசத்துருவாயிருந்து மூர்ச்சையடைந்து உன் தம்பிமாரிடத்தில் வந்துசேர்ந்துவிட்டயே விஸ்வாமித்திரர்திருச்சங்குக்கு சொர்க்கம் தந்தார்ப்போலே என்னை அம்பலமாகவைவிட்டயோவென்று துரியோதனன் விசனப்பட்டிருக்கிரகாலத்தில் திருதாரஷ்ட்டிரன் வருகிறவிதங்காண்க.

திருதாரஷ்த்டிரன்வருகிற திபிதை.

அத்தியின்னகரைவிட்டு அதிவீரதிருதராஜன்
சித்தமும்மகிழ்ந்துகர்ணன் செய்திடியுத்தம்பார்க்க
மெத்தவுமகிழ்ஷியாகிமேவியோராஜன்தானும்
வித்தகன்பாதம்போற்றி விளங்கியசபையில்வந்தான்

திருதாரஷ்ட்டிரான்வருகிற வசனம்-

இவ்விதமாக அஸ்தினாபுரம் பரிபாலனம்செய்யாநின்ற கெடிசலாதிபதியாகிய திருதாரஷ்டிராமகாராஜனானவன் கர்ணமகாராஜன் பாண்டவர்களையெதிர்த்து யுத்தம்சேய்கிறதை தன்கண்ணினால் பார்க்கவேணுமென்று வருகிறவிதங்காண்க.

திருதாராட்டிரன் வருகிற தரு.

திருதராட்டியன்வந்தான் குருக்ஷேத்திரம்
திருதாராட்டிரன்வந்தான்

திருதராட்டிரன்வந்தான் சிரசில்முடி தரித்து
பிரியமுடன்கரத்தில் பெருத்தசெங்கோல்பிடித்து சுருள்
பேதகமாகவும் சூதுசெய்தவர்களை
வாதைப்படவும்வர வேதனைசெய்திடும் (திரு)
கலத்துப்புழுநீக்கின கர்ணன்சண்டையைப்பார்க்க
கெலிப்பாய்திருதராஜன் கேளிக்கையுடன்வந்து சுருள்
கவரிவெண்சாமரம் அருகினில்வீசிட
பிரியமுடன்பஞ்ச வாத்தியமுழங்கிட (திரு)

படைத்தலைவர் வசனம்.

நீங்களாரப்பா அய்யா கெடிஸ்தலாபதியாகிய திருதஷ்ராட்டிராமகாராஜனே சருணம் சருணம்.

திருதராட்டிரன் சொல் வசனம்.

நீங்களாரப்பா நாங்கள் தெரியாதோ கர்ணமகாராஜனுடைய படைத்தலைவரல்லவா அப்படியா மகாராஜனுயிருங்கள் படைத்தலைவாகளே.

திருதராட்டிரன் சொல் கவி.

நீண்டசகமும் வில்லினில் பூட்டியே
  கெரியுடன் கர்ணனு மெடுத்து
பாண்டுமன்னவன் யீன்றதோர்மக்களும்
  படைகளும் யின்றுடன் முடிவாய்
துண்டியேவிட பஞ்சவரைவரும்
  துடுக்கென பாரினில் மடிந்து
மசண்டசேதிசா ளரிந்திட படைகளே
  மங்களம் கூருவீரரிய

திருதராட்டிரன் சொல் வசனம்.

ஆ! ஆ! வாருங்கள் அதிவீரனாகிய கர்ணனிட படைத்தலைவர்களே நீங்கள் பஞ்சபாண்டவர்களை அதாகுதஞ்செய்து மூர்ச்சையடையும்படியாய் யுத்தஞ்செய்ததை நான் பரிபூரணமாய் பார்க்க கண்ணில்லாதவனாகினேன் ஆகிலும் கர்ணனிட நாகபாணம்

இருந்தபடியினால் யென்னிட மைந்தனாகிய துரியோதனன் அஸ்திநபுரமாளவும் நான் சந்தோஷமடைய லாச்சுது அந்தபாண்டு புத்திரரானவர் வசவாசம் யேகினப்படியில்லாமல் கர்ணனுடைய நாகபாணத்துக்கு யிரையாகும்படி வந்துவிட்டார்களே அந்த தாயோழிமகனாகிய பாண்டவருக்கு யென்னகெதி வந்து நேர்ந்தது பார்த்தீர்களா படைத்தலைவர்களே.

திருதாரட்டிரன் சொல் திபிதை.

படைத்தலைவீராந்த பலமுள்ள கர்ணனுக்கு
முடியபிஷேகம்தானும் முக்யமாய்செய்யவேணும்
சடுதியிலழைத்தவரும் சமர்செய்தகர்ணன்தன்னை
கடுகியேயோடிச்சென்று கர்ணனும்வருகவென்றே.

திருதராஷ்ட்டிரன்சொல் வசனம்.

வாருங்கள் படைத்தலைவர்களே அந்தகர்ணனைவளர்த்த அருமையான தானன் அந்தகனாயிருந்தபோதிலும் சதாயென்னைபிரியாமல் யென்கண்ணின்முன்னேநிற்கிறதுபோல் தோற்றமாகிறது பின்னும் கர்ணனுக்கு மகுடாபிஷேகம்சூட்டும்படியாய் யோசனைசெய்துயிருக்கிறேன் அதிகதுருசாக அழைத்து வாருங்கள்படைத்தலைவர்களே.

படைத்தலைவர்கள்சொல் திபிதை.

அய்யாவேயெங்களுக்கு ஆதாரவில்லாமற்றுன
துய்யனேவந்தோமிப்போ துன்பத்தைசொல்வேன்கேளும்
வையகம்பிரஷ்டாற்போலே வல்லவன்கர்ணராஜன்
மெய்சோர்ந்துமூர்ச்சையாகி மேவிநான்வைகுண்டத்தை.

படைத்தலைவர்சொல் வசனம்.

கேளும்திருதாரட்டிரமகாராஜனே நம்மிடகர்ணராஜனானவர் பதினேழாநாள் படுகளத்தில் அர்ச்சுனன்கணைப்பட்டு மூர்ச்சையாகி வைகுண்டம்சேர்ந்துவிட்டாரைய்யா திருதராஷ்ட்டிர மகாராஜனே.

திருதராஷ்ட்டிரன்சொல் தரு.

அஸ்திநபுரமெங்கும் ஆண்டோமேகர்ணனும் மகனே
கஸ்திகளாகிட கரியமால்சேர்ந்தானே மகனே

என்னைக்கெடுத்துகிருஷ்ணன் பின்னப்படசெய்தான் மகனே
மன்னனென்றமொழி யின்றுடன்போச்சுதே மகனே
அரவக்கொடியருந்து முரசக்கொடிவிளங்க மகனே
கலையமாலெடையனும் பிரியமுடனிருந்தான் மகனே
பாண்டுவென்புத்திரர் காண்டபனுல்கர்ணன் மகனே
மாண்டுமடிந்திருக்க மண்ணில்விழுந்தானே மகனே

திருதராஷ்ட்டிரன்சொல் வசனம்.

அடா அப்பா என் புத்திரசிகாமணியாகிய துரியோதனனு நியனே கிரேதாயுகத்தில் இராவணேஸ்வரனுக்கு ஸ்ரீராமஸ்வாமி சத்துருவாகினதுபோல துவாபரயுகத்தில் நம்ம அரவக்கொடியருத்து நம்மை அதம்செய்யவேணுமென்று யாத[illegible]ய கிருஷ்ணன் வந்து நேர்ந்திருக்குறான் அப்பா மகனே துரியோதனா.

திருதராஷ்ட்டிரன்சொல் தரு.

பெத்தபிள்ளைக்குமூத்த பெரியப்பிள்ளையாயுன்னை
பிரியமுடன்வளர்த்தேன் கண்மணியே
செத்துமடிந்தாயென்று சேதியரியவேதான்
ஜென்மமெடுத்திருந்தேன் கண்மணியே
குழந்தையாயிருக்கெந்தன் கலத்துபுழுக்கின
கர்ணனேயெந்தன் கண்மணியே
விழுந்துநீயென்களாசை யெப்படிதுணிந்தாயோ
யென்னனுன்செய்வேண்டா கண்மணியே
மல்லைப்போலவேயெண்ணி மகனும்துரியனுந்தான்
மகிழ்ச்சியாயிருந்தேனே கண்மணியே
அலையவிட்டுமகனை அம்பலமாகநீயும்
அமர்க்களமடிந்தாயோ கண்மணியே
அரவக்கொடியருந்து ஐவரும்குந்திமக்கள்
அஸ்த்தினபுரம்வந்து கண்மணியே
முரசக்கொடிவிளங்க செய்திடுவாரையோ
மோசம்செய்தியோஅப்பா கண்மணியே.

திருதராட்டிரன் சொல் திபிதை.

திக்கியெல்லாமற்றனே திகமாரமாகக்கர்ணை
மக்களை[illegible]றுவில்விட்டு மடியவேவாவந்தும்யும்

சிக்கினிலகப்பட்டுந்தன் ஜீவனைவிட்டுயிப்போ
பர்க்குணன்கணையால்பட்டு பாரினில்மடிந்திட்டாயோ.

## திருதராட்டிரன் சொல் வசனம்.

அடா அப்பா யென் கண்மணியாகிய கர்ணராஜனே யென்மைந்தனான துரியோதனனை தெருவில்விட்டுப் பிரிந்து வைகுண்டப்சேர்ந்துவிட்டாயோவென்று பிரலாபிக்கிறகாலத்திலே பொன்னுருவியம்மனுக்கு தோழிகள் சொல்லுகிறவிதங்காண்க.

## குந்தியம்மன் சொல் வசனம்.

அடியம்மா தோழி[illegible]களே யென் மருமகளாகிய பொன்னுருவியிடஞ்சென்று உன் கணவனுகிய கர்ணராஜன் மூர்ச்சையடைந்தாரென்று ஒரு வசனம் சொல்லிவாருமம்மா தோழிமார்களே.

## தோழிகள் சொல் இபிதை.

அன்னமேபொன்னித்தாயே யுன் அரும்பாதம்போற்றிபோற்றி
வண்ணமாய்ப்படிகளத்தில் வந்தயுன்னுதனை
மன்னவர்கர்ணராஜன் மகிழ்ந்திடயுத்தம்செய்து
பின்னமாய்மூர்ச்சையாகி பொருந்தியேபாரில்வீழ்ந்தார்.

## பொன்னுருவி சொல் இபிதை.

அய்யய்யோயென்தனுதன் அமர்செய்துமடிந்தரோதான்
தையலென்வயருபத்தி தனலாகவெரியுதம்மா
வையகமென்னைப்போலே மாபாவியொருவருண்டோ
தெய்வத்தின்செயலால்நாதன் சிவபதிசேர்ந்திட்டாரே.

## பொன்னுருவி புலம்பல் தரு.

அய்யோநானென்னசெய்வேன் யென்பிராணநாதர்க்கு
அயனுர்விதித்தவாறோ நாசரியேன்
தெய்வச்செயலிதுவோ தோழியரேயம்மா
சிவன்செயலிதுதானோ நாசரியேன்
யென்தன்விதிவசத்தை தோழியரேயம்மா
யெழுதினுலடங்காது பாங்கியரே

குந்தியின்மைந்தனென்று அரியாமல்பாவியானும்
குலயீனனென்றவனை தூஷணித்தேன்
தேர்ப்பாகன்தேவியென்று அழைப்பார்களென்றுயானும்
தெருவீதிவரந்தறியேன் தோழியரே
சீராகமாலையிட்ட கணவனைதூஷணித்து
தெருவில்பரதேசியாய் நின்றுவிட்டேன்
கொண்டகணவனையும் மதியாமலிருந்தயான்
கொடும்பாவியாகிநின்றேன் தோழியரே
முண்டையிவளென்றுமே பெண்டுகள்நகைக்கவும்
முந்தியிரந்துவிட்டார் யென்கணவன்.

பொன்னுருவிசொல்[illegible]தை.

குருக்ஷேத்திரமெங்குந்தேடி கொற்றவன்காணேனென்று
கர்ப்பகத்தே[illegible]கிட்டி கடிதேயேவந்துபார்த்து
முற்றிலும்ஐவர்ப[illegible] முழுதுமேதுயரங்கொண்டு
சற்றுமேவுயிரில்லாத கர்ணன்மேல்விழுந்திட்டாளே.

பொன்னுருவி புலம்பல் தரு.

ஐயையோ சுவாமிகா னவதிப்படவென்று
அமரில்மடிந்திடவோ வந்து சமரும்புரிந்தீரோ
தையல்விடைபெற்று சந்தோஷமாகவீர்
தங்கிப்படுத்தாயோ மண்ணில் மங்கிமடிந்தாயே
இன்னவயதினில் மாலையிட்டமுதல்
சிந்தைவருந்தீரோ மனம் நொந்துபடுத்தீரோ
வண்ணமுடனிச்சை யில்லாதிருவரும்
கொந்துஅலைந்திடவோ பிர்மன் விந்தனைதானிதுவோ
மாலைதரித்தநாள் சுவாமிகாணுந்தனை
மதியாதிருந்தேனே இந்த கெதியாகிநின்றேனே
சூலம்தரித்திடும் சோமசுந்தரமூர்த்தி
சோதனைதானிதுவோ வந்த வேதனைநானறியேன்
பாவியென்தன்முகம் பார்க்கலாகாதென்று
படுகளம்வந்திரோ வந்து ரணக்களமானீரோ
ஆவியழிந்திட தேவிபுலம்பிட

அமரில்மடிந்தீரோ வந்து சமரும்புரிந்தீரோ
யெந்தன் வினையது சத்துருவாகிட
நிந்தனையாகவுமே வந்து னேர்ந்ததுக்கென்செய்வேன்
சிந்தைவெருப்பாய்நீ சிதறிப்படுகளம்
வந்துமடிந்தீரோ மனம் னொந்துயிரந்தீரோ
திங்களைப்போல்முகம் ஜொலிக்குதுபாரடி
மங்கையடிதோழி மன்னன்முகம்பாரும்
பொங்கரவக்கொடி துரியனல்சுவாமியும்
போரிந்திபடுகளத்தில் யிறந்துமடிந்தாரோ
பஞ்சவரைவர்கள் கையினுலுன்னுயிர்
பரந்துபோகவோவந்து சிறந்துகூடினீர்
தஞ்சமென்றவரும் கொஞ்சியுபசாரம்
வஞ்சமுடையோர்வந்து கொஞ்சிவருந்துகிறீர்
அடியற்றுவீழ்ந்திடும் பனையதுபோலவே
முடியற்றுவீழ்ந்திரோ மடிவும்வந்தீரோ
மடிந்துயிரந்தபின் மன்னவரைவரும்
மகிழ்ந்துயிருந்தாரோ உன்னை சிரந்துப்புகழ்ந்தாரோ

பொன்னுருவிசொல் திபிதை.

பஞ்சபாதகரேயுங்கள் பகையினல்படுகளத்தில்
கொஞ்சமும்பிதகமில்லாமல் கொத்தவன்னைவனுரே
வஞ்சகத்துரியனுலே வைகுண்டம்சேரவென்று
அஞ்சலாய்பாணம்விட்டு அம்பலட்செய்திட்டீரே.

பொன்னுருவிசொல் வசனம்.

என் மைத்துனராகிய ஐவர்களே உங்களுக்குள்ளே என்ன பகையிருந்தபோதிலும் என் பிராணநாதனை மூர்ச்சையாகும்படி செய்து என்னை அமங்கலியாக்கி விட்டீர்களே யென் மைத்துனராகிய ஐவர்களே.

தர்மர் சொல் தரு.

உடன்பிறந்தோரென்று அரியாமலைவரும் அண்ணியரே
மடத்தனமாய்புத்தி மதிகெட்டுபோனேமே அண்ணியரே

கடைகெட்ட துரியனால் கர்ணன் தமையன்தன்னை அண்ணியரே
மடிப்படசெய்தஐவர் மாபாபியானோமே அண்ணியரே

பொன்னுருவி சொல் தரு.

மாமிகுந்தியம்மன் மகனென்றறிவாளே ஐவர்களே
தீமைகள்செய்தென்னை தெருவில்விட்டீர்களே ஐவர்களே
சோமனைதவித்தவா மகனும்விதவையாக ஐவர்களே
காமனையெரித்தாற்போல் யென்கணவனைகொய்தீரே ஐவர்களே

தர்மர்சொல் தரு.

பெத்தப்புதல்வன் கர்ணனென்றெண்ணாமல் அண்ணியரே
உத்தவசனமது சொல்லாமல் குந்தியும் அண்ணியரே
சத்துருவாய்பெற்ற தாயவள்கோர்ந்தாளே அண்ணியரே
மெத்தக்கொடும்பாவமாகினோமைவரும் அண்ணியரே

பொன்னுருவி சொல் தரு.

ஐந்துவயதுமுதல் அலையத்தலைவிரித்தேன் ஐவர்களே
மைந்தனும்நானுமாய் யெந்தயிடம்செல்வோம் ஐவர்களே
யென்சிந்தைகலங்கினேன் திகைத்திடவாச்சுதே ஐவர்களே
யெந்தன்கணவனை யெப்போது காண்பனோ ஐவர்களே

பொன்னுருவிசொல் சீசபத்தியம்.

நஞ்சரவக்கொடியனும் மன்னவன்மாளவே
நமனாகவேயிருந்தான்
நாயகர்க்குப்பஞ்சபாதகர் நீங்கள் மைத்துனர்களே
யென்பத்தாவை மடியவுப்படுகளத்தில்
கொஞ்சமாகிலுமுங்கள் தமையனென்றெண்ணாதே
கொடியவினைசெய்துமே யிச்கோலங்கொண்டீர்
அஞ்சாமலென்னிட ஆளனுயிர்போக்கியே
அமங்கலியாகியே அலையவிட்டீர்.

தர்மர்சொல் திபிதை.

பிரம்மனார்செயலில்லாமல் பின்னொன்றும்வருவதில்லை
சிரியவரைவர்நாங்கள் சிந்தனைவரவொட்டாமல்

பெரியவர்தேவியென்று போற்றியேயுந்தனுக்கு
தருபருங்காணிருக்கஅண்ணி தாபக்கியப்படவும்வேண்டாம்.

தர்மர்சொல் வசனம்.

வாருமம்மா என் தமையனை கர்ணபூபதியினுடைய தேவியாகிய எங்களையீன்ற தாயிக்குசமதையான பொன்னுருவியம்மனே பிரமன் லிபிப்படிக்கு நடந்துபோன சங்கதியைக்குறித்து அங்கலாய்க்கவேண்டாம் நாங்களைவரும் யிருக்கிறவரையிலும் உனக்கொருகுறைவு வரமாட்டாது என்று வசனித்திருக்கிற காலத்தில் விஸ்வகேது வருகிறவிதங்காண்க.

விஸ்வகேதுசொல் விருத்தம்.

பதினேழானாளினில்விடியகாலம்
பரிதியின்புதல்வன்மைந்தன் விஸ்வகேது
பதிமயங்கிநித்திரையும்செய்தெழுந்து
மாதாவைத்தேடியெங்கும் காணோமென்று
விதிப்பபனை அரியாயலெங்குந்தேடி
தேடிவிசாரித்துதந்தையிடம்விஸ்வகேது
கெதிகலங்கிதாவையுமேகண்டுமைந்தன்
கிட்டியவர்மேல்விழுந்துகூவினனே.

விஸ்வகேதுசொல் தரு

பார்க்கமுகங்கள் பாலுமொழுகுதையோ தந்தையரே
தீர்க்கமுடையஐவர் யெப்படிகொன்றுவிட்டார் தந்தையரே
சிரியவயதிலெனனை தெருவினில்விட்டீரோ தந்தையரே
அரவக்கொடியோனால் அமர்க்களம்சென்றீரோ தந்தையரே
தந்தையுருவதும்போல் தையல்விடைபெற்று தந்தையரே
சிந்தமனவெறுப்பாய் சிவன்பதிசேர்ந்தீரோ தந்தையரே
யிந்தகெதிவரவும் யெவர்செய்தாருந்தனுக்கு தந்தையரே
மைந்தனும்தாயுமாய் யெந்தவிதம்பிழைப்போம் தந்தையரே

விஸ்வகேதுசொல் திபதை.

யென்தனையீன்றதாயேயினியென்ன செய்வோமம்மா
யுந்தனுலெந்தன்தந்தை யுயிரிழந்தாரோவம்மா

பந்தமாய்விஜயன்விட்டபாணத்தால் யிறந்திட்டாரோ
விந்தையாய்ஐவர்பாடிவிளங்கின விபரமென்ன.

விஸ்வகேதுசொல் கொண்டிச்சிந்து.

படுகளம்விழுந்திறந்த - தந்தையை - பாரினிலவர்களும்பாடி
ல்சேர்த்து - முடியுடனலங்கரித்து - ஐவர்கள் - முனைந்துபணியு
மருவிபரமதை - அன்னையேநீயெனக்கு - யெந்தன்அப்பன்முா
யதை ஒப்புடன்சொல்வீர் - சின்னம்சிறியனுக்கு - விபாம் -
யுரைத்திடவும் நேராய்சொன்னேன் தந்தினம்தனனம்.

விஸ்வகேதுசொல திபிதை.

னிந்தனையான அந்த நெரியுள்ளவிஜயநம்மா...
தந்தையுமிறந்துஅந்த சமரினில்மடிந்தோர்தன்னை
விந்தையாய்ஐவர்பாடி விளங்கினவிபரம்நன்றாய்
யெந்தனுக்கரிய... ...யப்புவீர்யெந்தன்மாதே

விஸ்வகேதுசொல்வசனம்.

வாருமம்மா யென்னையீன்ற மாதாவாகிய பொன்னியம்மனே அந்தபாண்டுபுத்திரராகிய காண்டீபனுடைய கணைபட்டு மூர்ச்சையாகி குருக்ஷேத்திரத்தில் யிருந்தயென் தந்தையை ஐவர்பாடிகூடாரத்தில் முடிசூட்டி வைத்திருக்கிற விபாம் தெரிவிக்கவேணுமம்மா யென்தாயே.

பொன்னுருவிசொல் திபிதை.

தந்தையோடுப்பிறந்த தம்பிமார்ஐவர்தாமும்
யெந்தனைமாலையிட்ட யென்பெருமானுக்கைவர்
சிந்தனையாகபாணம் நேர்ந்திடயுந்தன்தந்தை
விந்தையாய்மடிந்துபாரில் விழுந்திட்டார்மூர்ச்சையாக்

பொன்னுருவிசொல் வசனம்.

கேளுமப்பாயென் புத்திரசிகாமணியாகிய விஸ்வகேதுவேயென்னிட மாமியாகிய குந்தியம்மன் யிளமையில் சூரியபகவானைசேர்ந்து யுன்னிட பிதாவை பிரசவித்ததாகவும் உலகநிந்தனையாகுமென்று பெட்டியில் அடக்கம்செய்து ஆற்றுநீரில் விட்டுவிடவும் அஸ்தினாபுரத்துக்குவா தேர்ப்பாகனென்கிற சூதபுங்கவிடத்தில் வளர்

ந்தபின்பு துரியோதனன் சமருக்கு அனுப்பிவைக்க உன்தந்தையானவர் யுத்தகளத்தில் விஜயனென்கிற அர்ச்சுனன் காண்டீபத்துக்கு யிரையாய்விட அப்போது குந்தியம்மன் தன்மூத்தகுமாரன் யிறந்துவிட்டானென்றுபுலம்ப அப்போது ஐவராஜாக்களுக்கும் கர்ணன் மூத்ததமையனென்று குந்தியம்மனால் தெரிந்து புலம்பி தன்தமையனென்று யின்னாள்வரைக்கும் தெரியாமல்போய்விட்டதென்று பிரலாபித்து யெடுத்துக்கொண்டுபோய் பாடிகூடாரத்தில் முடிசூட்டிவைத்திருக்கிறார்களப்பா குமாரகா.

விஸ்வகேதுசொல் தரு.

அப்பாயென்தந்தையரே யென்னைவிட்டு யெப்படிநீமடிந்தாய்
யிப்புவிதன்னிலேதான் யிறந்திட ஒப்புடன்தந்தையரே
கர்ப்பனைகேட்டுமையா துரியன் சொற்படியேயிருந்தாய்
சர்ப்பக்கணையுனக்கு தப்பி அர்ப்பமாய்போய்விட்டதோ
கொடியதுரியனாலே படுகளம் மடியவிதியுனக்கோ
அடியற்றமரம்போல பாரில் முடியற்றுவிழுந்திட்டதே
தந்தைபரிகொடுத்தே நின்றிட யெந்தனைவிட்டுரையா
யிந்தவிதியெனக்கு பிர்மன் லெழுதினநிந்தனையோ.

விஸ்வகேதுசொல் சீசபத்தியம்.

தந்தையுமில்லாதபாவியும் நானாகியே
தயங்கினேன்தவிக்கவுமாகினேன்
யெந்தனைவிட்டுநீர் யெப்படிமடிந்தீரோ
யினியென்னசெய்குவேன்யிப்பாரனுன்
ஐந்துபேர்கூடியேயென் தந்தையைக்கொன்றுமே
அரசாளவென்றார் அலையவிட்டீர்
மைந்தனானென்செய்வேன் சிறியயென்தந்தையே
மயங்கியேதவிக்கவும் வைத்துவிட்டீர்.

விஸ்வகேது சொல் தரு.

ஐயய்யோயென்செய்வேன் தந்தையரே
அநியாயமிப்படி செய்யலாமோ
மையவேநீங்களும் கிருபைகூர்ந்து
பாலனைகார்ப்பதுங்கள் கிருபைதானே

தருமர்சொல் கவி.

செங்கதிரோன் மன்னனுக்கு மகனுய்வந்த
செல்வமே யென்மகனே கண்ணேவாடா
பொங்கரவ வொடியுடைய துரியன்செய்த
பொல்லாங்கால் யிவ்விதிகள் விளைந்ததப்பா
யெங்களுடன் பிறந்தஅண்ணன் யின்றமைந்தா
யிபலாக அஸ்தினு புரத்தைநீயும்
மங்களமா யரசுயிக செய்துநன்ருய்
மன்னவனுயிருப்பாய் நீ விஸ்வகேதா.

தர்மர் சொல் வசனம்.

வாருமப்பா விஸ்வகேது அரவக்கொடியுடைய துரியோதன
னால் யிப்பேற்கொற்ற வினைவந்து சேர்ந்துவிட்டது யினி விசனப்ப
டவேண்டாம் யென் புத்திரசிகாமணியாகிய விஸ்வகேதுவே.

விஸ்வகேது சொல் தரு.

பெற்றதந்தையையர்ச்சை — செய்திடவுமையா
மெத்தத்துணிந்துவிட்டீர் — சித்தப்பரே
உத்தப்பங்காளியின்னம் — உயர்ந்தபெரியோரெல்லாம்
யித்திசைமாறவே — சித்தப்பரே
உந்தன்மனதின்படி — துரியன்படைகளெல்லாம்
விக்கையாய்செய்தாய் — சித்தப்பரே
சிக்கையுறுதியாகி — சேனைதனங்களெல்லாம்
ஸிக்கினைசெய்துவிட்டீர் — சித்தப்பரே
மண்ணும்மனைசதமாய் — யெண்ணிதுரியனவன்
யென்னகெதியடைந்தான் — மன்னவரே
பின்னப்படவுமந்த — துரியன்படைகளெல்லாம்
மண்ணில்மடிந்துவிட்டார் — மன்னர்களே
திங்கள்குலம்விளங்க — கால்பலமில்லையோ
யெங்கும்பிணங்களாச்சே — சங்கரனே
பொங்குமரவக்கொடி — காளைபடிகளத்தில்
தொங்கியெரிந்திடுமோ — சங்கரனே.

தர்மர் சொல் வசனம்.

வாருமப்பா யென் புத்திரசிகாமணியாகிய விஸ்வகேதுவே
ரெங்கள் யாவரும் உனக்கு அரசாக்ஷிசெய்துவைத்து சந்தோஷ
மாய் பார்க்க நினைத்துயிருக்கிறேமப்பா விஸ்வகேதுவே.

தர்மர் சொல் தரு

துரியன்கொடுமையப்பா துடர்ந்துசத்துருவாகி
உரியத்தமையனையும் பரிகொடுத்தோம்
அரிபிர்மன்தேவன்விதி அரியாமலண்ணனை
துரியன்பிரியங்கொண்டு உயிரிழுத்தார்
மைந்தனேவில்வகேது மகனேயென்கண்மணியே
குந்திமைந்தர்களாங்கள் ஐந்துபேரும்
விந்தனைக்காகவும் நெருங்கியசேனையெல்லாம்
வித்தையாய்மடிக்கவே துணிந்[illegible]யா
கண்ணின்மணியேயப்பா கருத்[illegible]னாவில்வகேதா
யென்ன[illegible]டியுரைத்தாய் கின்னமாய்
முன்னேயயனமைத்த முறைமை[illegible]செகிடுமோ
யென்னைநாசமிக்கவேண்[illegible] கண்மணியே
கேசவன்றுதுமாக கிட்டியேசுத்திசென்று
நேசமுடனேசுத்த ர்ஜுன் துரியன்தன்னை
யீசன்செயலதுவும் யின்னம்பொருக்குமோ
ஆசைக்கொண்டவரெல்லாம் நாசமடைகுவரோ
வாசமுடனேஜந்து விடுதிதருகென்று
வணங்கமகனேயிந்த கெதிவந்துசேர்ந்ததடா

தர்ம சொல் தரு

மைந்தனேயெந்தன் வில்வனேகேளாடா
ஐந்துபேருனக் காகத்துமே
பந்தமாய்வெகு விந்தையாய்சூடி
தந்துமேயிந்த தரணியாண்டிட
சிந்தைமகிழுயான் உந்தன்சிரசினில்,
ஐந்துபேர்களும் அரசுதந்திட,
சிறுவனேவில்வ கேதுடனக்குகான
துரியனவாழுமனை நேமாகவே
பிரியமாகவும் அரசளித்திட
செரியதாய்வெகு அரசுஆண்டுமி
வரிசையாகிய முரசக்கொடியுடன்
கரியமாலவர் பிரியமாகவே.

பொது வசனம்.

இவ்விதமாக தணிக்கைசொல்லிவிட்டு பொன்னுருவி தாயார் வீட்டுக்கு தர்ம்மராஜர் தெரியப்படுத்துகிற விதங்காண்க.

படைத்தலைவர் திபிதை.

பொன்னியராஜமன்னு பூபதியரசேபோற்றி
வண்ணமாய்குந்தியீன்ற வகையுள்ளகர்ணராஜன்
மன்னவரைவர்பாடி உன்மருமகன்மூர்ச்சையாகி
மின்னமாய்பாரில்வீழ்ந்து பொருந்தியேகர்ணன்மாண்டான்.

படைத்தலைவர் சொல் வசனம்.

சருணம் சருணமையா பொன்னுருவிராஜனே குந்திமாதேவிக்கு மூத்திபிரந்த யுன் மருமகனாகிய கர்ணராஜன் ஐவரிட போர்க்கூடாரத்தில் மூர்ச்சையடைந்தாரென்று தங்களுக்கு தெரிவிக்கும்படியாய் அனுப்பிவைத்தாரென்று சொல்லவும் பொன்னுருவிராஜன் மனவி விசனப்பட்டு வரிசைநடத்துகிறவிதங் காண்க.

பொன்னுருவிராஜன் மனைவி சொல் தரு.

பொன்னியராஜன்மன்னன்மக்களுக்கு பொருந்தவரிசை தந்திடவும்
சின்னவயதினிலே மகளும் தேர்ப்பாகன்தேவியுமேனுன்
வர்ணப்பசக்கிளிக்கு வேண்டும் வரிசைகொடாதென்றபாவியானேம்
யீனகுலத்தோனென்று மகளும் யிருந்தாளேகன்னிகையாக
குந்தியின்மைந்தனென்று அரியவும் குமுருதம்மா அடிவயற்றை
யிக்தகெதியாகவும்பிர்மன் பெழுதிவரவிட்டானுந்தனுக்கு
சிந்தைதளர்ந்திருவர் மகளிடசேதியரியவும்விதவிதமாய்
வித்தையுடன்வரிசை மகளுக்கு வேணதெல்லாமெடுத்தேன்
சுமங்கலியாயிருக்க பணிதி கூடாதபாபிகளாயிருக்க
அமங்கலியானபின்பு வரிசை அளித்திடகாலமும்நேர்ந்ததம்மா
பாம்புக்கொடியோனும் உந்தன் பத்தாவுக்கேயவன்சத்துருவாய்
சிமைகளுந்தனுக்கு கோரியே துரியனவன்செய்துவிட்டான்
மாலைமணி திகளும்வரிசை வண்மையுடனேயான்கொண்டுவந்தேன்
சேலைகதம்பப்பொடி மகளும் சிவிவிடும்சிப்புகள்சவுரியுடன்
காலைவிலேகுளிக்க மகளும் கஸ்தூரிமஞ்சள்சிகப்புடனே

பாருமகாக்கவுமேபசும்பொன்னுல்யாத்திரமுங்காண்கொடுத்தேனே
கனத்தபசுமாடுகள் வரிசை காலணை அருகனோட்டிவந்தேன்
வனத்தில்பசுமேய்க்க ஒரு வல்லவிடையனைகூட்டிவிட்டேன்
பணத்திலொருகோடிநல்ல பசும்பொன்னுல் யோருக்குள்ளுங்கொடுத்தேன்
நினைத்தபடிநடத்த ஒரு தோழிசேயித்துவைத்தேன்.
திங்கள்குலத்தோனென்று மன்னன் சேதியநீங்குகானுந்தனுக்கு
மங்களமாகவேதான் வரிசை யெடுத்துநான்வந்தேனே
சங்கையைவிட்டுவிடு அம்மா தவறுதலொன்றுமேயில்லை
பங்காளிருவரையும் சேர்ந்து பாலித்துவாழ்வீர்குவருமாய்

பொது விருத்தம்.

மன்னவரும் பொன்விய ராஜனின்ற
மன்னதனக்கு வரிசையது கொடுக்கநன்றாய்
பொன்னுபொருள் ஆபரணம் சேலைமாலை
புகழுடைய வரிசைகளை பார்க்கவென்று
விண்ணுலக மேவுகின்ற பருதிதானும்
விளங்கின்ற மருமகள்தன் வரிசைதன்னை
கண்ணினல் பார்க்கவுமே கதிரோனுந்தான்
கருங்கடலைக் கண்டுமே உதையமானர்.

பொது வசனம்

சூரியனிட குமாரனுகிய கர்ணமகாராஜன் தேவியான பொன்னுருவியம்மனுக்கு தாய்வீட்டுவரிசைகொடுத்த வைபோக ஆச்சரியங்களை பார்க்கப்பிரியமாய் ஆனந்தசந்தோஷத்துடனே கிழக்குதிசையில் பிரிதியென்கிர சூரியநுதயமனுர் சபையோர்களே.

மங்களம்.

மங்களம் ஜெயமங்களம் நித்யசுபமாகிய மங்களம்.

கர்ணமோக்ஷ நாடகம்

முற்றிற்று.

118120
N10